# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 14 சனிக்கிழமை (28-06-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 4

# மேலும் துருப்புக்கள் பெரியமடுவில் குவிப்பு!

## படை நடவடிக்கை தொடரும்என அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதல் நடவடிக்கையையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் சீர்குலைந்துள்ள பெரிய மடுப்பகுதிக்கு புதிதாகத் துருப்புக்கள் அனுப்பப்பட்டுவருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

புலிகளின் எத்தகைய தாக்குதல்கள் இடம் பெற்றாலும் படை நடவடிக்கை தொடரும் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

போர் முனையில் படையினர் சந்தித்த பின்னடைவுகளை சீர்செய்யும் வகையில் தாண்டிக்குளம், ஓமந்தை, புளியங்குளம் பகுதிகளுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் பணியில் படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு - அம்பாறையில் மோதல் சம்பவங்கள்!

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நேற்றும், நேற்று முன்தினமும் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியான மகாவலி 'சி' பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு ஊர்காவலர்கள் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை மக்கள் வங்கிக்கு அருகில் பொலீஸாருக்கும், புலிகளுக்கும் இடையில் நேற்று நடந்த மோதலில் ஊர்காவலர் ஒருவர் காயமடைந்தார். மோதலின் இடையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளத்துக்கு தெற்கே நேற்றுக்காலையில்சண்டை

### புலிகள் தரப்பில் அறிவிப்பு

வவுனியா ஜூன் 28

புளியங்குளத்துக்கு தெற்கே ஒருகிலோ மீற்றர் தொலைவில் தரித்துள்ள படையினர் நேற்றுக்காலை 10 மணியளவில் வடக்கு நோக்கி முன்னேற முயன்றதாகவும்-

தாம் எதிர்த் தாக்குதல் நடத்தி படையினரைப் பின்வாங்கச் செய்து பழைய நிலைகளுக்கு அனுப்பியதாகவும்- 'புலிகளின்குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் இறந்ததாகவும்-

தமது தரப்பில் மேஜர் ரங்கன் (தவராசா சௌந்தரநாயகம் முள்ளியவளை) களப்பலியானதாகவும், - புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக் கரையோரம் நோக்கி புலிகளின் ஆயுதக் கப்பல்!

கொழும்பு, ஜூன் 28

வெளிநாடு ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகிப்பதற்காக கிழக்குக் கடற்கரையை நோக்கி கப்பல் ஒன்று வந்துகொண்டிருப்பதாகக் கிடைத்த உளவுத் தகவல் ஒன்றை அடுத்து கிழக்குக் கடற்பகுதியில் கடற்படையினரும் விமானப் படையினரும் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

கிழக்குக் கடற்பகுதியில் விமானங்கள் தாழப் பறந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

மட்டக்களப்புக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான கப்பல் நகர்வு ஒன்று தென்படுவதாகவும் —

மட்டக்களப்புக் கடற்பிராந்தியத்திற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு முயலுமாறு வற்புறுத்துகிறது தி. மு. க.

சென்னை ஜூன் 28

அமைதியை ஏற்படுத்துவதற்காக பேச்சு நடத்த இலங்கை அரசு முயல வேண்டும் தமிழக மாநில ஆளும் கட்சியான தி. மு.க இலங்கை அரசிட்ம் இவ்வாறு கோரியுள்ளது.

சேலத்தில் நேற்று ஆரம்பமான தி. மு. கவின் மாநில மாநாட்டிலேயே இலங்கை அரசை மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருப்பது வருந்தத்தக்கது என்று கவலை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

(உ-3)

## முருங்கனில் 11 புலிகள் பலி?

மட்டக்களப்பு, ஜூன் 28

மன்னார்- வவுனியா வீதியில் முருங்கனில் நேற்று முன்தினம் மாலை இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் 11 விடுதலைப் புலிகள் இறந்ததாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் நடமாட்டம் முருங்கன் பகுதியில் இருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐயாயிரம் பேர் மன்னாரில் தவம்!

யாழ்ப்பாணம் ஜூன் 28

வன்னியில் இருந்து மன்னாருக்குச் சென்றுள்ள சுமார் 5 ஆயிரம்பேர் யாழ்ப்பாணம் வருவதற்காக அங்கு தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து உயிலங்குளம் ஊடாக மன்னார் நகரப்பகுதிக்கு வந்துள்ள யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த—சுமார் 5 ஆயிரம் அகதிகள் கப்பல் வசதியின்றி மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருவதற்கான கப்பல் வசதியின்றி சிலர் மாதக்கணக்கில் தவம் கிடப்பதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

## புளியங்குளத்தில் குண்டு வீச்சு!

வவுனியா, ஜூன் 28

நேற்றுக்காலை 6.40 மணியளவில் கிபிர் விமானங்கள் புளியங்குளம் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தின.

## விடுதலைப் புலிகள் ஆட்லறித் தாக்குதல்!

வவுனியா, ஜூன் 28

பெரியமடுப் பகுதியில் நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள படையினர் மீது நேற்று அதிகாலை புலிகள் ஆட்லறித் தாக்குதல் நடத்தியதில் 8 படையினர் காயமடைந்தனர் என 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (உ-3-164)

## பெரியதம்பி ஓய்வு பெறுகிறார்

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய செல்வி தி. பெரியதம்பி சேவையில் இருந்து ஓய்வுபெற நேற்று முன்தினம் பத்திரங்களைக் கையளித்துள்ளார் என செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையில் அண்மையில் நடந்த தமிழ்த்தின விழா குளறுபடிகளின் எதிரொலியாகவே அவர் ஓய்வு பெற முடிவு செய்ததாக திருகோணமலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதியைக் கொல்ல முயற்சி: முக்கிய சந்தேகநபர் தப்பிச் சென்றார்!

மட்டக்களப்பு, ஜூன் 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நானு ஓயா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டுத் தமிழர்களில் முதலாவது சந்தேக நபர் புதன் கிழமை இரவு தப்பி ஓடி விட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரன் என அழைக்கப்படும் ரி. லோகேஸ்வரன் என்ற இந்தச் சந்தேக நபர் சம்பவ தினம் இரவு 9.30 மணியளவில் மலம் கழிக்கப் போவதாகக் கூறிவெளியில் சென்றார் என்றும் —

அவருக்குக் காவலாகச் சென்ற பொலீஸார் ஒருவருக்கு அவர் டிமிக்கி கொடுத்து விட்டு தப்பிவிட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் சாரதியாகப் பணியாற்றி வந்த இவர், சில வாரங்களுக்கு முன்பே வெள்ளவத்தைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார் என்றும் —

அவரிடம் இருந்து ஜனாதிபதியின் மாளிகை தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் அமைதிப் பகுதி ஐ. நா. தூதரகம் பிரகடனம்

வவுனியா - யாழ்ப்பாணம் வீதியில் புதூர் நாகதம்பிரான் ஆலயப்பிரதேசம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அமைதிப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

புளியங்குளத்தில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்தப் பகுதியில் சுதந்திர அகதி முகாம் அமைக்கப்படவுள்ளது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையால் அகதிகளாகி சிதறிப் போயுள்ள மக்களை ஒரே இடத்தில் வைத்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி வவுனியா அரச அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது,

(உ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

## இறுதிப் போட்டிகளும் பரிசளிப்புவிழாவும்

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினர்
தமது 55 ஆவது ஆண்டு நிறைவினை
முன்னிட்டு

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும்

**கப்டன் D. A. M குணசிங்கம்**

தலைமையில் 29-06-97 மாலை 2 மணிக்கு கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்
**திரு. K. தியாகராசா**
(தலைவர், கொய்யாத்தோட்ட சனசமூக நிலையம்; பொருளாளர், யாழ். செஞ்சிலுவைச் சங்கம்.)

**நடைபெறும் ஆட்டங்கள்**

பிற்பகல் 2.00 மணி:
மூன்றாம் இடத்துக்கான போட்டி
பிற்பகல் 3.30 மணி: இறுதி ஆட்டம்
மல்லாகம் R. D. S. விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். மரியன்னை பேராலய விளையாட்டுக் கழகம்.

சச்சி தவநேசன்
நிலைய செயலாளர்

(48052)

---

வெளிவந்துவிட்டது!

## சங்கவியின் சைவகேக், பிஸ்கட் வகைகள் செயல்முறைப் புத்தகம்

கிடைக்கும் இடங்கள்:

★ பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
செட்டித்தெரு, கொழும்பு.
வெள்ளவத்தை, கொழும்பு.
★ ஸ்ரீலங்கா புத்தகசாலை,
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
★ பெற்றா எசன்ஸ் விநியோகஸ்தர்கள்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**விலை ரூபா 75-00**

வியாபாரிகளும், பாடசாலைகளும் சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(48070)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ஸ்ரீ கௌசிகா ஸ்ரீரஞ்சிதகுமார்**

அன்னையின் அரவணைப்பில்: 08—12—1987
ஆண்டவன் அழைப்பில்: 24—06—1996

அன்புச் செல்வமே! அருமை மகளே!
அழகொளிரும் பரிதியே கௌசிகா!
மன்றாடி நின்றோம் மறந்திட்டான் காலதேவன்
சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம்
புன்சிரிப்பின் புகலிடமே!
போன இடம் சொல்லாயோ?
ஆறாது ஆறாது நெஞ்சம் அழுதாலும்
தீராது துன்பம்; வேராகி மாறாத பந்தம்
எங்கள் விழிநீரே கௌசியே என்றநாமம்
மங்கியதோ உன் மஞ்சம் மகளே
மீளாத் துயில் கொண்டு ஆண்டு ஒன்று ஓடி
மறைந்தாலும் மாறாது மறையாது
ஒளி வீசும் உன் உருவம்.

உன் பிரிவால் துயரில் துடிக்கும்:
**அப்பா, அம்மா, உடன் பிறப்புக்கள்,**
**உற்றார், உறவினர்கள், நண்பிகள்.**

K. செல்லையா,
C/O சி. கனகம்மா,
சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை.

(48064)

---

## இணைப்புக்குழுக் கூட்டம் பலாலியில்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு பலாலியில் நடைபெறவிருக்கிறது.

இராணுவ இணைப்பதிகாரியுடன் நடைபெறும் இக் கூட்டத்தில் பங்குபற்ற வசதியாக சகல பிரதேச செயலர்களையும், உதவி அரசாங்க அதிபர்களையும் நாளை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்துக்கு வருமாறு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

பலாலி செல்வதற்கு போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். திருமறைக்கலா மன்றம் ஏற்பாடு செய்துள்ள 'குற்ற பழி உணர்வில்' என்னும் பொருளிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் 'அகவொளி' நிலைய இயக்குநர் திரு. எஸ்.ஜே. இராஜநாயகம், அரசஅங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர் க.வி. கந்தவேள் ஆகியோர் கருத்துரையாற்றுவர். (ஐ-4)

---

பேராசிரியர்
## அ. துரைராசா தங்கப் பதக்கம்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு, எதிர் வரும் புரட்டாதி மாதம் 06 ஆம் திகதி நடைபெற இருக்கும், 1996 ஆம் ஆண்டுக்கான பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற இருக்கும், 1 ஆம். 2 ஆம், வகுப்பில் சித்தியடைந்தோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும், ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

பல்கலைக்கழகத்துக்கென ஒரு பதக்கமும், ஒவ்வொரு பீடத்துக்கும் ஒவ்வொன்றாக நான்கு பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை (1) சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (2) சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பல்கலைக்கழக வளாகம், வவுனியா ஆகிய முகவரிகளிற் பெற்றுக்கொள்ளலாம்.

நிரப்பிய படிவங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 1997-07-31 ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
1997-06-2[illegible]

(சி-1005)

---

## வாழ்த்துகின்றோம்

திருவாளர்
**சோமசுந்தரம் கோகுலதாசன்**

பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி தற்போது சபையின் பொது முகாமையாளராகப்பதவி உயர்வு பெற்றிருப்பதையிட்டு மன மகிழ்ச்சியடைவதுடன் அவரின் பணிகள் சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

ஊழியர்கள்,
பனை அபிவிருத்திச்சபை.

53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(48054)

---

எமது புதிய வெளியீடு!
சசிகுமார் சிவரஞ்சனி நடித்த
**துர்க்கை அம்மன்**
விஜயசாந்தி நடித்த
**லேடி பாஸ்**
ஒறிஜினல் வெளியீடுகள்
உல்லாசம் - லவ்டுடே
இராணுவவீரன் - முதல்சீதனம்
அமராவதி - புதிய பாடல் 27

பிரதி ஒன்றின் விலை 350/-

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்

(48067)

---

## கண்ணீர் அஞ்சலி

**இ. செல்வராசா**

எங்களுடன் பலகாலம் கடமைபுரிந்து. ஒட்டி உறவாடிய நண்பன் இ. செல்வராசா (மின் அத்தியட்சகர்) அவர்கள் வவுனியாவில் இடம்பெயர்ந்து இருந்த பொழுது 10-06-1997 அன்று திடீர் மரணமடைந்த செய்திகேட்டு மிகவும் ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவரது மனைவிக்கும், உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்,

செயலாளரும்,
உத்தியோக நண்பர்களும்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பளை.
26-06-97

(சி/1029)

---

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா கைலாசபிள்ளை

(ஓய்வு பெற்ற சார்ஜன்ட், மதுவரித் திணைக்களம்)

அரியாலையைச் சேர்ந்த முத்தையா கைலாசபிள்ளை 21-06-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவமணியின் (கிளி) அன்புக் கணவரும், நீலோசனி, யோகராணி (நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு), தவபாலா (கொழும்பு), சிவநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சிறில், ரஜிதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், துர்க்கா, ஐங்கரன், மாதங்கி, சன்யோ, சாம்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கண்மணி, சதாசிவம், அருளம்பலம், பொன்னம்மா, கனகரத்தினம் (அமரசிங்கம்), சோமசுந்தரம், நடராசா மற்றும் பார்வதி (சிவானந்தம்), தியாகராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-06-97 இல் கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
மு. துரைரராசா
(மருமகன்)

81/1, Shanthi Road,
Hendala,
Wattala.

(48063)

### திருமதி ஞானசேகரம் மரியம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா குருமன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானசேகரம் மரியம்மா 17-06-97 அன்று காலமானார்.

இவர் ஞானசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யூடித் நிர்மலா, சுரேந்திரன், தர்மேந்திரனின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, திரேசம்மா (றோஸ்), பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வனஜா அந்தோனிப்பிள்ளை
(பெறாமகள்)

அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(48071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தீவிரவாதியின் சரிவு

# சிக்கினார் பொல்பொட்!



மறைவிடத்தில் பொல்பொட்

இந்த வாரம் உலக அரங்கில் பரபரப்பூட்டிய செய்திகளில் முக்கியமானது கம்போடியாவின் முன்னாள் கொடுங்கோல் ஆட்சியாளரும், கெமரூச் இயக்கத்தின் தலைவருமான பொல்பொட் கைது செய்யப்பட்டார் என்பதே.

யார் இந்த பொல்பொட்? அவர் எவ்வாறு கைதானார்?

மத்திய கம்போடியாவில் கொம்போங் தோம் மாகாணத்தில், ஓரளவு செல்வந்த நிலையில் இருந்த கிராமப்புறம் ஒன்றில் 1928 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி பிறந்தார் பொல்பொட்.

சென்று, தமது இரகசிய அமைப்பில் தீவிரத்துடன் செயற்படத் தொடங்கினார். 1963 இல் அந்த அமைப்பின் செயலாளராக வந்த அவர், 1968 இல் தமது கெரில்லாக் களுடன் சேர்ந்தே கம்போ

போடியாவில் இருந்து அமெரிக்கா தனது படைகளை விலக்கிக் கொண்ட போது, ஆட்சியைக் கைவிட்டு அமெரிக்காவுக்கு தப்பி ஓட வேண்டியதாயிற்று.

சர்வதேச அரங்கில் பனிப்



பொல்பொட் உத்தரவில் சுட்டுக்கொல்லப்பட்ட அவரது உதவியாளர் சொன் சென்

டிய இராணுவத்திற்கும், பொலீஸாருக்கும் எதிரான தாக்குதல்களை நடத்தத் தொடங்கினார்.


இந்தக் காலகட்டத்தில் கம்போடியத் தலைவராக

போர் உச்சக்கட்டத்தில் இருந்த அக்கால கட்டத்தில் நொரடோம் சிஹானுக் தீவிர சீன ஆதரவாளராக இருந்ததாலேயே அமெரிக்காவின் ஆத்திரத்துக்கு உள்ளாகி இருந்தார்.

கம்போடியாவில் லொன் நொலின் ஆட்சிக்கு எதிராக அப்பொழுது போராடிய இயக்கங்களில் ஒன்றே கெமரூச் ஆகும்.

ஆனால் 1975 இல் கெமரூச் கம்போடியாவின் ஆட்சியைப்பிடித்த போதுதான் அதன் தலைவரன பொல்பொட்டின் சுயரூபம் வெளிப்பட்டது.

தமது பாதுகாப்புத்துறை தலைவர் சொன்சென், இயக்கத்தின் பெயரளவிலான தலைவர் கியூசம்பான், இங்சாரி ஆகியோரின்



பொல்பொட் ஆட்சியில் மரணத்தைச் சந்தித்தவர்களில் ஒரு தொகுதியினரின் மண்டை ஓடுகள், எலும்புகள்.

- கவி -

உதவியுடன் ஆட்சியைப் பிடித்த பொல்பொட், மாக்ஸீய கொள்கைகளை தமது விருப்பப்படி தீவிரப்போக்குடையதாக மாற்றி, அதன் வழியே புதிய புரட்சி ஒன்றை ஏற்படுத்தப்போவதாகக் கூறி கொடுங்கோல் ஆட்சியை மேற்கொண்டார்,

### 10 லட்சம் பேர் உயிரிழப்பு

நகரங்களின் உயர் வாழ்க்கை, குடும்ப உறவுப் பிணைப்புகள் போன்ற

### பிக்கு ஆவதற்கு இளமையில் விருப்பம்

தமது இளமைப் பருவத்தின் ஒருபகுதியை தலைநகர் நொம்பென்னில் உள்ள பௌத்த சமயத்தலம் ஒன்றில் பிக்குவாகும் பயிற்சியில் கழித்தார்.

அவரது உறவினர்கள் நொம்பென்னில் உள்ள அரச மாளிகையில் பணியாற்றினர்.

1940 ஆம் ஆண்டு முதல் 1948 வரையான தமது மாணவப் பருவத்திலேயே அவர் தேசிய வாதக் கோட்பாடுகளைக் கடை..ப்பிடித்தார்.

இந்த காலகட்டத்தில் பிரான்ஸில் கல்வி கற்பதற்கு அவருக்கு புலமைப்பரிசில் கிடைத்தது. மாணவனாக இருந்தபோது தீவிர அரசியலில் ஈடுபட்டதால் பரீட்சைகளைக் கோட்டை விட்டு கல்வியைப் பூர்த்தி செய்யாமலேயே நாடு திரும்பினார்.

பிரெஞ்சுக் குடியேற்றவாதிகளுக்கு எதிரான இரகசிய இயக்கம் ஒன்றில் இணைந்த பொல்பொட், அதில் இருந்து கொண்டே 1954 முதல் 1963 வரை நொம்பென்னில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் வரலாறு, பூகோளம் ஆகிய பாடங்களையும் கற்பித்தார்.

பொலீஸாரின் சந்தேகப் பார்வை அவர் மீது திரும்பியதை அடுத்து தலைநகரிலிருந்து தப்பி கிராமத்துக்குச்

இருந்த இளவரசர் நொரடோம் சிஹானுக், பொல்பொட்டின் கெமரூச் இயக்கத்துக்கு எதிராக கடும் போக்கைக் கடைப்பிடித்தார். தற்போதைய இணைப் பிரதமர்களில் ஒருவரான நொரடோம் ரணரிட்டின் தந்தைதான் நொரடோம்



பொல்பொட் கைதானதை அறிவிக்கும் கம்போடிய இணைப்பிரதமர்கள் நொரடோம் ரணரிட், ஹுன்சென்.

சிஹானுக்:

1970 ஆம் ஆண்டு நொரடோம் சிஹானுக்கை அமெரிக்கா ஆதரவுடன் பதவி கவிழ்த்துவிட்டு ... அமர்ந்த லொன்நொல் என்பவர், 1985 ஆம் ஆண்டு கம்

வற்றை அடியோடு வெறுத்த பொல்பொட், நகரங்களில் இருந்த மக்களை சில மணி நேரங்களில் அங்கிருந்து கிரா... ... குடும்பப் பிணைப்புகளை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக திருகோணமலைக்குப்போன குடாநாட்டு மாணவர் பல்வேறு வெற்றிகளுடனும், சில மனக்கசப்புகளுடனும் திரும்பினர்.

அங்கு பிரதேசவாதம் தலைதூக்கியிருந்ததாகவும், போட்டிகளின் முடிவுகள் நீதியாக அமையவில்லை என்ற குறை யாழ். மாணவர்களில் பல சாராருக்கு ஏற்பட்டதாகவும் செய்திகள் அடிபட்டன.

விசாரித்ததில் பிரதேசவாதம் தலைதூக்கியிருந்தது என்ற கூற்று பொருத்தமற்றது என்று தெரிய வந்தது. போட்டி முடிவுகள், தீர்ப்புகள் குறித்து யாழ். மாணவருக்கு கசப்புணர்வு ஏற்பட்டது என்பது உண்மையே.

மத்தியஸ்தர்கள், நடுவர்களாக போட்டிகளில் பங்குபற்றும் பிரதேசங்களில் ஒன்றைச் சேர்ந்தவர்களை மட்டும் நியமிக்கும் போது—

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அதிக வெற்றிகளை ஈட்டும் போது—

இத்தகைய குற்றச்சாட்டுகள் எழுவது இயல்பே.

அக்குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கலாம்; அல்லது இல்லாது போகலாம். ஆனால் 'பிரதேசவாதம்' என்று அதற்கு பூச்சுப் பூச முனைவது சிலரின் தனிப்பட்ட லாபம் கருதிய முயற்சிதான்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மாணவர்களுக்கு திருகோணமலையில் வழங்கப்பட்ட உன்னத உபசரிப்பு, 'பிரதேசவாதம்' என்ற குழப்பத்தை உண்டு பண்ண எடுக்கப்பட்ட முயற்சிக்கு மரண அடியாக விழுந்தது.

நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடக்கவில்லை. பிந்திப் பிந்தியே நடந்தன. பரிசளிப்பு விழாவும் அப்படியே தாமதமாகும் என பல யாழ். மாணவர்களும் அவர்களைக் கூட்டிச் சென்ற ஆசிரியர்களும் எண்ணினர். மூன்று நாள்களாக கட்டுப்பாட்டில் பூட்டி வைத்திருந்த மாணவருக்கு ஒரு பொழுதுபோக்காக கன்னியா வெந்நீரூற்றைக் காட்டுவோம் என்ற திட்டமிட்ட ஆசிரியர்கள், அவர்களை அங்கு கூட்டிச் சென்று விட்டு பரிசளிப்பு விழாவுக்குத் தாமதமாக வந்ததன் பின்னணி அதுதான். பரிசளிப்பு விழா அறிவிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே ஆரம்பித்து விட்டது. சில அதிதிகளின் அவசரம் கருதி உரைகளுக்கு முன்னர் முதல் நிகழ்வாக பரிசளிப்பு நிகழ்ச்சியும் இடம்பெற்று விட்டது. இதனால் யாழ். மாணவர் பலர் பரிசு பெற அழைக்கப்பட்ட போது மண்டபத்தில் இருக்கவில்லை. இதுவே 'யாழ். மாணவர் பகிஷ்கரிப்பு' என்று வியாக்கியானம் செய்ய வைத்துவிட்டது, அவ்வளவுதான்!

திருமலையிலிருந்து காங்கேசனுக்குத் திரும்பிய மாணவரை வரவேற்று அவர்களுக்கு உணவுப் பொட்லங்கள் வழங்கி வீடுகளுக்கு அனுப்ப யாழ். கல்வித் திணைக்களம் எடுத்த முயற்சியும் பாராட்டுக்குரியது.

★ ★ ★

**வண.** தனிநாயகம் அடிகள் ஒரு கிறிஸ்தவர். ஆனால் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்க்கும் தமது அயராத முயற்சியில் மதத்தைக் காட்டி அவர் பின்னிற்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக — சுறுசுறுப்பாகக் கலைத் தொண்டாற்றி வரும் — திருமறைக் கலாமன்றம் கூட ஒரு கிறிஸ்தவப் பின்னணி உள்ள அமைப்புத்தான். ஆனால் தமிழையும், தமிழர்களின் பாரம்பரிய கலைகளையும் வளர்க்கும் விடயத்தில் அந்த மன்றத்தினர் மதத்தைப் போட்டுக் குழப்பவில்லை.

தைப்பொங்கல் இந்து — சைவ — தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டாலும் அது இயற்கை அன்னைக்கு தமிழர் நன்றி செலுத்தும் பாரம்பரிய விழாவாகவே கருதப்படுகின்றது. அந்தத்தத்துவத்தை நன்கு புரிந்தவர்கள் திருமறைக் கலாமன்றத்தினர்.

அதுபோல சைவக் கோயில்களில் பிரசாதமாக சந்தனம் வழங்கப்பட்டாலும், வீட்டுக்கு அல்லது ஒரு நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்கு சந்தனம் கொடுத்து வரவேற்பது தமிழர் பண்பாட்டு முறை.

இத்தகைய தமிழர் பண்பாட்டு முறையை — மதத்துக்கு அப்பால் நின்று பார்ப்பதன் மூலமே — பேணி வளர்க்க முடியும் என்று திருமறைக் கலாமன்றத்தினருக்கு நன்கு தெரியும். இதற்கு அப்பால் இத்தகைய பண்பாடுகளை ஒன்றிணைந்து பேணுவதன் மூலம் தமிழ் மக்களிடையே சமய சமரசத்தைப் பேணமுடியும் என அவர்கள்கருதியிருக்கக்கூடும்,

அதனால் தான் திருமறைக் கலாமன்றத்தினர் பொங்கல் விழாவை — தமிழர் பாரம்பரிய நிகழ்வாக — நடத்துகின்றார்கள். அவர்களின் நிகழ்ச்சிகளுக்குப் போனால் சந்தனத்தைத் தாங்களே எங்கள் நெற்றியில் அணிவித்து வரவேற்பார்கள்.

இவ்வாறு பல கிறிஸ்தவ அமைப்புகள் மதத்துக்கு அப்பால் நின்று - தமிழர் பாரம்பரியம், பண்பாடு போன்றவற்றைப் பேணியும், மத நல்லிணக்கத்தை உருவாக்கியும் வரும் போது, மறு புறத்தில் சில கிறிஸ்தவ சார்புக் கல்லூரிகள் தமிழர் பாரம்பரியத்தைச் சிதைக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதை பலரும் வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இத்தகைய மகளிர் கல்லூரி ஒன்றில் அண்மையில் தமிழ்த் தின விழா நடைபெற்றது. அந்த விழாவுக்கு வருகை தருவோரை வரவேற்ககுத்துவிளக்கு, நிறைகுடம் வைக்கவும்தோரணங்கள் கட்டவும் ஆசிரியைகள், மாணவிகள் முயன்றனர். ஆனால் அனுமதி மறுத்து விட்டார் அதிபர். தமிழர் பாரம்பரியத்தைப்பேணமறுத்துவிட்டுதமிழ்த் தின விழாவுக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது?

இந்தக்கல்லூரி மாணவிகள் பொட்டு வைப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டதாக முன்னர் ஒரு கதை அடிபட்டது. அது உண்மையா?

உண்மையாயின், தமிழர் நோக்கில் மூளியாய் மாணவிகள் பாடசாலைக்கு வருவதைத்தான் நிர்வாகம் விரும்புகிறதா?

மதத்தை மதிப்போம்; அதே வேளை பாரம்பரியம் — பண்பாடு போன்றவற்றையும் பேணுவோம். இந்த மனநிலை சம்பந்தப்பட்டோருக்கு வருமா?

- -மின்னல்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் 4½ பரப்புக்காணியும், ஆறு அறைகளைக் கொண்ட சகல வசதிகளும் உள்ள வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அரியநாயகம் சட்டத்தரணி, 71/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [47983]

வீட்டுத்தளபாடங்கள் குளிர்சாதனப்பெட்டி, T.V, கடைக்குரிய அலுமாரி, சோக்கேஸ், விறாக்கிகள் இன்னும் பல. உடன் தொடர்பு:- 07, கைலாச பிள்ளையார் கோயிலடி பின் வீதி, நல்லூர். [47999]

ஒரு மாத பேட்டுக் குஞ்சுகளும் சேவல் குஞ்சுகளும் 5-7-97 (சனிக்கிழமை) விற்கப்படும். முன் கூட்டியே தொடர்பு கொள்வது நன்று. பத்து மாதம் நிரம்பிய சேவல்களும் உண்டு. முட்டை மொத்தமாகவும் விற்கப்படும். 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம், [48055]

## தேவை

கணக்காளர் இருவருக்கும் (பாவம் குறைவு), வங்கி லிகிதருக்கும் மணப்பெண்கள் தேவை. வேறு தொழில்களிலும் மணமக்களுண்டு. குறிப்பு, படத்துடன் நேரில், கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்; இராசகுலசிங்கம், விநாயக திருமணசேவை, 128, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. [48056]

மண்ணெண்ணெயில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி [Fridge] ஒன்று தேவை. வகை, விலை அறிவிக்கவும். தொடர்பு: மே/பா உதயன் விளம்பர இல, 630 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். [47982]

## கணிதம், விஞ்ஞானம்

ஆண்டு 11 மீட்டல் துரிதமாக ஆண்டு 6 - 10 விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் இரண்டாம் தவணைப் பரீட்சைக்கு கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48050]

## தவறிவிட்டது

26.06.97 அன்று காங்கேசன் துறையில் இருந்து வரும் போது சிவப்பும் சாம்பல் நிறமுமுடைய 'ரவலிங் பாக்' தவறிவிட்டது. இதற்குள் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்றும் உள்ளது. கண்டெடுத்தவர்கள் முத்தையா, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [48040]

கவிதா கணேசரத்தினம் என்பவரது 766811868V இலக்க தேசிய அடையாள அட்டையும், இரு புகைப் படங்களும் சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கும், கட்டுடைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம், இ. தங்கராசா, பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம். [48049]

## தேவை

லேத் மெசின் (கடைச்சல் இயந்திரம்) விற்பனைக்கு இருந்தால் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்; வி. இராசலிங்கம், 109, சட்டநாதர் வீதி, நல்லூர். [47978]

## அறை வாடகைக்கு

யாழ். நகரில் அறை வாடகைக்குண்டு. (நகைத்தொழில் செய்பவர்களுக்கு உகந்தது) ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [48017]

## தவறிவிட்டது

செல்வி நல்லையா விக்னேஸ்வரியின் 58771748V இலக்க தேசிய அடையாள அட்டை யாழ். தேசிய சேமிப்பு வங்கிக்கும், கஸ்தூரியார் வீதி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கைவங்கி இரண்டாம் கிளையில் பணியாற்றும் விக்கினேஸ்வரனிடம் ஒப்படைக்கவும். [48053]

## மரம்

''மரம் இல்லாமல் மனிதன் வாழ முடியாது'' சர்க்கரை வேம்பு, வேம்பு, பலா, கரி சலாங்கண்ணி, கற்பூரவல்லி, பொன்னாவரசு, அகத்தி. மில்க்வைற் நீலசோப்/ சலவைத்தூள் வெற்றுரை 10 அல்லது ரூபா 10/- ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ரூபா 20/- 'உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள்' ''மில்க் வைற்'' [சி - 1012]

## ஆலயக் கூட்டம்

வண்ணார் பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலயத்தின் மாகாசபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்

---

# ஒரு சிறிய மரத்தின் ஒரு பரந்த கிளை இன்று உங்களுக்கு நிழலாகின்றது

**இன்று 28-6-1997 நண்பகல் 12.00 மணி**
**இல. 10, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில்**
**ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்**

அந்தப்புரத்து நந்தவனத்திற்கு வருக என அழைக்கின்றோம், ஆம் ஜெசித்தாரா தனது பரீட்சார்த்த கிளை இன்று சிவகுமார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் உயர்திரு சி. நமசிவாயம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான உணவுப் பொதிகளையும், மற்றும் உணவு ஓடர்களையும் இங்கு பெறலாம். உங்கள் சுவையின் நாயகி ஜெசித்தாரா — மற்றும் எமது வழமையான சேவைகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் வழமையான இடத்தில் நடைபெறுகின்றன. எமக்கு வேறு கிளைகள் இல்லை.

## ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

## ஜெசித்தாரா


இல. 10, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.

உணவுப் பொதிகளின் விலை விவரம்:

| | | |
|---|---|---|
| மீன் | -- | 45/- |
| மரக்கறி | -- | 35/- |
| இறைச்சி | -- | 35/- |
| புரியாணி | -- | 75/- |
| பிறைட் றைஸ் | -- | 75/- |

---

பல்லுப் போனால் சொல்லுப் போச்சு; உங்கள் அழகான முகவதனத்திற்கு வலுவான பற்களைக் கட்டிக் கொள்வதற்கும், அழகான கண்ணாடிக் கனவுகளை நினைவாக்குவதற்கும்:





## P. J. பர்னான்டோ

**மூக்குக் கண்ணாடியகம்**
**பல் கட்டும் நிலையம்**
**542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

கவனிக்குக:
எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை

---

எமது வாழ்த்துக்கள்

## லொயலாஸ்

திருமணக் கார், பிளாஸ்ரிக் கதிரைகள், சமையற் பாத்திரம், தறப்பாள், குசன் கதிரை மற்றும் எல்லா வகையான சோடினைப் பொருள்கள் நீங்கள் இதுவென்று பெயரிடுங்கள், நாங்கள் பெற்றுத் தருவோம்,

195, பிரதான வீதி,
4 ஆம் குறுக்குச் சந்தி,
யாழ்ப்பாணம்.

எமது விளம்பரத்திற்கு நேசக்கரம் நீட்டிய
இவர்களுக்கு எமது நன்றிகள்

(சி/ 1019)

---

சாவகச்சேரி - சங்கத்தானை

# அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மகோற்சவப் பெருவிழா - 1997

ஃ ஆலய வருடாந்த பெருவிழா 25 - 06 - 97 புதன் கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

**சப்பறத்திருவிழா**: 02 - 07 - 97 புதன் மாலை 5-00 மணி
**தேர்த்திருவிழா** : 03 - 07 - 97 வியாழன் முற் பகல் 9-30 மணி
**தீர்த்தவிழா** : 04 - 07 - 97 வெள்ளி 10 - 15 மணி

பிரதம சிவாச்சாரியர்
''சிவாகமவித்பத்ஜோதி''
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்

தீர்த்தவிழா அன்று மாலை காவடியும் தீ மிதிப்பும் நடைபெறும்.

அனைவரும் விழாவை தரிசித்து அருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

- ஆலய பரிபாலனசபை

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:
**தி. வே. சேயோன்**
கைலாயபிள்ளை வீதி, சங்கத்தானை
சாவகச்சேரி.

(சி-1021)

---

# ஒடியல் தேவை

தரமான ஒடியல் பெருமளவில் தேவை. திருப்திகரமான விலையில் உடன் பணத்திற்குக் கொள்வனவு செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,**
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1017)

---

## SECOND YEAR REMEMBERANCE
**28 - 06 - 1995**



**SWAMINATHAN BALACHANDRAN**
B. Sc. Dip ( Ed. ) Cey.
( Director, Undergraduate Dept. & Retd. Teacher, Jaffna College, Vaddukoddai )

It was a sudden parting
Too Bitter to forget
You bid no farewell
See no more
Only the Beautiful memories
Left behind.

Sadly missed & fondly remembered:
**By your loving Wife.**
**Grace. B.**

32m, Palam Road,
Kandermadam,
Thirunelvely.

(48027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபகரணங்கள் அன்பளிப்பு

நல்லூர் ஜூன் 28

நெடுந்தீவு றோ. க. மகளிர் வித்தியாலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியக் கருவிகளும், மகாவித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்களும், மேற்கு ஐக்கியதீபம் விளையாட்டுக்கழகத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை நெடுந்தீவு றோ. க மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன் இவற்றை சம்பந்தப்பட்டோரிடம் கையளிப்பார். [ஐ - 103]

## சிக்கினார் பொல்பொட்....

(மூன்றாம் பக்கத் தொடர்)

இல்லாமல் செய்வதற்காக குடும்பத்தவர்களை வலிந்து வெவ்வேறு தூர இடங்களுக்கு பிரிந்து செல்ல வைத்தார்.

1975 முதல் 1979 வரை பொல்பொட் குழு நடத்திய நான்கு வருட கொடூர ஆட்சியால் கம்போடிய மக்கள் எண்ணிக்கையில் ஆறில் ஒரு பகுதியினர் — 10 லட்சத்துக்கும் அதிகமானோர் — பசி, பட்டினி, தொற்றுநோய், சித்திரவதை, மரண தண்டனை ஆகியவற்றினால் உயிரிழந்தனர்.

பொல்பொட்டின் பாதுகாப்புத் துறைத் தலைவர் சொன்சென் நடத்திய டோல் செலங் சித்திரவதைக் கூடத்தில் மட்டும் இருபதாயிரம் கம்போடிய மக்கள் விசாரணையின் பின்னரும் விசாரணையின்றியும் கொல்லப்பட்டனர்.

1979 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தில் கம்போடியாவுக்குள் ஊடுருவிய வியட்நாம் படைகளால் கெமரூச் இயக்கத்தினர் ஆட்சியிலிருந்தும் தலைநகர் நொம்பென்னிலிருந்தும் காட்டுக்குள் விரட்டப்பட்டனர்.

அவ்வேளை நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்த பொல்பொட், பத்திரிகையாளரைச் சந்தித்தார்.

தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சிறு தவறுகள் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான கம்போடியர்கள் உயிரிழந்தார்கள் என்பதை அப்போது ஒப்புக்கொண்ட பொல்பொட், ஆனால் தான் மனித நேயத்துக்கு எதிராக எத்தவறையும் செய்யவில்லை என்றார்.

அதுவே பொல்பொட் கடைசியாகப் பகிரங்கமாகத் தோன்றிய நிகழ்ச்சியாகும்.

### காட்டு வாழ்க்கை

அதன் பின்னர் தமது காட்டுவாழ்க்கையின் போது கெமரூச் தலைமைப் பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற்று விட்டதாகக் கூறப்பட்டாலும், அவரே கெமரூச் இயக்கத்தின் வலுவான தலைவராக இருப்பதாகப் பேச்சுகள் அடிபட்டன.

ஐ. நா. சபையின் தலையீட்டில் 1993 இல் கம்போடியாவில் நடத்தப்பட்ட தேர்தலை அடுத்து, இரு வெவ்வேறு தீவிரவாதப் போக்குடைய தலைவர்களைக் கூட்டுப் பிரதமர்களாகக்கொண்ட அரசு ஒன்று கம்போடியாவில் அமைக்கப்பட்டது.

இற்றை நாள் வரை இந்த அரசு தப்பிப் பிழைத்துள்ள போதிலும், அதன் கூட்டுப் பிரதமர்களான இளவரசர் நொரடோம் ரணரிட், அவரின் பழைய எதிரியான ஹுன்சென் ஆகிய இருவரும் தமக்கு ஆதரவாகத் தனித்தனியாக இரு ஆயுதபாணி இயக்கங்களை வளர்த்து வருவதால் கம்போடியாவில் எப்போது இரத்தக்களரி ஏற்படும் என்பதைச் சொல்லமுடியாத பதற்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது, ஹுன்சென் வியட்நாம் ஆதரவாளர்; வியட்நாமின் ஆதரவு இன்னும் அவருக்கு இருந்து வருகிறது.

இது ஒருபுறமிருக்க —

காட்டில் பொல்பொட்டின் பின்னாலிருந்த அவரது ஆதரவு அணியினர் தொடர்ந்து காட்டில் இருப்பதால் பயனில்லை என்று கருதி, கெமரூச் இயக்கத்தை விட்டு நைஸாகக் கழன்று, மெல்ல மெல்ல நொம்பென்னில் ஆட்சியிலிருக்கும் இளவரசர் நொரடோம் ரணரிட் மற்றும் ஹுன்சென் தலைமையிலான தீவிரவாத அணிகளில் சேரத் தொடங்கினர்; மற்றொரு அணியினர் தீவிரவாதப் போக்கிலிருந்து ஒதுங்கினர்.

இதனால் பொல்பொட்டின் கெமரூச் 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதை போல சுருங்கியது.

இதனால் பல்வேறு குழப்பங்களில் சிக்கிய பொல்பொட், தன்னுடன் நெருங்கியிருந்த தோழர்களைச் சந்தேகித்து அவர்களை ஒழித்துக் கட்டத் தொடங்கினார். அதனால் இயக்கத்துக்குள்ளேயே அவருக்குப் பெரும் எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியது.

### சொன்சென் படுகொலை

தமக்கு வலது கரமாக — பாதுகாப்பு உதவியாளராகவும் ஒரு காலத்தில் பொல்பொட் ஆட்சியில் பாதுகாப்புப் பிரிவுத் தலைவராகவும் இருந்த சொன்சென், அவரது மனைவி, மற்றும் வளர்ந்த பிள்ளைகளைச் சுட்டுக்கொல்ல அண்மையில் உத்தரவிட்டார் பொல்பொட்.

அதனையடுத்து அவரது ஆதரவுப் படைகள் சொன்சென்னையும் குடும்பத்தவர்களையும் சுட்டுக் கொன்றும் அவர்கள் தலைகள் மீது வாகனங்களை ஏற்றியும் படுகொலை புரிந்தன.

இந்தச் சம்பவத்தால் எதிர்ப்பு வலுக்கவே —

இயக்கத்தில் மிதவாதப் போக்கைக் கொண்டிருந்த — முன்னாள் இயக்கத் தலைவரும் தமது நெருங்கிய சகாவுமான கியூ சாம்பான் போன்ற பல முக்கிய தலைவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு தனக்கு மிக நம்பிக்கையான சொற்ப படையினருடன் தனது காட்டு மறைவிடத்திலிருந்து வேறிடத்துக்குத் தப்பிச் செல்ல முயன்றார் பொல்பொட்.

'ஸ்ரெச்சர்' ஒன்றில்பொல்பொட் படுத்தபடி — கையில் 'டிரிப்' ஏற்றிய நிலையில்— அந்த ஸ்ரெச்சரை நால்வர் காவிச் செல்ல, அவர்களைச் சுற்றி பொல்பொட்டின் மெய்ப்பாதுகாவலர்கள் வர, காடுகளுக்குள் நகர்ந்து கொண்டிருந்த பொல்பொட்டின் சிறிய அணியை, கெமரூச் அதிருப்திப் படைகள் சுற்றி வளைத்தன; பொல்பொட் கைதானார்.

இதுவரை பொல்பொட்டின் பின்னால் காட்டுக்குள் இருந்து தீவிரப் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக கம்போடிய அரசினால் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் கெமரூச் அதிருப்திப் படைகள், பொல்பொட்டை உயிருடன் அல்லது பிணமாகக் கம்போடிய அரசிடம் கையளிப்பதன்மூலம் மன்னிப்பையும், தேசிய வாழ்வில் இணைவதற்கான அனுமதியையும் பெறலாம் என்று நம்புகின்றன.

அதே சமயம்—

பொல்பொட்டை கைதான நிலையில் அல்லது அவரது சடலத்தை நேரில் பார்ப்பதற்கு கம்போடியாவிலும் உலகம் முழுவதிலும் லட்சம் மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றார்கள். ★

# புலிகளுக்கு இரகசியத் தகவல்களை வெளியிட்ட 8 சிப்பாய்கள் கைது!

## அவர்கள் முஸ்லீம்களாம்

கொழும்பு, ஜூன் 28

படையினரின் இரகசியங்களை விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லீம்களான இராணுவச் சிப்பாய்கள் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக ''தினமின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரான பொட்டு அம்மானுக்கு மிக நெருக்கமான ஒருவரும் முஸ்லிம் இராணுவச் சிப்பாய்கள் எட்டுப் பேரும் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் இராணுவ இரகசியங்கள் புலிகளைச் சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு இராணுவ இரகசியங்கள் சென்றடைவது குறித்த தகவல் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெளியாகியது என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது.

(உ-10)

## எழுதுவினைஞர் பதவி உயர்வு

யாழ்ப்பாணம் ஜூன் 28

வடக்கு, கிழக்குமாகாணத்தில் மாகாண எழுதுவினைஞர் சேவையில் அதி சிறப்பு (Supra) பதவி உயர்வை 14 பேருக்கு 1991 ஜூலை முதலாம் திகதி முதல் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பதவி உயர்வு பெறுவோர் விவரம் வருமாறு;-

ஆர். சீ. தனிநாயகம் (கமநல சேவைத் திணைக்களம், கிளிநொச்சி), செ. இரத்தினம் (பிரதேச செயலர் அலுவலகம், நல்லூர்), செ. மெற்றாஸ்மயில் (வேலணைக் கல்விக் கோட்டம்), இ. கனகசபாபதி (நிர்மாணத்திணைக்களம், யாழ்ப்பாணம்), சி. மா. பொன்னம்பலம் (யாழ் மாநகர .சபை), நா. தம்பிஐயா (பிரதேச செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), ச. செல்வராசா (பிரதேச செயலகம், நல்லூர்), எம். எம். ஆப்டீன் (கூட்டுறவுத் திணைக்களம், திருகோணமலை), பீ. நவநீதக்கிருஷ்ணன் (செயலகம், கிளிநொச்சி) எஸ். சபாரத்தினம் (கமநலச் சேவை அலுவலகம், கிளிநொச்சி), வி. பி. செல்வநாயகம் (செயலகம், முல்லைத்தீவு), ஆர். கனகேஸ்வரன் (பிரதேசசபை அலுவலகம், கிளிநொச்சி), மு. சிவராசா (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), எஸ். பாலசுப்பிரமணியம் (கோட்டக் கல்வி அலுவலகம், நல்லூர்)

(உ)


### ஸ்ரீ செல்வா

அகலத் திரையரங்கு

ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்,

ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு

28-06-97 முதல்

**M. G. R.**

**ஜெயலலிதாவின் ஒளி விளக்கு**

(C. D. பிரதி)

10-00 , 2-00 மணிக்கு

(பழைய நேரம்)

(48068)



### அறிவித்தல்

**97 A/L**

மாணவர்கள் அனைவரும் 28 - 06 - 97 சனி நண்பகல் 12.00 மணிக்கு நிறுவனத்தில் ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**NEW SCIENCE ACADEMY**

[illegible], யாழ்ப்பாணம்

(48073)


## கோண்டாவில் சம்பவம்: படைத்தரப்பில் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

கடந்த 19 ஆம் திகதி கோண்டாவிலிலும், 24 ஆம் திகதி உரும்பிராயிலும் இடம்பெற்ற சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து, அச்செழுவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள 51 ஆவது படையணியின் கட்டளைத் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த 19 ஆம் திகதி கோண்டாவில் பிரதேசத்தில் சைக்கிளில் சென்ற இரு சந்தேக நபர்களை நிற்குமாறு உத்தரவிடப்பட்டது- ஆனால் கட்டளைக்குக் கீழ்ப்பணியாமல் கிரனேட் ஒன்றை எறிந்து விட்டுத் தப்பியோட அவர்கள் முயன்றனர். அதனால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நிலைக்கு படையினர் தள்ளப்பட்டனர். ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் அருகிலிருந்த வீடு ஒன்றுக்குள் ஓடி, கைக்குண்டு ஒன்றை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் பிஸ்டல் — 1, பிஸ்டல் மகஸின் — 1, பிஸ்டல் ரவைகள் — 9, சயனைட் வில்லை — 1 பட்டி — 1 ஆகியவற்றை படையினர் கைப்பற்றினர்.

### உரும்பிராயில்

கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் உரும்பிராய்ப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மூன்று சந்தேக நபர்கள் தங்கள் பார்வையிலிருந்து தப்பியோடுவதைக்கண்டனர்

படையினர் அவர்களுக்குப் பின்னால் சென்ற போது, வீதியோரத்தில் இருந்த வீடு ஒன்றுக்குள் புகுந்த அவர்களில் ஒருவர் கைக்குண்டு ஒன்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டார். மற்றைய இருவரும் பின்னர் தப்பினர். இச்சம்பவத்தை அடுத்து, இரண்டு கைக்குண்டுகளையும், ஒரு சயனைட் வில்லையையும் படையினர் மீட்டனர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## திருமலைக்கு இன்று கப்பல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று புறப்படும் 'நியூ கோ எண்டியூரன்ஸ்' கப்பலில் பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.கிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

(உ-3)


### K.C.C.C. TROPHY - 1997

கொக்குவில்

மத்திய சனசமூக நிலையத்தினால்

நடத்தப்படும்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

கிரிக்கெட் சுற்றுப்போட்டி

இறுதியாட்டம்

மானிப்பாய் பரிஷ் வி.க. எதிர்

ஜொலி ஸ்ரார்ஸ் வி.க.

காலம்: 29-06-1997 ஞாயிறு காலை 8-30 மணி.

இடம்: கொக்குவில இந்துக்கல்லூரி மைதானம்.

பிரதம விருந்தினர்: திரு. பொ: கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

சிறப்பு விருந்தினர்: திரு. து. வைத்திலிங்கம் (பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

K C C.C. விளையாட்டுக் கழகம்

(சி/1027)



### எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

நெப்போலியன், ரூபிணி நடித்த

() தாமரை

சிவகுமார், சுஜாதா நடித்த

() வாட்ச்மேன் வடிவேல்

என்றும் தரமான CD பிரதிகளுக்கு

சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்

(ரவி ஒளிகானம்)

100A, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/1028)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டப் பிரச்சினைகளால் அழுகும் நிலையில் சடலம்!

தென்மராட்சி, ஜூன் 28

ஆஸ்பத்திரியில் மரணமடைந்த — உரிமை கோரப்படாத காசநோய் நோயாளி ஒருவரின் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்வதில் சட்டப் பிரச்சினை பார்க்கப்படுவதால், அச் சடலம் அழுகி துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டுள்ள போதிலும் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமான — பருத்தித்துறை, 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த — வே. இரத்தினம் (வயது 45) என்னும் நோயாளியின் சடலத்தை உரிமை கோரப்படாததால் அரச செலவில் அடக்கம் செய்ய ஆஸ்பத்திரி நிர்வாகம் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டது. எனினும் மரண விசாரணை செய்யப்படாத சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்வதற்கு சிபார்சு செய்ய சட்டம் இடம் கொடுக்க மறுப்பதாக உரிய அதிகாரிகள் கைவிரிப்பதால் நேற்று மாலைவரை சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் அழுகி துர்நாற்றம் வீசிய நிலையில் அடக்கம் செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. (உ-117)

# யாழ். அரச அதிபராக சண்முகநாதன் நியமனம்

## பத்மநாதன் வடக்குக்கு வெளியே!

கொழும்பு, ஜூன், 28

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக க. சண்முகநாதனை உடன் நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் ஆர். எஸ். ஜயரத்தினவுக்கு நேற்று முன்தினம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இவர் தற்சமயம் யாழ். மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றுகிறார்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள அவர் தமது நியமனக் கடிதத்துடன் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

தற்சமயம் யாழ். அரச அதிபராகப் பணியாற்றும் செ. பத்மநாதனை வடக்குக்கு வெளியே இடமாற்றம் செய்யுமாறும் ஜனாதிபதி பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த இடமாற்ற உத்தரவுகள் தொடர்பான கடிதம் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபரின் இணைப்பு அலுவலகத்துக்குக் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# பிரேமதாஸா நிகழ்ச்சி நாளை திட்டமிட்டபடி!

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பிறந்ததின வைபவம் நாளை திட்டமிட்டபடி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறும் என பிரேமதாஸா நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தயான் ஜயதிலக தெரிவித்திருக்கின்றார்.

நிலையத்தின் தலைவர் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டுள்ளபோதிலும்—

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மற்றும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி, பிள்ளைகள் போன்ற நெருங்கிய குடும்பத்தவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றப் போவதில்லை என்று அறிவித்துள்ளபோதிலும்—

பிரேமதாஸாவின் ஆதரவாளர்கள் இக்கூட்டத்தில் பெருமளவில் பங்குபற்றுவர் என்றார் தயான் ஜயதிலகா.

# உணவுப் பொருள்கள் வன்னியில் இல்லை!

## புலிகள் லண்டனில் அறிக்கை

லண்டன், ஜூன் 28

வன்னிப் பிரதேச மக்களுக்கு போதுமான உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை என்று விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உணவுப் பற்றாக்குறை தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்சமயம் ஐயாயிரம் குடும்பங்களுக்கு இருவாரத்துக்குப் போதுமான உணவுப் பொருள்களே கையிருப்பில் உள்ளன.

கடந்த இரண்டு வருடகாலமாக செய்தியாளர்களை வன்னிக்குச்செல்ல அரசுஅனுமதி வழங்காததால் வன்னியின் உண்மை நிலை வெளி உலகுக்கு தெரியவரவில்லை

வன்னியின் உண்மை நிலையை வெளிக்கொணரும் வகையில் எதிர்வரும் புதன்கிழமை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து எழுச்சிப் பேரணியை புதுக்குடியிருப்பில் நடத்தவிருக்கின்றனர் — என்றுள்ளது.

இதற்கிடையில் —

புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான உணவு விநியோகத்தை அரசு நிறுத்தியுள்ளதாக புலிகளின் லண்டன் பணிமனை தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அரசு நிராகரித்துள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (உ-3-21)

# வந்து சேர்ந்தனர்

குருநகர், ஜூன் 28

கடந்த புதனன்று 34 குடும்பங்களைச் சேர்ந்த 133 பேரும், நேற்று முன்தினம் 71 குடும்பங்களைச் சேர்ந்த 214 பேரும் வன்னியிலிருந்து குடாக்கடல் ஊடாக குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தனர். (உ-51)

# தேங்காய் விலை வன்னியில் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வன்னிப் பகுதியில் தேங்காயின் விலை விஷம் போல் உயர்ந்துள்ளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு தேங்காய் 40 ரூபாவில் இருந்து 50 ரூபாவரை விற்பனையாவதால் மக்கள் தேங்காய் வாங்கமுடியாது அவதியுறுகின்றனர்.

மீன், மரக்கறி, உணவுப் பொருள்களும் அதிக விலைக்கே விற்பனையாவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# இலவச மருத்துவ சேவை

நவாலி, ஜூன் 28

மானிப்பாய் சத்தியசாயி சேவை பிரிவினர் ஆனைக்கோட்டை கிராம மக்களின் சுகாதார நலன் கருதி இலவச மருத்துவ சேவை ஒன்று இன்று பிற்பகல் 2 மணி முதல் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்துகின்றனர்.

இச்சிகிச்சை முகாம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி சிவசோதி சிவராணியின் அனுசரணையுடன் நடைபெறும். (உ-100)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

சிக்கி 4 பொதுமக்கள் காயமடைந்தனர்.

வாழைச்சேனை கிண்ணியடியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் ஒன்றில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இதேசமயம் —

மட்டக்களப்பு — கல்முனை வீதியில் களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் இருந்து நேரம் குறித்து வெடிக்கும் குண்டு ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுச செயல் இழக்கப்பட்டது. (உ:3-21)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேநேரம்—

''போர்முனைப் பகுதியில் விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாகத் தாக்கினாலும், இராணுவ நடவடிக்கை தொடரும்'' — என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

'வன்னியில் புலிகள் நடத்திய தாக்குதல்கள் நாங்கள் எதிர்பார்த்ததுதான். இன்னுமொரு தாக்குதலையும் நாம் எதிர்பார்த்துள்ளோம். இது போன்ற தாக்குதல்களால் எமது நடவடிக்கையை நிறுத்திவிடமுடியாது.

'பெரியமடுவில் இடம் பெற்ற தாக்குதலையடுத்து மோட்டார் பீரங்கி நிலையில் இருந்த ஐந்து மோட்டார்களை நாம் மீட்டுவிட்டோம். ஆனால் ஒரேயொரு 120 எம். எம். ரக மோட்டாரை மட்டும் காணவில்லை'' — என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## முருங்கனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தாகக் கிடைத்த தகவலையடுத்து செட்டிக்குளம், முருங்கன் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை அப்பகுதியில் படையினர் நடத்திய தேடுதலில் 11 சடலங்களும், அவர்களது ஆயுதங்களும் [illegible] மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-21-3)

# உப்பள ஊழியர்களின் பிரச்சினை குறித்து பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 28

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபகுதி ஊழியர்கள் 285 பேரின் பிரச்சினைகள் குறித்து கைத்தொழில், அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்தினவுடன் ஈ. பி. டி. பி. தூதுக்குழு நேற்று கொழும்பில் பேச்சு நடத்தியது.

யாழ். மாவட்ட எம். பியும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு அமைச்சரைச் சந்தித்து உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபகுதி ஊழியர்களுக்கு 1994 ஆம் ஆண்டுக்குப் பின் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் —

அவர்கள் பணியில் இருந்து நிறுத்தப்பட்ட 31-12-96 வரை அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்றும் —

சேவையில் இருந்து நீக்கப்பட்டமைக்கான நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் — கோரியது.

இவர்களுக்கு உடன் சம்பள நிலுவையை வழங்கவும் நஷ்டஈடு வழங்கவும் அமைச்சர் தமது செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்காக ஈ, பி. டி. பி. அமைப்பு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த செயற்திட்ட அறிக்கை தொடர்பாகவும் அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

அந்த அறிக்கையின் அடிப்படையில் காங்கேசன்துறை ஆலையை மீள இயங்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு தமது அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரைகளை விடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கிபிர் தரிப்பிடம் வரை முன்னேறிய தமிழர்!

கட்டுநாயக்கா விமான நிலையத்தை ஒட்டியுள்ள விமானப் படைத் தளத்தில் மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம் பெற்ற சம்பவம் ஒன்று இப்போது அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

'கிபிர்' போன்ற 'சுப்பசொனிக்' ஜெட் விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் பிரதேசத்தில் நடமாடிய நபர் ஒருவரை உஷாராக இருந்த விமானப்படை சிப்பாய் ஒருவர் வழிமறித்தார்.' விசாரனை தொடங்கியதும் அந்நபர் தமிழர் என்பது தெரியவந்தது. அதி உச்ச பாதுகாப்பு வலயத்துக்குள் அவர் எப்படி நுழைய முடிந்தது? எதற்காக அவர் அங்கு வந்தார்? — பதிலளிக்க முடியாது விழித்தார் அந்த நபர்.

விசாரணைகளில் இருந்து இந்த நபர் புலிகளுடன் தொடர்புபட்டவர் என்பது பொலீஸாருக்குத் தெரியவந்திருக்கின்றதாம்.

கிபிர் ஜெட்டுகளை செயலிழக்கச் செய்யும் திட்டத்துடன் அல்லது அது தரித்திருக்கும் இடம் மற்றும் அப்பிரசேதம் ஆகியவை தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை அறியும் நோக்கத்துடன் இந்த நபர் நுழைந்திருக்கலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

விசாரணைகள் தொடர்கின்றன. நாட்டின் அதி உச்ச பாதுகாப்பு வலயத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கும் இந்தச் சம்பவம் குறித்து வெளியே 'மூச்சுக்' காட்ட வேண்டாம் என்று விமானப் படை உயரதிகாரிகளுக்கு கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதாகவும் தெரியவந்தது.

# மூத்த படை அதிகாரிகளுடன் இராணுவத் தளபதி ஆராய்வு

வவுனியா, ஜூன் 28

கடந்த செவ்வாய்க்கிழமை பெரியமடுப்பகுதி மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதலை அடுத்து —

அரசுப் படைகளின் அடுத்த கட்டச் செயற்பாடு குறித்து தீர்மானிப்பதற்காக கடந்த புதன்கிழமை கொழும்பில் முக்கியமான உயர்மட்ட மாநாடு ஒன்று நடந்ததாக ''புலிகளின் குரல்'' நேற்றிரவு தெரிவித்தது.

தாக்குதல் நடந்த தினத்தன்று ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த தளபதிகளை அழைத்து இராணுவத் தளபதிறோஹான் தலுவத்த, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்ததாக கொழும்பு செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'புலிகளின் குரல்' அறிவித்தது. (உ-164-3)

## முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்)

பான 15 வரை படங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் —

பொலீஸார் தெரிவித்தனர்.

இவருடன் இக்கொலை முயற்சி தொடர்பாக கடுகண்ணாவை, நுவரெலியா பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்கள் உட்பட எட்டுப் பேர் கைதாகியிருந்தனர்.

சந்தேக நபர் தப்ப காரணமாக இருந்த பொலீஸ்காரரர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தப்பியமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் பணிப்பின் பேரில் உயர்மட்ட விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-21-3)

## கிழக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்)

குள் இக்கப்பல் நுழையக் கூடும் என்றுஎதிர்பார்க்கப்படுவதால் மட்டக்களப்பை அண்டிய கடற் பிரதேசத்தில் கடற்படையினரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

அந்தப்பகுதியில் கடற்படை ரோந்துப்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் —

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன, (உ-3-10)

# ஆங்கில தினம்

சிவானந்த மாதர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் பாலர் பாடசாலை மாணவர்களின் ஆங்கில தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திவ்ய ஜீவன சங்கத்தலைவர் கே. கனகரட்னம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறுவர் சங்கங்களின் கலைநிகழ்ச்சிகள் அங்கு இடம் பெறும். (ஐ)

## புளியங்...

(முதலாம் பக்கத் தொடர்)

இத்தாக்குதலில் ஏ, கே. எல். எம்.ஜி- ஒன்று இணைப்புடன் ரவைகள் 500, ரம் ரவைக்கூடு-ஒன்று, பிஸ்டல்-ஒன்று, நடுத்தர ரவைகள் 210 ஆகியன உட்பட ஏராளமான ஆயுததளபாடங்களைத் தாம் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் ([illegible]) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

சாரங்கா நகை மாடம்
177|4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதத்துடன் 22கரட்
தங்க நகைகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்!
(சி/1000)

28 - 06 - 1997 சனிக்கிழமை

## கருத்துக் கலசம்

### தாழும் சமூகம்

தமிழர் சமூகம் சோதனைக்கும், வேதனைக்கும் ஆளாகி அல்லற்படும் ஓர் இனக்கூட்டமாகி விட்டது. ஈழத் தமிழர்கள் நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் தங்கினாலும் அவலங்களை அனுபவிக்க நேர்கிறது.

எங்கு வாழ்ந்தாலும் எங்கு சென்றாலும் துன்பங்களும் துயரங்களும் சுற்றி வளைத்துக் கொள்ளும் நிலையே தமிழருக்கு நியதி என்றாகி விட்ட காலம் இது.

இத்தகு இடர் நிலைக்குக் காரணம் என்ன? ஊழ் வினையா, முற்சந்ததிகள் எச்ச சொச்சமாக விட்டுச் சென்ற பாவ மூடையா அல்லது இன்று வாழ்வோர் இயற்றும் சமூக ஒழுக்க நெறி தவறுதலும், அறநெறி புறந்தள்ளலுமா என்று பலரும் மனம் வேகும் வேளை இது.

ஆயின் இவை குறித்துச் சிறிதும் சிந்திக்காதவர்களாக மனநோவு இல்லாதவர்களாக சமூகத்தை மேன்மேலும் வேரறுக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள் பலர்.

அடுத்தவன் இல்லாத வேளை அவன் பாடுபட்டுத் தேடிய சொத்துக்களைச் சூறையாடும் கும்பல், தமது அற்ப நலன் கருதியும் பொறாமையின் நிமித்தமும் காலச் சூழ்நிலையைத் தமது கையில் எடுத்துக் கொண்டு அப்பாவிகளைக் காட்டிக் கொடுக்கும் கூட்டம், மதுவுக்கு அடிமையாகித் தமது குடும்பங்களை அழித்துக் கொள்ளும் கூட்டம், கேளிக்கைகளில் நாட்டம் அதிகரித்துஅயல் வீட்டுக்காரனுக்கு தொல்லை கொடுத்துஅவனின் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் கும்பல், கொண்டாட்டங்கள் என்ற பேரில் இரவிரவாக 'வீடியோ' காட்டி மாணவர்களின் கல்வியைக் கெடுக்கும் கோஷ்டி என்று பல வகையினரும் பலசாரார்களும் பெருகி வருகிறார்கள்.

இவர்களுக்குச் சமூகத்தைப் பற்றியோ, அடுத்தவனின் நலன் அல்லது வாழ்வியல் உரிமை குறித்தோ எவ்வித அக்கறையும் இல்லை. தமது ஒவ்வாத இயல்புகளும் செயல்களும் சமூகச் சீரழிவுகளுக்கு வித்திடுகின்றன என்ற உணர்வு துளியும் இல்லை. இவை எமது கலாசாரத்துக்கும் பண்பாட்டுக்கும் ஒவ்வாத, வேண்டாத, சீரற்ற, நெறிபிறழ்ந்த, ஊத்தை படிந்த ஒரு வாழ்வு முறைக்கு இட்டுச் செல்லப் போகிறதே!

ஒட்டு மொத்தத்தில் இந்த ஒழுக்கச் சீர்கேடுகள் சுயநலத்தின் பச்சையான வெளிப்பாடுகளே! சுயநலம் வேரறுக்கப்பட்டு சமூக நலமும் பண்பு நிலையும் வளர்வதற்கு என்ன செய்யப் போகிறோம்?

சமூகவியல் விஞ்ஞானிகளின் ஆய்வுக்குரிய புதிய களக்கருத்தாக இச் சமூகத் தாழ்வை வளர விடுவதனை விட, இதனைத் தடுப்பதற்கு ஒவ்வொருவரும் முயலக் கூடாதா? சமூக மிருகமான மனிதன் வெறும் மிருகமாக மாறாதிருக்க ஒவ்வொருவரும் தத்தமது நெஞ்சைத் தொட்டுச் செயலாற்றக் கூடாதா?

# பிரிட்டனிடமிருந்து சீனாவுக்கு கைமாறும் ஹொங் கொங்

## உலக உலா

என்.பி.சீலன்

ஜூன் 30 ஆம் திகதி நள்ளிரவு 11.59 மணிக்கு ஹொங் கொங்கில் பிரிட்டிஷ் கொடி இறங்குகிறது. ஜூலை 1 ஆம் திகதி அதிகாலை 12.01 மணிக்கு மக்கள் சீனக் குடியரசுக் கொடி அங்கு ஏற்றி வைக்கப்படும்.

''கிழக்கின் முத்து'' (Pearl of the Orient) என்று அழைக்கப்படும் ஹொங் கொங்கில் 156 வருடகால பிரிட்டிஷ் ஆட்சி இத்துடன் முடிவுக்கு வருகிறது.

ஜூலை 1ஆம்திகதி ஹொங் கொங்கை சீனா பொறுப்பேற்றவுடன் ஹொங்கொங்கில் ஏற்கனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி மன்றம் செயல் இழந்து போகும். ஹொங்கொங்கின் கடைசி பிரிட்டிஷ் ஆளுநர் கிறிஸ்பாட்டனும் (Chris Patten) பதவி இழக்கிறார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த ஆட்சி மன்றத்துக்குப் பதிலாக ஜூலை 1 இல் மக்களால் தெரிவு செய்யப்படாத ஆட்சி மன்றம் ஒன்று — அதாவது HKSAR எனப்படும் ''ஹொங் கொங் விசேட நிர்வாகப் பிராந்தியம்'' (Hong Kong Special Administrative Region) பதவி ஏற்கிறது. சி. எச். துங் என்பவர் இந்த அமைப்பின் புதிய நிர்வாகியாக சீன அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைக் கௌரவித்து ஹொங்கொங்கைபிரிட்டன் கையளிப்பது வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சி என்பதில் சந்தேகம் இல்லை.

### ஹொங்கொங் வரலாறு

முதலாவது அபின் யுத்தத்தில் சீனா பிரிட்டனிடம் தோல்வி அடைந்தது.

1841 ஆம் ஆண்டு, சீனாவும், பிரிட்டனும் நாங்கிங்கில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சீனா பிரிட்டனிடம் ஹொங்கொங்கைக் கையளித்தது.

1860 ஆம் ஆண்டும் 1898 ஆம் ஆண்டும் ஹொங்கொங்கின் மேலும் சில பகுதிகள் பிரிட்டனின் கீழ் வந்தன.

1841 ஆம் ஆண்டு தொடக்கம் தனது ஆளுநர் ஒருவர் மூலமே பிரிட்டன் ஹொங் கொங்கை ஆட்சி செய்து வந்தது.

ஹொங் கொங்கில் ஜனநாயகம் பற்றியோ அல்லது ஜனநாயக முறையில் ஆட்சி மன்றம் ஒன்றை அமைப்பது பற்றியோ பிரிட்டிஷ் அரசு அப்பொழுது அக்கறை காட்டவில்லை.

1984 டிசம்பர் 12 ஆம் திகதி பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட பிரிட்டிஷ்— சீன கூட்டுப் பிரகடனத்தின் பின்பே ஹொங்கொங்கில் மக்கள் ஆட்சி மன்றம் ஒன்றை அமைப்பது குறித்து பிரிட்டன் அக்கறை காட்டத் தொடங்கியது.

அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் மாக்ரெட் தாட்சரும் சீனப் பிரதமர் சாஓ சியாங்கும் கையெழுத்திட்ட இந்த கூட்டுப்பிரகடனத்தின் படியே ஹொங்கொங்கை



ஹொங்கொங்கின் பிரதம செயலாளர் ஆன் சொன் சான்

சீனா கையேற்பதற்கான 1997 ஜூலை 1 திகதி நிர்ணயிக்கப்பட்டது.

பிரிட்டனில் தொடர்ந்து மூன்று தவணைகள் பிரதமர் பதவி வகித்த இரும்புச் சீமாட்டி மாக்ரெட் தாட்சர் கூட்டுப்பிரகடனத்தில் ஒப்பமிடுவதற்காக அப்போது சீனா சென்றிருந்தார்.

### முதலீட்டாளர்கள் வெளியேறினர்

1984 கூட்டுப் பிரகடனம் கைச்சாத்தானதை அடுத்து முதலீட்டாளர்கள் ஹொங் கொங்கை விட்டு வெளியேற ஆரம்பித்தனர்.

ஹொங்கொங்கில் புதிதாக முதலீடுகளைச் செய்ய வெளிநாட்டவர்கள் தயக்கம் காட்டினர்.

ஹொங்கொங் சீனாவிடம் சென்றுவிட்டால் தமது முதலீடுகளுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் நிலவியது. ஹொங்கொங் நாணயத்தின் மதிப்பும் திடீரென இறக்கம் கண்டது.

இதனால் சீனத் தலைமைப்பீடம் குழப்பம் அடைந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இருந்த நடைமுறைகள்சீனா ஹொங்கொங்கைக்கையேற்ற பின்னரும் 50 வருட காலத்துக்குத் தொடரும் என்று சீன ஆட்சியாளர்கள் அறிவிக்கவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது.

அதாவது முதலாளித்துவ ஆட்சிமுறையின் கீழ் ஹொங்கொங்கில் பின்பற்றப்பட்டுவந்த தாராளமய பொருளாதாரக் கொள்கைகளை 1997 ஜூலை 1 இல் இருந்து மேலும் 50 ஆண்டுகளுக்குக் கடைப்பிடிக்கப் போவதாகச் சீனா அறிவித்தது.

சீனத் தலைவர்களின் இந்த வாக்குறுதி எவ்வளவு தூரம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறப்போகிறது என்பதிலேயே ஹொங் கொங்கின் எதிர்காலம் தங்கி இருக்கப்போகிறது. முதலீட்டாளர்கள் வெளியேறிவிட்டால் தற்பொழுது கம்யூனிஸ்ட் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளில் இருந்து ஹொங் கொங்கும் தப்பிவிடமுடியாது என்று கருதப்படுகின்றது.

### செல்லுபடியாகாத ஆட்சி மன்றத் தேர்தல்

ஹொங்கொங்கில் தற்பொழுது இருந்து வரும் ஆட்சிமன்றம் 1995 இல் பிரிட்டிஷ் ஆளுநரால் நடத்தப்பட்ட தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டது ஆகும்.

1841ஆம் ஆண்டு முதல் ஹொங்கொங்கை நிர்வகித்து வந்த பிரிட்டிஷ் அரசு ஹொங்கொங்கைச் சீனாவிடம் திருப்பி ஒப்படைக்க இணங்கிய பின்பே — அதாவது சீனாவிடம் ஒப்படைக்க இரண்டு வருடங்கள் உள்ளபோதே தேர்தலை நடத்தியது.

இந்தத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 60 உறுப்பினர் கொண்ட ஆட்சி மன்றத்தைச் சீனா அங்கீகரிக்கவில்லை. இந்த ஆட்சி மன்றமே ஜூலை 1 ஆம் திகதி செயல் இழந்து போகிறது.

இதற்குப் பதிலாக ஹொங் கொங் விசேட நிர்வாகப் பிராந்தியம்'' என்ற சீனாவினால் உருவாக்கப்பட்ட — மக்களால் தெரிவு செய்யப்படாத — புதிய நிர்வாக அமைப்பு ஜூலை 1 ஆம் திகதி அதிகாலை 2.00 மணிக்குப் பதவி ஏற்கிறது.

### புதிய நிர்வாக அமைப்புக்கு பிரிட்டன் எதிர்ப்பு

ஹொங்கொங் கைமாற்றம் குறித்து அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் மத்தியில் கருத்து முரண்பாடு கிடையாது.

ஆனால் இந்த புதிய நிர்வாக அமைப்பே பல விமர்சனங்களை எதிர்நோக்கி வருகிறது.

நிர்வாக அமைப்பு, பதவி ஏற்பு வைபவத்துக்கு 4 ஆயிரம் பேருக்கு சீன அரசாங்கம் அழைப்பு அனுப்பியுள்ளது.

ஐ. நா பொதுச்செயலாளர் கோபி அனான், சீன ஜனாதிபதி ஜியாங்செமின், சீனப்பிரதமர் லீபெங், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மடெலின் ஆல்பிறைற், எலிஸபெத் மகாராணியாரின் விசேட பிரதிநிதி இளவரசர் சார்ள்ஸ், சிங்கப்பூர் சிரேஷ்ட அமைச்சர் லீ குவான்யூ ஆகியோர் இந்த வைபவங்களில் கலந்து கொள்ள ஏற்பாடாகி இருக்கிறது.

முதலில்நடைபெறும்ஹொங் கொங் அதிகார மாற்ற வைபவத்தில் சகல தலைவர்களும் கலந்து கொள்வார்கள்.

ஆனால்ஹொங் கொங்கின் புதிய நிர்வாக அமைப்பு பதவி ஏற்பு வைபவத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சரும் கலந்துகொள்ள மாட்டார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. எனினும் ஹொங்கொங்கில் உள்ள அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரி றிச்சேர்ட்பூட்டா இந்த வைபவத்தில் கலந்து கொள்வார் என்று கடைசியாகக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பல தசாப்த காலமாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஹொங்கொங் மக்கள் அனுபவித்துவந்த உரிமைகளைச் சீனாவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய நிர்வாக அமைப்பு தடைசெய்வதாகப் பிரிட்டன் குற்றஞ் சாட்டி வருகிறது.

ஜூன் 4 ஆம் திகதி ஹொங்கொங்கின் விக்ரோறியா பூங்காவில் 50 ஆயிரம் மக்கள் திரண்டு தியனன்மென் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இதுவே ஹொங்கொங் மக்களின் கடைசி எதிர்ப்புப் பேரணியாக இருக்கலாம் என்று பிரிட்டன் கருதுகின்றது.

1989 ஜூன் 4 ஆம் திகதி சீனாவின் தியனன்மென் சதுக்கத்தில் இடம் பெற்ற சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் படுமோசமான படுகொலைக்கு உள்ளானார்கள்.

### பிரிட்டிஷ் - சீனா உறவு கீழ் மட்டம்

ஹொங்கொங் கையளிப்பு வைபவம் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பிரிட்டிஷ் — சீனா உறவுகள் கீழ் மட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஹொங்கொங்கின் கடைசி பிரிட்டிஷ் ஆளுநர் கிறிஸ் பாட்டனைஹொங்கொங்கின் கடைசிச் சக்கரவர்த்தி என்று சீனா வர்ணித்திருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளது.

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை திறக்கும் படை நடவடிக்கையும் புலிகளின் பதிலடித் தாக்குதல்களும்!

கடந்த மாதம் 13 ஆம் திகதி — சுமார் ஏழு வாரங்களுக்கு முன்னர் — வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிகுறு' (வெற்றி உறுதி) இராணுவ நடவடிக்கையின் மூன்றாவது கட்டத்தைக் கடந்த திங்கள் கிழமை காலையில் படையினர் ஆரம்பித்தனர்.

அதற்குச் சரியாக 40 மணி நேரம் கழித்து —

படையினரின் வடக்கு நோக்கிய நகர்வைத் தடுத்து நிறுத்துவதற்கான — தமது இரண்டாவது ஊடறுப்புத் தாக்குதலை — செவ்வாய்க் கிழமை இரவு புலிகள் நடத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

தாண்டிக்குளம் பகுதியில் ஊடறுத்துப் புலிகள் நடத்திய 'செய்; அல்லது செத்து மடி' இராணுவ நடவடிக்கையின் முதலாம் கட்டம் காரணமாகப் படையினரின் 'வெற்றி உறுதி' நடவடிக்கை சுமார் இரு வாரகாலம் தடைப்பட்டிருந்தது.

### கையோடு 'மறுத்தான்'

இந்த நடவடிக்கை திங்களன்று மீண்டும் ஆரம்பித்த கையோடு 'மறுத்தான்' கொடுத்திருக்கின்றார்கள் புலிகள்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் முதலாம், இரண்டாம் கட்டங்களின் போது —

வவுனியாவிலிருந்து பெரிய மடு வரை — சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் — முன்னேறிய 55 ஆவது படையணியும் —

வெலிஓயாவிலிருந்து நெடுங்கேணி வரை முன்னேறிய 53 ஆவது படையணியும் —

மூன்றாம் கட்ட நடவடிக்கையை ஆரம்பித்துச் சில கிலோ மீற்றர் தூரம் நகர்ந்த போதே — புளியங்குளத்துக்குச் சற்றுத் தொலைவில் — பெரியமடுவை அண்டி — நள்ளிரவு வேளை — 55 ஆவது படையணிக்குள் புகுந்து புலிகள் ஊடறுப்புத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

### மீண்டும் அதே படையணி மீது

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இதே 55 ஆவது படையணிதான் கடந்த பத்தாம் திகதியும் தாண்டிக்குளம் பகுதியில் புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலுக்கு உள்ளாகிப் பேரிழப்பைச் சந்தித்தது.

தொடர்ந்து ஒரே படையணி மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் அந்தப் படையணியை முற்றாகச் செயல் இழக்கச் செய்யலாம் எனப் புலிகள் கருதியிருக்கக் கூடும்.

இந்த 55 ஆவது படையணிக்குப் பிரிகேடியர் சாந்த கொட்டகொட கட்டளைத் தளபதியாக இருக்கின்றார். தாண்டிக்குளத்தில் புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதலின் போது இவர் கூட மிகுந்த கஷ்டங்கள், ஆபத்துக்கள் மத்தியிலேயே அவரது படையினரால் காப்பாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நெடுங்கேணியிலிருந்து முன்னேறும் 53 ஆவது படையணிக்குப் பிரிகேடியர் வசந்த பெரேரா கட்டளைத் தளபதியாக இருக்கின்றார்.

### இரு இடங்களில் தாக்குதல்

செவ்வாய் இரவு 55ஆவது படையணி புளியங்குளத்துக்கு அருகே புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலுக்கு உள்ளான சமயம் —

நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்ற 53 ஆவது படையணி மீதும் புலிகளின் அணி ஒன்று தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது. எனினும் அத்தாக்குதல் குறித்து விரிவான தகவல்கள் வெளியாகவில்லை.

தாக்குதலுக்கு உள்ளான 55ஆவது படையணியின் பக்கம் மீட்பு அணிகளின் கவனம் ஒருமுகமாகத் திரும்பாமல் இருப்பதற்காக — கவனத்தைத் திசை திருப்பும் நடவடிக்கையாக — 53ஆவது படையணி மீது புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியிருக்கக் கூடும்.

புலிகளின் பிந்திய இந்த ஊடறுப்புத் தாக்குதல் 'செய்; அல்லது செத்துமடி' நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

### காற்பங்கு கடந்தாயிற்று

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் மூலம் வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான — 65 கிலோ மீற்றர் தூரத்துக்கு — பாதுகாப்பான தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பதே அரசுப் படைகளின் ஒரே திட்டம்.



பிரபாகரன்

புளியங்குளம் வரை — சுமார் 16, 17 கிலோ மீற்றர் தூரம் வரை — அரசுப் படைகள் முன்னேறி, இந்தத் தூரத்தில் கால்வாசியைக் கடந்திருக்கின்றன.

ஆனால் இந்தக் கால்வாசித் தூரத்தைக் கடப்பதற்குள் அரசுப் படைகளுக்குக் கிடைத்த அனுபவம் —

எஞ்சிய தூரத்தைக் கடந்து பாதையைக் கைப்பற்றி, அதனை முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதும், அந்தப் பாதையைத் தக்க வைத்துக் கொள்வதும் மிகவும் 'செலவான' —கையை மீறிய 'செலவான' — விடயங்கள் என்பதை அரசுக்கும் படைகளுக்கும் நிச்சயம் உணர்த்தியிருக்கும்.

இந்தக் கால்வாசித் தூரத்தைக் கடக்க 45 நாள்கள் சென்றன. அதுவும் ஐந்நூறு படையினரின் உயிரைப் பறிகொடுத்தும், ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் படுகாயமுற்று செயலிழந்து படுக்கையில்கிடக்கவும், சுமார் 50 கோடி ரூபா ஆயுதத் தளபாடங்களை இழந்த பின்னர் தான் சாத்தியமாயிற்று.

அப்படியானால் புலிகளின் மிகவலுவான — கோட்டையான — எஞ்சிய முக்காற் பகுதி பாதைப் பிரதேசத்தைக் கைப்பற்றவும், அதனைத் தொடர்ந்து தக்க வைக்கவும் இன்னும் எவ்வளவு விலை தொடர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும்? — இக்கேள்வி நிச்சயம் பாதுகாப்பு வட்டாரங்களின் முடிவுகளை மேற்கொள்ளும் உயர்பீடத்தை ஓரளவு சிந்திக்க வைத்திருக்கும் என நம்பலாம்.

### தாண்டிக்குளத்தில் பின்னணிக் காவலரண்கள்

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு, புலிகளின் கள எதிர்ப்பை எதிர்பார்த்து, படைகள் முன்னேறிச் செல்ல —

அவர்களுக்கு பின்னணியில் இருந்து விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பின்னணி காவலரண்கள் மீது தான் தாண்டிக்குளத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது, அதாவது பின்னணிக் காவலரண்களில் இருந்த துருப்புகள் புலிகளின் ஊடுருவலை எதிர்பார்த்திராத வேளையில் அத்தாக்குதல் நடத்தப்பட்டது.

**சமர்க்களம்**

### பெரியமடுவில் முன்னணிக் காவலரண்கள்

ஆனால் கடந்த செவ்வாய் இரவு புளியங்குளத்துக்கு அருகே புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதல் இதற்கு வித்தியாசமானது.

முன்னேறும் படையணிகள் மீது — முன்னணிக் காவலரண்கள் மீது — இந்த ஊடறுத்துத் தாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யுத்த களத்தில் — எதிரியின் பிரதேசத்துக்குள் — ஊடுருவும் முன்னணித் துருப்புக்கள் எதிரியின் தாக்குதலை எந்த நேரமும் எதிர்பார்த்து உஷாராக இருக்கும் என்பது தெரிந்ததே.

தாண்டிக்குளத்தில் பின்னணிக் காவலரண் துருப்புகள் எதிர்பாராத வேளையில் — அவர்கள் உஷாராக இல்லாத வேளையில் — அத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால் பெரியமடு அருகே முன்னணிக் காவலரண்கள் படு உஷாராக இருந்த சமயம்—புலிகள் துணிந்து ஊடறுக்கும் தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள்.

முன்னேற முயலும் படைக்கு ஆட்லறி உதவியை வழங்கும் நிலைகளை இலக்கு வைத்தே புலிகள் இத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகின்றது,

**பாசுபதன்**

### அதிகாரிகளும் பலி

முன்னேறும் படைகளுக்கு வழிகாட்டி, அவற்றை வழி நடத்திச் செல்வதற்காக யுத்த முனையில் இருந்த ஒரு லெப்டினன்ட் கேணல் உட்பட நான்கு அதிகாரிகளும் நூறுக்கும் அதிகமான படையினரும் இப்பகுதியில் உயிரிழந்திருக்கின்றார்கள்.

படையினரின் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆயுத தளபாடங்கள், ஆட்லறிகள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஓமந்தை மகா வித்தியாலயத்தில் இருந்த படையினரின் ஆயுத சேமிப்புக் களஞ்சியம் ஒன்றும் இந்தத் தாக்குதலில் சேதமுற்றதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு, [illegible] யினரின் முழுக்கட்டுப்பாட் [illegible] விட்டதாக படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊடறுப்புத் தாக்குதலில் களப் பலியான, படுகாயமுற்ற புலிகள் மற்றும் அரசுத் துருப்புகளின் எண்ணிக்கை, இழப்புகள், சேதங்கள் குறித்த சரியான தகவல்கள் அடுத்து வரும் நாள்களில் மெல்ல மெல்லக் கசிந்து அம்பலத்துக்கு வரும் என எதிர்பார்க்கலாம்.



அனுருத்த ரத்வத்தை

### பால்ராஜ் தலைமை

இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு புலிகள் தரப்பில் தலைமை வகித்தது யார் என்ற விவரம் இன்னும் தெரியவரவில்லை.

ஆனால் தாண்டிக்குளத்தில் நடந்த ஊடறுப்புத் தாக்குதலுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரனின் நெறிப்படுத்தலின் கீழ் தாக்குதல் தளபதிப் பொறுப்பை பால்ராஜ் ஏற்றிருந்தார் என்பது தற்போது தெரிய வந்திருக்கின்றது.

அந்த நடவடிக்கையின் போது சொர்ணம், கருணா, பானு, தீபன், மகளிர் படையணித் தளபதி நந்தா ஆகிய புலிகளின் தளபதிகள் தலைமையில் போரிட்ட அணிகளுக்கு மத்தியப்படுத்திய தலைமை வழங்கும் மூத்த தளபதியாக பால்ராஜ் செயற்பட்டார்.

தாண்டிக்குளம் தாக்குதலின் பின்னர் பால்ராஜ் மாங்குளத்தில் காணப்பட்டார்.

''நாம் எதிர்பார்த்ததை விட சண்டையில் ஈடுபட்ட புதிய உறுப்பினர்கள் தீரமுடன் செயற்பட்டனர். அனுபவம் மிக்க படையணிகளும் துணை நின்று உக்கிரமாகப் போரிட்டன.

''தாண்டிக்குளம் சமர் மூலம் புதிய உறுப்பினர்களும் நன்கு அனுபவம் பெற்றுள்ளதால் இனிவரும் சண்டைகளில் எமது இந்த அனுபவம் நன்கு உதவும்'' —என்று பால்ராஜ் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அனுபவத்தின் வெளிப்பாட்டை புளியங்குளம் அருகே செவ்வாய் இரவு தாம் நடத்திய ஊடறுப்புத் தாக்குதலின் போது புலிகள் வெளிக்காட்டியிருக்கின்றார்கள்.

இதுவரை நான்கு அழித்தொழிப்பு யுத்தங்களைப் புலிகள் நடத்தியிருக்கின்றார்கள்.

1. முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு 2. பரந்தன் ஊடறுப்புச் சமர் 3. தாண்டிக்குளம் ஊடறுப்புச்சமர் 4. புளியங்குளம் ஊடறுப்புச்சமர்.

இவற்றில் முல்லைத்தீவு அழித்தொழிப்பு யுத்தமே பாரியது. அடுத்ததே தாண்டிக்குளம் ஊடறுப்பு யுத்தம்.

ஆனால் தாக்குதல் உக்கிரத்தைப் பொறுத்தவரை முல்லைத்தீவு தகர்ப்பிற்கு தாண்டிக்குளம் சமர் நிகரானது.

அத்தோடு தாண்டிக்குளம் (XI ஆம் பக்கம் பார்க்க)



ஓமந்தை மத்திய கல்லூரியில் படையினரின் முகாம்

## ஆயுதங்களை விட மருந்தில் ஆர்வங் காட்டிய புலிகள்!

தாண்டிக்குளம் சமரில் ஆயுதங்களை எடுத்துச் செல்வதை விட மருந்துப் பொருள்களை அள்ளிச் செல்வதில் தான் புலிகள் பெரிதும் ஆர்வங் காட்டியிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் இருந்து மருந்துப் பொருள்களைக் கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதில் சமீபகாலமாக இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. மருந்துப் பொருள்கள் கொள்வனவு செய்யச் சென்ற பலர் தமிழகப் பொலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் புலிகளின் முல்லைத் தளத்திலும் மற்றும் கிழக்கிலும் உள்ள மருத்துவ முகாம்களிலும் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. குறிப்பாக சத்திரசிகிச்சை போன்றவற்றுக்கான மருந்துகள், உபகரணங்களுக்குப் பெருந் தட்டுப்பாடு.

இந்நிலையில்தான் தாண்டிக்குளம் சமரில் ஆயுதங்களை விட மருந்துப் பொருள்களை முதலில் கைப்பற்றிக் கொள்ளுங்கள் என்று பிரபாகரன் கட்டளையிட்டிருந்தாராம். மருந்துப் பொருள்களைக் கைப்பற்றிச் சேகரிக்கவென தனிப்பிரிவு ஒன்றே அனுப்பி வைக்கப்பட்டதாம். தற்போது பெருந்தொகையான மருந்துப் பொருள்களும் உபகரணங்களும் புலிகளின் கைகளில் சிக்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# எழுந்திரு கண்ணா...!

-யோகேஸ்வரி சிவப்பிரகாசம்-

''போர் இன்னும் ஓயவில்லை'' என்பதற்குச் சாட்சிபோலிருந்த இராணுவக் காவலரணைக் கடந்ததும் நேரே இருக்கும் அரசடிப் பிள்ளையாரை நினைத்துக் கையெடுத்துக் கும்பிடுகிறாள் கௌசல்யா. சிறிது தூரம் சென்றதும் பெருமாள் கோயில்; நீண்டு நெடிதுயர்ந்த கோபுரம்; கைகூப்பிப்பணிந்து நிற்கும் ஆஞ்சநேயரும் கருடாழ்வாரும்.

கோயிலுக்குப்போக வேண்டும் என்ற மனநிலையுடன் புறப்பட்டிருந்த அவள் உள்ளே செல்கிறாள்.

நோயுற்ற குழந்தைதாயின் மடிதேடும் தவிப்பு!

மனிதரிடம் கூறி, அவர்களால் தீர்க்கமுடியாத வேதனைகள், பிரச்சினைகள், சிக்கல்கள்.

உள்ளே நுழைந்து வெங்கடேசனைத் தரிசிக்கிறாள். ஸ்ரீதேவி, பூமிதேவி சகிதம் மகாவிஷ்ணு காட்சிதருகிறார்.

''...காக்கும் தெய்வமே, கண்ணா!...காத்தல்தொழில் உன்தொழில் அல்லவா?...''

தனது மனப்பாரம் முழுவதையும் அவனது திருவடிகளில் இறக்கிவைத்து விடும் ஆதங்கத்துடன் பணிந்தெழுகிறாள்.

எதிரேவசந்தமண்டபத்துத் திரையிலே ஆனந்தமாகப் பள்ளிகொள்ளும் அனந்தசயனன்.

கௌசல்யாவால்இரவு முழுவதும் உறங்கவே முடியவில்லை. கதிரவன் எப்போது தோன்றுவான் என்று காத்திருந்து கோயிலுக்கு ஓடிவருகிறாள். இங்கே அவன் ஆனந்தமாக சயனித்திருக்கிறான்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தனைந்தான், ''அரங்கத்தாமா பள்ளி எழுந்தருளாயே'' என்று எவ்வளவோ சொல்லி தொண்டரடிப் பொடியாழ்வார் எழுப்பியும் இவன் இன்றுவரை துயில்கிறானே!

இரவு அவள் கேட்டசெய்தி அவன் அறியாததா?

'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கை வன்னிப்பிரதேசத்தில் ஆரம்பமாகிவிட்டதாம்.

காத்தல் தொழில் செய்பவன் விஷ்ணு என்கிறார்கள் நீ இப்படிக் கண்ணுறங்கலாமா?

இராணுவ நடவடிக்கைக் காலங்களில் அவளுக்கேற்பட்ட அனுபவங்கள் மனதுள் தோன்றி நடுங்க வைக்கின்றன.

அதைவிட இது உக்கிரமானதாயிருக்கும். வெற்றி நிச்சயத்தில் அழிவும் மரணங்களும் நிச்சயம்.

கவிதாவும், கானப்பிரியாவும் என்ன செய்வார்களோ? எவ்வளவு கஷ்டப்படுகிறார்களோ? இரவு முழுவதும் இதே சிந்தனை.

...கிரகநிலை சரியில்லையோ? இல்லாவிட்டால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா?...

அக்காவின் குடும்பம், கவிதா, பிரியா, எல்லோருக்காகவும் நவக்கிரகத்திற்கு அர்ச்சனை செய்ய வேண்டும். அர்ச்சனைச் சீட்டைப் பெறச் சென்றால், அங்கே சுவரிலும் அவன் பள்ளிகொள்ளும் காட்சி!

''நீ உறங்குவதாலே தான் இத்தனை அனர்த்தங்களோ? எம் வேதனைக் கூக்குரல் உன்னை விழித்தெழ வைக்காதா?...''

அர்ச்சனைச் சீட்டைப் பெற்றுக் கொண்டு அவள் கோயிலை வலம் வர ஆரம்பிக்கிறாள்,

குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி, தேவியர் இருவரும் சேவை செய்ய பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருவரங்கன் உள்ளேயும் திருவாசல் முகப்பிலும்.

''...அம்மா, தாயே அவன் தான் துயில்கிறான் மேலும் இதமாகத் துயில பாதங்களை வருடிக் கொடுக்கிறீர்களா?''

தாய்மாருக்குத்தானே தாம் படும் துயரம் புரியும். தட்டி எழுப்பி, போரின் உக்கிரத்திலே தவிக்கும் பிள்ளைகளைக் காக்க வேண்டுமென்று பரிந்துரைக்க மாட்டீர்களோ?... ஆழ்வார்களே நீங்களும் எதிரே நின்று இனிமையாகப் பாடித் துயில வைக்கிறீர்களா? ஏன் இப்படி எல்லோருமே இரக்க மற்றுப் போனீர்கள்...?''

கோயில் கோபுரத்திலே கிருஷ்ண பகவான் லக்ஷ்மி தேவியின் கரம்பற்றும் காட்சி.

''உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் மகள் கவிதாவின் திருமணக் காட்சியைக் கற்பனை செய்து அதற்கு அருள்புரி என்று வேண்டுவேனே. கற்பனைகள் கற்பனையாகவே போய் விடச் செய்து விடாதே ஐயா......''

ஆழ்வாராதியர்களைப் பணியும்போது மீண்டும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் நினைவிற்கு வருகின்றன. ஷெல் ஒலியும், வேட்டொலியும், விமானக் குண்டுவீச்சுகளின் அதிர்வுகளுமாய் போர் நடக்கும் பகுதி எவ்வளவு அல்லோல கல்லோலப்படும். அங்குள்ளவர்கள் எவ்வளவு அல்லற்படுவார்கள் கவிதாவும் பிரியாவும்......... ''கடவுளே, அவர்களையெல்லாம் காக்க மாட்டாயா?''

எதிரே அன்னை ஸ்ரீதேவி.

அம்மா, அம்மா, ... அன்பு மயமான அன்னை உருவிற்கு ஓர் அதீத சக்தி.

அம்மா, அம்மா, காப்பாற்று தாயே, எல்லோரையும் காப்பாற்று தாயே! காக்கும் தெய்வம் கண் துயில்கின்றான். நீயாவது பரிந்துரைக்க மாட்டாயா?. மனிதத்திற்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்திதான் இன்று எம்மைக் காக்க முடியும்; எங்களுக்கு அமைதியைத் தர முடியும்.

அன்னை திருமகளை வலம் வரக் காலடி எடுத்து வைத்தவள் நிமிர்கிறாள். கோபுரத்திலே அன்னை. மடியிலே குழந்தையோடு...

''அம்மா, தாயே சந்தானலக்ஷ்மி என் குழந்தைகளைக் காப்பாற்று...!''

உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த வேதனை பொங்க, மடை திறந்த வெள்ளமாகக் கண்ணீர் பொழிகிறது. அவள் கையேந்தி நின்று விம்முகிறாள். ''...என் பிள்ளைகள், என் குழந்தைகள், அவர்களை என்னிடமிருந்து ஏன் பிரித்தாய்?...''

''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கையின் போது இவர்கள் இடம் பெயர்ந்து சென்று கச்சாயில் இருந்த காலம். அடுத்த இராணுவ நடவடிக்கை எந்நேரமும் ஆரம்பிக்கலாம் என்னும் ஒரு நிலை.

அப்படியென்றால் இனி எங்கே போவது? வன்னிப் பிரதேசத்திற்கும் போகவேண்டிவரும் — என்பது எல்லோரதும் நம்பிக்கை. அப்படிப் போவதென்றால் கிளாலி படகுச் சேவையைத்தான் நம்ப வேண்டும்.

இவளது அக்கா இராஜேசின் குடும்பம் வன்னிக்குப் புறப்பட்டபோதுதான் அந்த ஆலோசனையை அக்கா கூறினாள்.

கௌசல்யாவின் கணவன் ஐங்கரன் கச்சேரியில் வேலை செய்வதால் அவர்கள் உடனேயே பறப்பட முடியாது,

கடைசி நேரம் எல்லோரும் ஒன்றாகக் கிளாலியைக் கடப்பது பெரும் சிரமம். ஆனால் பெண்பிள்ளைகளை இங்கு வைத்திருப்பதும் பயம். எனவே மூத்த இரு பிள்ளைகளான கவிதாவையும், கானப்பிரியாவையும் கௌசல்யாவின் அக்காவின் குடும்பத்துடன் வன்னிக்கு அனுப்ப ஐங்கரன் முடிவு செய்தார்.

கௌசல்யாவிற்குப் பிள்ளைகளைப் பிரிவதில் துளியும் விருப்பமேயில்லை.

நாளைக்கு என்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்? எல்லாரும் ஒன்றாக இருக்கையில் என்ன நடந்தாலும் பரவாயில்லையென அவள் கலங்கினாள்.

''கண்ணுக்கு முன்னாலை பிள்ளையளுக்கு ஒண்டு நடந்தா என்ன செய்வீர்கள்?''

இந்தக் கேள்வியில் கௌசல்யா ஆடிப்போய் விட்டாள். கற்பனை செய்யவே பயந்தரும் அந்தக் கோரம் எம் நாட்டில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ பேருக்கு நடந்ததுதானே.

இறுதியில் கவிதாவும் கானப்பிரியாவும் பெரியம்மாவின் குடும்பத்துடன் வன்னிக்குச் சென்றார்கள்.

''என்பிள்ளைகளைக் காப்பாற்றி என்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிடு தாயே...''

வலம்வந்து பணிந்தெழுந்து சந்தான கோபாலனைத் தொழச்சென்றாள்.

''குண்டுக்கு மட்டுமல்ல பாம்புக்கும் பயப்படவேண்டியிருக்கிறதம்மா'' என்று பிரியா எழுதியது நினைவிற்கு வருகிறது.

''பாம்பிலேநர்த்தனமாடும் திறமைகொண்ட உனக்கு பாம்பு, குண்டு ஷெல் எல்லாவற்றிடமுமிருந்தும் என் பிள்ளைகளையும் உறவினர்களையும் காக்க முடியாதா? மனமிரங்கு கோபாலா...''

வேண்டிக்கொண்டு திரும்பியவளுக்கு கருடாழ்வாரின் தரிசனம் மனதிற்கு இதமாக இருக்கிறது. பாம்பும் 'பொம்மரும்' என் பக்தர்களை எதுவும் செய்யாது என்பது போன்ற தோற்றம்.

''ஐயா! அன்று பாண்டவருக்குத் தூது சென்று தோற்றதனால், எங்கள் விடயத்தில் நீ சமாதான முயற்சியே செய்யவில்லையோ?...''

போரே தொடங்காமல் சமாதானம் வந்து விட்டால்...'' என்று அவள் எவ்வளவு ஆசைப்பட்டாள். சமாதானம் வரவேண்டுமென்று நித்தமும் வேண்டினாளே? ஆனால்...

பிள்ளைகள் சென்று இரு வாரங்களுள் அவர்கள் எதிர்பார்த்த இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து விட்டது.

வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு ஓடிச் சென்ற ஜனங்கள் மீண்டும் பெருக்கெடுக்கிறது. ஜன நெருசலிடையே பெரும்பாடுபட்டு கிளாலிக்குச் சென்றால் ஷெல் வீச்சும் விமானக் குண்டுமாரியும்... அவற்றிடையே அவர்கள் தப்பிப் பிழைத்ததே இறைவன் செயல்தான்.

உக்கிரம் சிறிது தணிய படகேறலாமென்று பளையில் நண்பரொருவரின் வீட்டிலே நின்ற போது ஜனகங்கை எதிர்த்திசையில் பாயத் தொடங்கியது.

''சனங்களெல்லாம் வலிகாமம் போகுது'' சந்தோஷத்துடன் சிலர் வந்து கூறினார்கள்.

ஆனால் அவளும் ஐங்கரனும் சங்கடப்பட்டனர். பிள்ளைகளை வன்னியில் விட்டுவிட்டு வலிகாமம் போவதா? பிள்ளைகள் வலிகாமம் வந்து சேர்வது எவ்வளவு கஷ்டமாயிருக்குமென்பது அவர்கள் அறியாததா?

வலிகாமத்திலும் அதிர்ச்சியையும் வேதனைகளையும் தான் சந்திக்க நேரும் என்பதும் எதிர்பார்ப்பது தான்.

அதனால் எப்படியாவது வன்னிக்குச் சென்று விட வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்தார்கள். அத்தனையும் வீணாகியது. வீட்டுக்குத் திரும்பினார்கள். அங்கும் வீடென்ற பெயரில் சில சுவர்கள் இருந்தன.

இந்த மனக்குரங்கு எங்கெல்லாம் செல்கிறது? இறைவனை ஒருமனமாகப் பிரார்த்திக்க முடியவில்லை. எங்கள் மனம் பக்தியிலாழ்ந்து பிரார்த்திக்காததுதான் தவறோ? அதனாலே தான் இவ்வளவு கஷ்டமோ?

95ஆம் ஆண்டு ஐப்பசிக் கடைசி வெள்ளியன்று வலம் வந்து வணங்கவென எண்ணிச் சென்ற கோயில்களெல்லாம் பூட்டிக்கிடந்தது நினைவிற்கு வருகிறது.

மனக்குரங்கா? அப்படி இங்கிருந்து நினைத்ததே தப்பு.

ஆஞ்சநேயரின் பக்தி எம்மில் யாருக்கிருக்கிறது?

கோயில் முன்றலில் நெஞ்சைப் பிளந்து சீதாராமனை அதனுள் காட்டும் ஆஞ்சநேயரின் அந்த வடிவம்! அந்த பக்தி!

கண்ணா! இந்த முறையாவது சமாதானத் தீர்வொன்று ஏற்படவேண்டும். எமது பிள்ளைகள் இப்படி அநியாயமாகச்செத்துமடியும் நிலைமாற வேண்டுமென்று எவ்வளவு பிரார்த்தித்தேன்? இப்படிச் செய்துவிட்டாயே?

ஐந்து ஊர்கள் இல்லவிட்டால் ஐந்து வீடுகளாவது என்று சமாதானம் பேசித் தோற்று...

நிமிர்ந்த அவளது பார்வையில் கீதோபதேசம் செய்யும் கண்ணன்.

நீ செய்வதெல்லம் சரியென்கிறாயா? அவளது மனதைச் சோர்வு சூழ்ந்து கொள்கிறது.

அடுத்தது இராமபிரான்.

என்பிள்ளைகள் காட்டுக்குள் அகதிகளாக அலைகிறார்களோ என்னவோ? அவர்களுக்குத் துணையிருந்து காத்தருள் ஐயா.

போன கடிதத்தில் பிரியாவுக்கு மலேரியா என்று எழுதியிருந்தார்களே! காய்ச்சல் இரண்டு பேருக்கும் அடிக்கடி வருகிறதாம். அங்கே இப்படித்தானாம். மருந்து வசதியில்லையாம். பனடோலே சரியான விலையாம். வைத்தியசாலைக்கு மைல்கணக்கில் சைக்கிளிலே போகவே வருத்தம் கூடிவிடுமாம்.

இப்ப என்ன செய்கிறார்களோ அகதிமுகாமிலை காய்ச்சலோடை மருந்துமட்டுமில்லை, அன்னாகாரமும் இல்லாமல்...

ஐயோ என்ரை பிள்ளைகளுககு ஒன்றும் நடக்கக் கூடாது, ராமா அவர்களைக் காப்பாற்று. வனவாசத்தின் கஷ்டமும், கடுமையும் அறிந்தவன் நீ. உன்தாய் கோசலை பட்டவேதனையை அத்தனை தாய்மார்களும் படவேண்டுமென்று நினைக்கிறாயா?

அவன் சிரித்துக்கொண்டிருக்கிறான்,

அவனா நினைத்தான்? என்ன பேதமை?

ஹரே ராம், ஹரேராம்.

ஆண்டாள் சந்நிதிக்குப் போக அடியெடுத்து வைத்தவள்; முன் சுவரிலே பள்ளி கொள்ளும் பரந்தாமன் தேவியர் இருவரில் ஒருவரைக் காணவில்லை. அவனது கோரிக்கைக்குச் செவி சாய்த்துப் புறப்பட்டிருப்பாளோ?

அவளுடைய பிள்ளைகள் இறையருளால் அவளிடம் வந்து விட்டால்...?

என் பிள்ளைகளை இங்கே அழைக்க எவ்வளவு பாடு பட்டேன். முதலிலே பாஸ் கிடைக்கவில்லை. பின்னர் நோய். எத்தனையோ தடைகள். இன்று அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று கூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலை.

ஏன் கண்ணா, எம் துயர் உனக்குப் புரியவில்லையா? உறக்கம் கலையவில்லையா?

அவனைக் கடந்து சென்ற அம்மையார் வெங்கடேஸ சுப்ரபாதத்தையும் கூறிக் கொண்டு செல்கின்றார். திருப்பள்ளியெழுச்சிப் பாசுரம் போல பவ்யமாக ஆண்டவனைத் துயிலெழுப்பாது அவசர அவசரமாக அவனைத் தட்டி எழுப்புகிறது அந்த சுலோகம்.

எழுந்திரு எழுந்திரு
கோவிந்தா
எழுந்திரு கருடக்
கொடியோனே
எழுந்திரு திருமகளின்
அன்பனே
மூவுலகங்களுக்கும் மங்களம்
செய்

இப்படித்தான் அவனை எழுப்ப வேண்டும். அவன் எழவேண்டியது அவசரமும் அவசியமும். ''எழுந்திரு'' ''எழுந்திரு கோவிந்தா.''

அவளும் பக்தியோடும் நம்பிக்கையோடும் சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே வலம் வருகிறாள். ★

## உடைந்த சிறகுகள்

நாங்கள்
சிறகொடிந்த பறவைகள்!
இலக்கிய வானிலே
இன்பமாய்த் திரிந்த
இளஞ்சிட்டுக்கள்!
எமக்கு நாமே
விலங்கு மாட்டுகிறோம்!
நடப்பியல் நிகழ்வுகளை
நாளைவரும் சந்ததிக்குப்
படைக்க முடியாத
நடைப் பிணங்களாய்,
குறுகிய வட்டத்துக்குள்
எங்களைக்
குவித்துக் கொள்கின்றோம்!
வாருங்கள் கவித் தோழர்களே!
'வழக்கம் போல'
வாலிபத்தின் கனவுகளை
வார்த்தைகளில்
வடித்து வைப்போம்!
சமுதாயச் சாக்கடையைச்
சுத்திகரிப்போம்!!
நிலவெறிக்கும் நள்ளிரவிலும்
நலமாக நாமுலவும்
வேளை வரும்!
அவ்வேளை,
உடைந்தசிறகுகள் முளைக்கும்
எங்கள் ஆத்மாவின் ராகங்கள்
'மீண்டும்'
அரங்கேறும்!
அதுவரை...

-உடுவில்
அரவிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சத்தில் உயிரின வாழ்வு தேடுகின்ற விஞ்ஞானிகள்

பூமியைத் தவிர வேறெங்கும் உயிரினங்கள் காணப்படுவதற்கான தெளிவான முடிவுகள் இன்னமும் எட்டப்படவில்லை. இது சம்பந்தமான ஆராய்ச்சிகளின் முடிவுகள் பல வாதப் பிரதிவாதங்களையே தந்திருக்கின்றன.

சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் பூமி மட்டுமே அதிர்ஷ்டவசமாக சூரியனில் இருந்து பொருத்தமான ஒரு தூரத்தில் அமைந்துவிட்டதனால், அங்கே வெப்பம், ஒளி போன்ற காரணிகள் உயிரின வாழ்வுக்கு உகந்ததாக அமைந்தது எனக் கருத இடமுண்டு. அப்படியானால் பூமியை வலம் வரும் சந்திரனுக்கு ஏனோ உயிரினங்களைத் தாங்கும் பாக்கியம் கிட்டவில்லை.

செவ்வாயிலும், வியாழனில் காணப்படும் பெரிய சந்திரன் போன்ற உபகோளான இயூறோபா (Europa) விலும் உயிரினங்கள் காணப்படலாம் என்ற எண்ணம் வலுத்தே வருகிறது. மேலும் சூரிய குடும்பத்திலே பத்து வரையான அமைவிடங்களில் உயிரின வாழ்வு எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைவில் தென்படும் ஒவ்வொரு நட்சத்திரங்களும் ஒவ்வொரு சூரியன்கள் என்றால் அவற்றைச்சூழ வலம் வரும் கோள்கள் எத்தனை மடங்கு இருக்கும்? அங்கெல்லாம் உயிரின வாழ்வு இல்லாமலா இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

அதி உயர் வெப்பநிலையிலோ அல்லது உறைநிலையிலோ உயிரின வாழ்வை எதிர்பார்க்க முடியாது. எனினும் சூரியக் கதிர்களுடன் நேரடித் தொடர்பு இல்லாத ஆழமான பிரதேசங்களில் அவற்றை எதிர்பார்க்கலாம். அங்கே பூமியின் அக வெப்பம், இரசாயன சக்தி என்பன இவற்றுக்கு ஆதாரமாக அமையலாம்.

பூமியிலே ஒளிபுக முடியாத ஆழமான இருண்ட கடற்படுக்கைகளில் நிரந்தரமாக உயிரினவாழ்வு குடிகொண்டே இருக்கிறது. அதேபோல் ஆழமான பாறைகளின் இடுக்குகளிடையேயும் உயிரினங்கள் வாழத்தான் செய்கின்றன.

இதன்படி பார்க்கப் போனால், பிரபஞ்சத்தில் வேறெங்கும் கூட கோள்களின் மேற்பரப்பில் மட்டும் அல்லாது ஆழமான பிரதேசங்களிலேயும் உயிரினச் சுவடுகள் தென்படலாம் என்ற ஆராய்ச்சி வலுக்கிறது.



பதின்மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாயிலிருந்து வந்து பூமியில் வீழ்ந்த விண்கல் ஒன்றின் மாதிரியை எலக்ட்ரோனிக் நுணுக்குக் காட்டியில் உருப்பெருக்கிய போது அதில் நுண்ணுயிர் சுவடுகள் — ஆதாரங்கள் தென்பட்டன.

பதின்மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய்க் கிரகத்திலிருந்து வந்து பூமியில் விழுந்த விண்கலம் ஒன்று அண்மையில் ஆராயப்பட்டபோது அங்கே நுண்ணுயிர் சுவடுகள் — ஆதாரங்கள் — தென்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக உயிரின வாழ்வை கிரகங்களின் மேற்பரப்பிலே மட்டுமே தேடி காலத்தை வீணடித்து விட்டதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா' உணர்கின்றது.

தற்போது வியாழனின் இயூறோபா என்ற பனிக் கட்டிக் கோளை ஆராயும் நாஸாவின் விண்கலம் 1997 இல் முடிவடைய இருந்த தனது உயிரினத் தேடல்களை 1999 முழுவதற்கும் என நீடித்துள்ளது. இதே போல சனிக்கிரகத்திலும் ஆழமான உயிரியல் ஆய்வுகளை மேற்கொள்ள இந்த ஆண்டில் கலம் ஒன்று ஏவப்படுதலுக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

பெரும் செலவில் — பெரு மெடுப்பில் — மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகள் உயிரினங்களை பூமிக்கு அடையாளம் காட்டினால் அது பெரும் வெற்றியே.

- சிவா

# ஜூன் 30 இல் "அபின் யுத்தம்" திரைக்கு வருகிறது!

ஜூன் 30 ஆம் திகதி சீனத் திருநாட்டிற்கு மாபெரும் வெற்றிநாள். சீன வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயம் ஒன்று அன்றுடன் துடைத்தெறியப்படுகிறது.

சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் பிரிட்டனின் காலனி நாடாக இருந்த ஹொங்கொங் மீண்டும் தன் தாய்நாடான சீனாவுடன் இணையப்போகும் அதே நாளில் சீனாவில் திரைப்படம் ஒன்றும் ரிலீஸாகிறது.

'ஓப்பியம் வோர்' (அபின் யுத்தம்) என்னும் பெயரில் சீனாவின் புகழ்பெற்ற படத் தயாரிப்பாளர் ஜை ஜின் என்பவரின் கைவண்ணத்தில் உருவான இந்தத் திரைப்படம் ஹொங்கொங்கின் வரலாற்றில் இடம்பிடிக்கவுள்ளது.

வர்த்தக நோக்கமாக சீனாவுக்குள் நுழைந்த ஆங்கிலேயர்கள் அங்கு ஒப்பியம் (அபின்) என்கிற போதைப் பொருளை அறிமுகப்படுத்தினர். அதனால் நாடு முழுவதும் சீனர்கள் அதற்கு அடிமையாகி நடைப்பிணங்களாக மாறி அலையத் தொடங்கினர்.

இந்த அவலத்தை சித்திரிக்கிறது இந்தத் திரைப்படம்.

பின்னர் சீனர்கள் ஓப்பியத்தை (அபினை) எதிர்த்துப் போராடக் கிளம்பியபோது அங்கு ''அபின் யுத்தம்'' வெடித்தது. இந்த யுத்தமே ஹொங்கொங்கை சீனாவிடம் இருந்து பறித்து பிரிட்டனின் காலனியாக்கியது.

ஆங்கிலேயரின் தந்திரத்தை தத்ரூபமாக எடுத்துக் காட்டும் இத்திரைப்படம் கடந்த ஒரு வருடகாலமாகத் தயாரிக்கப்பட்டு வந்தது.

தற்போது அது திரைக்கு வரத்தயாராகிவிட்டது.

''பிரிட்டனின் ஆதிக்கத்தில் எங்கள் ஹொங்கொங் இருந்த அவமானமும் ஜூன் 30ஆம் திகதியுடன் துடைக்கப்படுகிறது. பழைய வடுக்களை உலகத்துக்கு வெளிச்சமாய் காட்டுவதன் மூலம் எங்கள் வேதனைக் குமுறலுக்கு வடிகால்தேடிக்கொள்கிறோம்'' என்கிறார் இப்படத்தின் தயாரிப்பாளர் ஜைஜின்.

இத்திரைப்படத்தை தயாரிக்க ஒன்றரைக்கோடி டொலர்கள் செலவாகியுள்ளது. சீன அரசும், பலநிறுவனங்களும் இதற்கான நிதியை தாராளமாக அள்ளி வழங்கியுள்ளன. ★

## திருத்தம்

**இச்சஞ்சிகையின் பக்கம் V இல் பிரசுரமாகியுள்ள கட்டுரையின் தலையங்கம் —**

**பழந்தமிழ் இலக்கியங்களில் ஊறித்திளைத்த பண்டிதர் சச்சிதானந்தனின் கவித்துவப் பிழிவு —என்றிருக்க வேண்டும்.**

**'திழைத்த' என்ற சொற்பிழையை 'திளைத்த' எனத் திருத்தி வாசிக்கவும்.**

# விரைவில் 3 ஆம் உலகயுத்தம்

# பிரபல ஜோதிடரின் ஆருடம்

அண்மையில் கல்கத்தாவில் நடைபெற்ற இருபதாவது அகில உலக ஜோதிட நிபுணர்களின் மாநாட்டில் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜோதிடர் கருப்பையாத் தேவர்.

உலகின் எதிர்காலம் குறித்து அவர் வெளியிட்ட ஜோதிடம் மிகப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர் கூறுவது என்ன தெரியுமா?

28-05-1999 இல் மூன்றாம் உலக யுத்தம் மூளும்.

மேஷ ராசியில் சனியுடன் குரு சேருவதே இதற்குக் காரணம். சனி, செவ்வாய், ராகு, கேது, யுரேனஸ், புளூட்டோ போன்ற பாவக் கிரகங்கள் ஆறாம் பலம் பெற்றுத் திகழும். இவை விருச்சிகம், மகரம், கும்பம் போன்றவற்றில் சஞ்சாரம் செய்யுங் காலத்தில் உலகத்தில் பேரழிவு உண்டாகும்.

உலக ஜாதகத்தில் லக்கினத்தில் விருச்சிக ராசியில் புளூட்டோ இருப்பது அழித்து பின் சீர்செய்தலைக் காட்டும். முதலாவது, இரண்டாவது மற்றும் மகாபாரத யுத்த காலங்களில் இருந்த கிரகநிலையே மேற்சொன்ன காலகட்டத்தில் இருப்பதால் மூன்றாவது உலக யுத்தம் நிச்சயம்.

குருவும், சனியும் சேர்ந்தால் அதுவும் குறிப்பாக மேஷ, ரிஷப ராசிகளில் சேர்ந்தால் உலகம் முழுவதும் வம்பு, வழக்குகள் வரும்.

ரஷ்யாவில் உள்நாட்டுச் சண்டை, பொஸ்னியாவில் பல கொலைகள், கம்போடியா, சோமாலியா, இலங்கை ஆகியவற்றில் நெருக்கடி, ஆப்கானிஸ்தானில் தலிபானுக்கு எதிராக அமெரிக்க நடவடிக்கை என உலகம் முழுவதும் பல இக்கட்டான பிரச்சினைகள் உள்ளன. இவை பெரிதாக வளர்ந்து பல மேற்கு நாடுகளிடையே உலக யுத்தம் மூளும்.

24-07-1997 இலிருந்து 24-07-2032 வரை உலகத்திற்கு மிக மோசமான காலமாக இருக்கும்.

13-01-2001 வரை மழை பெய்யாது. உயிர் மற்றும் பயிர், தானியங்கள் நாசமாகும். நோயும், விபத்தும் ஓங்கி நிற்கும்.

பெரு நெருப்பும், சூறாவளியும் காட்டையும் நாட்டையும் அழிக்கும். கொலையும், கொள்ளையும் பெருகும். எங்குமே மழை இருக்காது. நல்லாட்சி செய்ய அரசுகளுக்கு ஆசை இருக்காது.

பின்னர் 14-01-2001 முதல் 14-04-2001 வரை பெரு மழை பெய்யும். இதில் மூன்று நாள்கள் உலகம் முழுவதும் இருள் மூடி இருக்கும். யானையின் துதிக்கையிலிருந்து தண்ணீர் கொட்டுவது போல மழை பெய்யும். இதனால் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டுபோவர்.

20-07-2000 ஆம் திகதியில் குருவும் சனியும் ரிஷபத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் சந்திக்கும் போது உலக அழிவு ஆரம்பமாகும். 1940 ஆம் ஆண்டு குருவும் சனியும் ரிஷப ராசியில் இணைந்தபோதுதான் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது.

24-10-2001 ஆம் திகதி முதல் 24-05-2003 ஆம் திகதிக்குள் ஒரு மனிதனின் தலைமையில் யுத்தம் தொடங்கி 27 ஆண்டுகள் உலக யுத்தம் என்ற பேரழிவு தொடரும்.

கிழக்கு நாட்டில் ஏழையாக இருக்கும் ஒருவன் — அவனுக்கு இப்போது வயது முப்பது — இறுதியில் பெரும் தலைவனாகி கிறிஸ்தவ மதத்தை அழிக்கப் புறப்படுவான். முஸ்லிம் நாடுகள் மற்றும் ரஷ்யாவின் உதவியோடு மீண்டும் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிப்பான்; நீலத் தலைப்பாகை அணிந்து வெள்ளைக் குதிரையில் கம்பீரமாக அமர்ந்து வழி நடத்துவான்.

முன்பே வேத நூல்களிலும் பைபிளிலும்மற்றும்நாஸ்டர்டாம்ஸ் என்ற தீர்க்கதரிசியாலும், ஞானசித்தர் பரஞ்ஜோதி சுவாமியாலும் 2000 ஆம் ஆண்டில் உலகத்தில் ஏற்படப்போகும் அழிவு குறித்து பிரஸ்தாபிக்கப்பட்

(XII ஆம் பக்கம் பார்க்க)


# பிரமிக்க வைக்கும் பிரமிட்டுக்கள்

உலக அதிசயங்கள் ஏழு என்கிறது வரலாறு. இவற்றில் ஒன்றான பிரமிட் மட்டுமே இன்று கண்ணில் படக்கூடியதாக நிலைத்து நிற்கின்றது. இதன் புதிர்கள் பல இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

எகிப்தில் பல பிரமிட்டுக்கள் காணப்பட்டாலும் அவற்றில் மிகப்பெரியது 481 அடிஉயரமானதாகும். இந்த மிகப்பெரிய பிரமிட்டே உலகின் முதலாவது அதிசயம் எனப்படுகிறது. ஒவ்வொன்றும் 2 முதல்50தொன்னுக்கு இடைப்பட்ட பாரிய கற்துண்டங்களால் கட்டப்பட்ட இப்பிரமிட்டு 4500 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது.

இன்றைய 40 மாடிக் கட்டடம் ஒன்றின் உயரத்தை ஒத்த இப்பெரிய பிரமிட். 13 ஏக்கர் அடித்தளப்பரப்பினில் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இன்றுகூட கணனிகளினதும் பாரிய இயந்திரங்களினதும் பொறியியலாளர்களினதும் உதவியுடன் இப்படியானதோர் கட்டமைப்பை அமைத்திடல் முடியுமா என்றால் அது இயலாத காரியம்தான்.

இது எதற்காக கட்டப்பட்டது? இதனுள்ளே சியோப்ஸ் மன்னனின் கல்லறை இருக்கிறதா? எங்கே இருக்கலாம்? உள்ளே பெருமளவு தங்கமும், வெள்ளியும் பிற பெறுமதியான செல்வங்களும் புதைக்கப்பட்டு இருக்கின்றனவா? -என்றெல்லாம் காலத்துக்குக் காலம் பல ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்க முயன்றிருக்கிறார்கள்.



சுமார் 2500 வருடங்களுக்கு முன்னர் இதை ஆராய்ந்த ஹெரோடொரஸ் (Herodotus) என்ற கிரேக்க சரித்திர நிபுணர் அக்கால மதகுருமார் பலரின் கருத்துகளை ஆதாரமாக வைத்தே சில தகவல்களை வெளியிட்டிருந்தார்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அடிமைகள் இக்கட்டுமானப்பணிகளில் 20 வருடங்கள் ஈடுபட்டதாகவும், வேலைகள் தொடங்கு முன்னரே நைல் நதியிலிருந்து 10 வருட கடும் உழைப்பினால் அமைக்கப்பட்ட பாதைவழியே கற்கள் எடுத்து வரப்பட்டதாகவும், எனவே ஆகக்குறைந்தது 30 வருடங்கள் கடுமையான உழைப்பின் மூலமே இவை கட்டிமுடிக்கப்பட்டன எனவும் தெரிவித்திருக்கிறார் அவர். ஒவ்வொரு 3 மாதமுடிவிலும் முற்றிலும் புதிய—ஒரு லட்சம் பேர்கொண்ட— அடிமைகளின் அணியொன்றுஇப்பணிக்கென தெரிவுசெய்யப்பட்[illegible]ரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1966 இல் கலிபோர்னியா

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்த பண்டிதர் சச்சிதானந்தனின் கவித்துவப் பிழிவு

இலங்கையில் நாற்பது, ஐம்பது, அறுபதுகளில் பிரபலமான கவிஞராக விளங்கியவர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள். இவர் எழுதிய கவிதைகள் அனைத்தும் இன்றும் உயிர்த்துடிப்புள்ளனவாகவும், சுவை மிக்கனவாகவும் உள்ளன. தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் மிக்க இவர் பாடிய பாடலடிகளாகிய—

''ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும்
ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்'' என்பது இன்றும் எல்லோருடைய நெஞ்சிலும் நிறைந்துள்ளது. இக்கவிதையடிகள் இவருடையது எனத் தெரியாத சிலர் பாரதிதாசன் பாடியது, காசிஆனந்தன் பாடியது எனத் தவறுதலாக மேடையிலே கூறி வருவதை யானறிவேன்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலே பாண்டித்தியமுடைய பண்டிதர் அவர்கள் லண்டன் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டம் (M. Phil)பெற்றவர்; கல்வி உளவியலில் ஆழமான புலமை படைத்தவர். பலாலி ஆசிரியர் கலாசாலையிலே உப அதிபராகவும் பணி புரிந்து ஓய்வு பெற்ற இவர் அண்மையில் எழுதிய ''யாழியல்'' எனும் நூல் அறிஞர்களுடைய பாராட்டுதல்களைப் பெற்றது. இத்தகைய சிறப்புமிக்க பண்டிதர் அவர்கள் எழுதிய ''ஊதுகுழல் சத்தம்.......'' என ஆரம்பிக்கும் பாடல் மிகவும் அற்புதமானது. அக்கவிதையின் சிறப்பினை இனி நோக்குவோம்.

காங்கேசன்துறையிலிருந்து அக்காலத்தில் ஒரு நாளைக்கு நாலைந்து புகைவண்டிகள் கொழும்பு நோக்கிச் செல்வதுண்டு. காலையில் யாழ்தேவி, மத்தியானம் ''இன்ரசிற்றி'',ஒரு மணியளவில் உத்தரதேவி, மாலையில் மெயில்வண்டி. இவை தவிர சரக்குகளை ஏற்றிச் செல்லும் வண்டி என இப்பட்டியலை அடுக்கிக்கொண்டே போகலாம். இன்றைக்குச் சில குழந்தைகளுக்கு புகைவண்டியென்றால் என்ன என்றே தெரியாது. இது காலம் செய்த கோலம்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு செல்லும் புகைவண்டியை மையமாக வைத்து இவர் பாடிய பாடலே ''ஊதுகுழல் சத்தம்'' என ஆரம்பிக்கும் பாடலாகும்.

அந்தக் காலத்தில் கொழும்பில் உத்தியோகம் பார்ப்பவர்கள் வார இறுதியில் சலுகைக் கட்டணத்தில் புகையிரதச் சீட்டுக்களைப் பெற்று

**காரை செ. சுந்தரம்பிள்ளை**

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டு வருவர். ஞாயிற்றுக்கிழமை இரவு செல்லும் கடைசித் துரிதகதி (Express) புகைவண்டி மூலம் கொழும்புக்குத் திரும்பிச் செல்வர்.

புகையிரத நிலையத்துக்கு அருகில் இருப்பவர்கள் புகைவண்டி வரும் சத்தத்தைக் கேட்டவுடனேயே வீட்டிலிருந்து ஓடோடிச் சென்று வண்டியில் ஏறிக்கொள்வர்.

ஒரு நாள், கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் ஒருவர், இவ்வாறு ஓடோடிச் சென்று புகைவண்டியில் ஏறிக்கொள்கிறார். பளையில் உள்ள புகையிரத நிலையம் வந்ததும் தான் கொண்டுவந்த உணவுப் பொதியை அவிழ்த்து உண்ணத் தொடங்கினார். இதனைக் கண்ட அருகிலிருந்த நண்பர் ஒருவர் ''ஏனப்பா புகைவண்டியில்தானே உணவகம் (Buffet)

(X ஆம் பக்கம் பார்க்க)

# தண்ணீர்! தண்ணீர்!! இது உலகப் பிரச்சினை

**பகுதி II**

**உலகில் உருவாகிவரும் தண்ணீர்ப் பிரச்சினை குறித்து கடந்த வார சஞ்சீவியில் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இது.**

### இந்தியாவில் தண்ணீர்ப் பிரச்சினை

இந்தியாவில் தமிழகத்தில் சென்னை நகர மக்கள் ஒவ்வொரு வருடமும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். காவிரி நீர், கிருஷ்ணா நீர் என மாயமான்கள் தோன்றி மறைந்தாலும் இந்த இரு நதிகளுடன் வேறு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதும், இந்த விடயம் முற்றிலுமாக ஓர் அரசியல் பிரச்சினையாகக் கையாளப்படுவதும் துர்ப்பாக்கியமானதாகும்.

சென்னை நகரின் நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் — அதாவது காமராஜர் தமிழக முதல்வராக இருந்தபோது — தீவிரமாக ஆராயப்பட்டது. கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உற்பத்திக்கான செலவினங்கள் ஆகியவை காரணமாக அது கட்டுபடியாகாத திட்டமாக அமைந்தது. அதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

### ஆல்மட்டி அணை விவகாரம்

கிருஷ்ணா நதி இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகிறது. இந்த நதியை மறித்து கர்நாடக அரசு ஆல்மட்டி என்ற அணைக்கட்டை கட்டியுள்ளது. இதனால் கர்நாடக — ஆந்திர மாநில அரசுகளிடையே முறுகல் நிலை உருவாகியுள்ளது.

கிருஷ்ணா நதியின் நீரை மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் பயன்படுத்தி வருகின்றன. இந்த நதியின் நீர்ப் பங்கீடு தொடர்பாக ஏற்கனவே ஓர் உடன்பாடு உள்ளது. இந்த உடன்பாடு 2000 ஆம் ஆண்டில் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே காணப்பட்டுள்ள உடன்பாட்டில் ஆல்மட்டி அணை பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி கர்நாடக அரசு ஆல்மட்டி அணையின் உயரத்தை அதிகரித்துள்ளது. இந்த அணைக்கட்டின் மூலம் தேக்கப்படும் நீரின் அளவு, உடன்பாட்டின்படி கர்நாடகத்திற்குச் சேரவேண்டிய நீர்ப் பங்கைவிட அதிகமாகும். இதனால் இயற்கையாக நதி ஓட்டத்தின்படி ஆந்திராவுக்கு வரவேண்டிய நீர் தடுக்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக முடிக்கத் தேவகௌடாவின் ஐக்கிய முன்னணி அரசு 900 கோடி ரூபாவை ஒதுக்கியது. இதில் அவரது மாநிலமான கர்நாடகத்தில் உள்ள ஆல்மட்டி அணைக்கட்டுக்கு மட்டும் 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அதே நேரம் ஆந்திர மாநில நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 22 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் பிரச்சினை உருவானது. அதனைத் தீர்ப்பதற்கு பீகார், தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநில முதல்வர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நதி நீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு இத்தகைய குழுக்களை அமைப்பது வழமையாகக் கையாளப்படும் ஒரு முறை அல்ல.

### இலங்கையில் நீர்ப் பிரச்சினை

இலங்கை தனித்தீவாதலால் இன்னொரு நாட்டுடன் நதியைப் பங்கீடு செய்யும் பிரச்சினை எழவில்லை.

அதேசமயம் இந்தியாவில் மாநிலங்களுக்கிடையே நதி நீரைப் பங்கிடுவது போன்ற பிரச்சினைகளும் இங்கு மாகாணங்களிடையே எழவில்லை. எனினும் எதிர்காலத்தில் அத்தகைய பிரச்சினைகள் எழக்கூடும்.

இலங்கையைப் பொறுத்தவரை பெருமளவு நீர் சரிவரப் பயன்படுத்தப்படாமல் கடலுக்குள் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது.

இலங்கையில் [illegible]ணாயிரம் அருவிகள் உள்ளன. இவை 20 கிலோமீற்றரிலிருந்து 150 கிலோமீற்றர் வரை பல திசைகளிலும் பாய்ந்து செல்கின்றன. இந்த நீர் முழுவதையும் கடலுக்குச் செல்லவிடாது தேக்கிவைத்துப்பயன்படுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டால் இங்கு நீர்ப் பிரச்சினையே ஏற்படாது.

இலங்கையில் குழாய் கிணற்றுத்திட்டம் பிரபலமடைந்து வருகிறது. இதன் மூலம் பெருமளவு நிலத்தடி நீர் வெளியே எடுக்கப்படுகிறது. இந்த நன்னீர் மீண்டும் திட்டமிட்ட அடிப்படையில் நிலத்தினுள் இட்டு நிரப்பப்படவேண்டும். அதாவது மழைகாலத்தில் குளங்கள், கேணிகள் போன்றவற்றில் நன்னீர் தேக்கிவைக்கப்படவேண்டும். ஆனால் இது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை.

இவ்வாறு நிலத்தடி நீர் மீண்டும் இட்டு நிரப்பப்படாமல்வெளியேறிக்கொண்டிருப்பது வரட்சிக்கு வழிகோலும்.

### காரைநகரில் தண்ணீர்ப் பிரச்சினை

இரண்டாவது உலகயுத்தத்தின்போது காரைநகரில் நீலன்காடு என்ற இடத்தில் ஒரு சிறிய கடற்படைத்தளம் அமைக்கப்பட்டது. அதுவே தற்போது வடபகுதி கடற்படைத்தளமாக வளர்ச்சியடைந்துள்ளது.

கடற்படைத்தளம் அமைந்துள்ள பகுதியில் குடிதண்ணீர் கிடைக்காமையால் கடற்படையினர் 'பவுஸர்கள்' மூலம் சுன்னாகத்திலிருந்து தண்ணீரைப்பெற்று வந்தனர். ஆனால் காலப்போக்கில் இது பல்வேறு காரணங்களால் சாத்தியமற்றதாகப் போய்விட்டது.

இந்நிலையில் மாற்றுவழி ஒன்றை நாடவேண்டிய கட்டாய நிலை உருவானது. கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் [illegible]படுத்தப்பட்டது. நன்னீரைப் பெறுவதற்கு வேறுமாற்று வழிஏதும் இல்லாத காரணத்தாலும், நாட்டிலுள்ள சூழ்நிலையில் படைத்துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாலும் உற்பத்திச்செலவு பற்றி யாரும் அக்கறை கொள்ளவில்லை.

ஆனால் பொதுமக்களின் நீர்த்தேவையை இத்தகைய திட்டங்களின் மூலம் தீர்த்து வைப்பது சாத்தியமற்றதாகும்.

இந்த முறையால் நன்னீரைப் பெறுவதற்கு பெரும் செலவு ஏற்படும்.

இலங்கையின் ஒருபுறத்தில் பெருமளவு நன்னீர் கடலுக்குள் வீணாக, மறுபுறத்தில் பெரும் செலவில் கடல்நீர் நன்னீராக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

### தானிய உற்பத்திக்கு பயன்படும் நீர்

இவ்வாறு உலகின் பல பகுதிகளில் நன்னீர் கடலுக்குச் சென்று வீணாகிக் கொண்டிருக்கையில் நன்னீர் வளங்கள் இல்லாத நாடுகள் தானிய உற்பத்திக்காக அயல் நாடுகளிலிருந்து நீரை விலைக்கு வாங்குகின்றன.

**- கஜனி -**

ஒரு தொன் தானியத்தை உற்பத்தி செய்ய சுமார் ஆயிரம் தொன் நீர் தேவைப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயத்திற்காக இவ்வாறு நீரை விலைக்கு வாங்குவதால் தானியத்தின் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. இதனால் சில நாடுகள் தானிய உற்பத்தியைக் கைவிட்டு அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத் தொடங்கிவிட்டன.

அந்நாடுகளில் நிலமும் ஏனைய வளங்களும் இருந்த போதிலும் நன்னீர் இல்லாததால் விவசாயம் செய்ய முடியவில்லை.

மறுபக்கத்தில் சில நாடுகள் தங்கள் நாட்டிலுள்ள நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் அதை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு, உணவு தானியங்களை இறக்குமதியும் செய்கின்றன.

### ஐ. நா. முயற்சி

வரட்சி மற்றும் குடி நீர்ப் பிரச்சினையைப் போக்கும் தினமாக ஜூன் 17 ஆம் திகதியை ஐ.நா. பிரகடனப் படுத்தியுள்ளது. இதற்கான புதிய முயற்சிகளிலும் ஐ.நா. இறங்கியுள்ளது.

கடல்நீரைச் சுத்திகரித்து குடிநீராக்குவதற்கு ஏற்படும் செலவினைக் குறைப்பதற்கு ஓமானில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் மத்திய கிழக்கில் நிலவும் நீர்ப் பஞ்சத்தைப் போக்க உதவுவதேயாகும்.

ஐ. நா சபை 1945 இல் உருவாக்கப்பட்டபோது 50 நாடுகளே அதில் அங்கம் வகித்தன. அதன்பின்னர் பலநாடுகள் சுதந்திரமடைந்து ஐ.நா. வில் அங்கத்துவ நாடுகள் ஆகின. இவற்றைவிட சில நாடுகள் துண்டாடப்பட்டதால் புதிய பல நாடுகள் உருவாகின. இதனால் தற்போது ஐ. நாவின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை இருநூறை எட்டுகிறது.

சுதந்திர எண்ணம், சுயநிர்ணய உரிமை, மொழிவழி, மதவழிச் சிந்தனைகள் வேகமாகப் பரவிவரும் இவ்வேளையில் தற்போதுள்ள நாடுகள் மேலும் சிதற வாய்ப்புக்கள் உள்ளன. அப்படியான ஒரு நிலை உருவாகும் போது உலகில் நதி நீர்ப்பிரச்சினைகள் மேலும் தீவிரமடையும்.

இறைமை கொண்ட தனி நாடான இந்தியாவில் இப்போதே நதி நீர்ப்பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. காலப்போக்கில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் சுதந்திரமான தனிநாடுகளாக உருவாகலாம் என வாதத்திற்கு எடுத்துக்கொள்ளுவோம். அப்போது நிலைமை எவ்வாறு இருக்கும்?

சோவியத் ரஷ்யா துண்டாடப்பட முன்னர் உலகிலேயே மிக நீளமான ரயில் பாதையை (திரான்ஸ் சைபீரியன்) கொண்ட நாடு என்ற பெருமையை அந்த நாடு பெற்றிருந்தது. ஆனால் அந்த நாடு தற்போது எங்கே?

இந்த நிலைமை இன்றுள்ள பலநாடுகளுக்கும் ஏற்படலாம். நாடுகள் பிரிபட அல்லது புதிதாகத் தோன்ற ஏற்படப்போகும் பல பிரச்சினைகளில் முதலிடத்தைப் பெறப்போவது நதிநீர்ப் பிரச்சினையும் குடிதண்ணீர்ப் பிரச்சினையுமே எனக் கூறின் அது மிகையாகாது.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ்

'எய்ட்ஸ்' என்பது ஒரு மேலைநாட்டுச் சமாச்சாரம். எமது பாரம்பரியம், கலாசாரம், சமுதாயக் கட்டுக்கோப்புகள் எல்லாம் இதற்கு வழிவிடுதல் இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் இது வெறும் செய்தியே — என்றெல்லாம் பலரும் தப்புக் கணக்குப் போட்டுவிடுகின்றார்கள்.

இவ்வாறு அலட்சியமாக ஒரு சமுதாயம் செயற்படுவதும் — எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று ஆராயாமல், எந்த இதயத்தில் எந்த வைரசு இடம்பிடித்து இருக்கிறதோ எனச் சிந்திக்காமல், வெளுத்ததெல்லாம் பால் எனத் திருப்திப்பட்டுக் கொள்ளுதலும் — எமது மண்ணிலும் தாராளமாக எய்ட்ஸுக்கான பாதையைத் திறந்துவிடும் வழிமுறைகள்.

இந்தத் தலைப்புப் பல தரப்பினருக்கும் பல விதமான சங்கடங்களைத் தரவல்லது. ஆனால் இதைப் பற்றிக் கதைப்பது இன்று சமுதாயத் தேவைகளில் மிகவும் முக்கியமான ஒன்றாகிவிட்டது. ஒளித்து ஒளித்துச் சிந்திக்கும் எமது பாலியல் மரபில் இருந்து விடுபட்டு, அறிவியல் வெளிச்சத்துக்கு இதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

எய்ட்ஸைப் பற்றிச் சொல்லப்போனால் பல விடயங்களைப் பச்சையாகச் சொல்லித்தான் ஆகவேண்டும், அதைக் கொச்சையாக எடுத்துக்கொள்ளாவிட்டால் சரி. இவை கசப்பான — அருவருப்பான — சில வேளைகளில் கவர்ச்சிகரமான அல்லது ஆபாசமான விடயங்கள் ஆகிவிடும்.

எய்ட்ஸ் பற்றிய பூரண அறிவும் விளக்கமும் இன்றைய இளம் சமுதாயத்தைப் பொறுத்தவரை மிகவும் அத்தியாவசியம். நம்பிக் கெட்டவர்கள் நாம். கவர்ச்சியில், சினிமா உலகில், மேனி மினுமினுப்பில் மயங்கித் தவிக்கும் இளம் சமுதாயம், இதில் உள்ளே உள்ளதையும் சற்று எட்டிப்பார்க்க முனைய வேண்டும். இரத்தமும், சதையும் அதிலே தொற்றிய வைரசுக்களும் இக் கலகலப்பில் மறக்கப்பட்டு — மறைக்கப்பட்டு — விடக் கூடாது.

பாலியல் பற்றிப் பேசக் கூடிய ஒரு சமுதாயம் இன்று பாலியற் கல்விக்குத் தன்னைத் தயார்படுத்த வேண்டிய கட்டம் — கட்டாயம் — எழுகிறது. எமது கலாசாரத்தின் முகத்திரையை இந்த எய்ட்ஸ் கிழித்துவிடக்கூடும்.

தற்போது எம்மவருக்கோ மேலைநாட்டுத் தொடர்புகளுக்குக் குறைவில்லை. பூகோளம் படித்த காலத்தில் புரியாத நாடெல்லாம் இப்போது புரிகிறது. இளைஞர்களும் யுவதிகளும் எங்கும் பறந்துகொண்டே இருக்கிறார்கள். அகதியோ, திருமணமோ, புலமைப் பரிசிலோ, கல்வியோ, லொத்தரோ ஏதோ ஒன்று வாய்த்து விடுகிறது.

கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு சமுதாயச் சூழலிலே போய் சுதந்திரமாக எப்படியெல்லாம் வாழலாமோ அப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று இளமை துடிக்கின்றது. இதற்கிடையில் இடைக்கிடை ஊரையும் எட்டிப்பார்க்காமல் இருக்கப் பாசம் விடுவதில்லை.

இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? எப்படி அங்கே வாழ்கிறார்கள்? என்ன பரிசு கொண்டு வருகிறார்கள்? என்றெல்லாம் ஆராயாமல் இருக்க மனது விடுவதில்லை. அன்புப் பரிசாக இதயத்தை விலைக்கு வாங்கும் HIV வைரஸுடன் இவர்கள் வராவிட்டால் சரி!

ஊர் அமைதியாக இருக்கிறது. என்ன நிம்மதியான — சலனம் ஏதும் அற்ற — தெளிவான — வாழ்க்கை. ஆனாலும் சில கிசுகிசுக்கள் இருக்கத்தான் செய்யும். ஊரிலே ஒருவருக்கு எய்ட்ஸ் என்ற வதந்தி பரவினால் ஏதோ சம்பந்தமே இல்லாதது போல நடித்த எத்தனையோ விழிகள் நிச்சயம் பிதுங்கும். இதுதான்



எய்ட்ஸ் நோயால் பாதிப்புற்ற சிறுவன்.

இரகசியக் கலாசாரத்தில் இருக்கின்ற ஆபத்து.

பத்து வருடங்கள் வெளிநாட்டில் தொடர்ந்து உழைக்கும் கணவன் அனுப்பும் பணத்துக்கோ குறைச்சல் இல்லை. ஆனால் அவன் தன் நினைவுடனே தான் காலங்கழிக்கிறான் என்று அவள் போடும் தப்புக்கணக்குத்தான் சில சந்தர்ப்பங்களில் காலை வாரிவிடுகிறது; குடும்ப மானத்தைக் கப்பல் ஏற்றி விடுகிறது.

வீட்டில் எத்தனையோ இடர்கள், சுமைகள். இவற்றில் இருந்து மீள பணிப்பெண்கள் என்றும் திருமணம் என்றும் வெளிநாட்டுக்குப் புறப்படும் பல அப்பாவி யுவதிகளின் கண்ணீர்க்கதைகள் தினமும் வெளிவந்தபடியே இருக்கின்றன. முகவர்களாலும், சென்று சேர்ந்த இடங்களில் எஜமானர்களாலும், ஏன் எதிர்பார்த்த கணவர்களாலும் ஏமாற்றப்பட்டு, பல சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் இவர்கள் இந்த எய்ட்ஸையும் எட்டிப்பார்க்க வேண்டிய நிலை வந்து விடுதலும் உண்டு.

இவற்றுக்கெல்லாம் மேலாக எமது இளைஞர்களும் ஏன் சில யுவதிகளும் கூட நடந்துகொள்ளும் சீர்கேடான மனவருத்தத்துக்குரிய முறைகள் பற்றி அங்கிருந்து வெளிவரும் செய்திகள் கோடி காட்டுகின்றன. இவர்கள் தாம் மேற்கத்தவர்களுக்குச் சற்றேனும் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை அங்கெல்லாம் நிரூபித்து வந்திருக்கிறார்கள்.

இங்கு நாம் பேசக்கூசும்

**சிறப்புக் கட்டுரை**

விடயங்களை பாலியற் கல்வி என்ற ரீதியில் பாடத்திட்டத்தில் புகுத்தி - விழிப்பான — எச்சரிக்கை உடைய — இளைய சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்ப அந்தந்த நாடுகள் முயன்றுகொண்டிருக்கின்றன. அத்துடன் நோய்களை இனங்காணும் நுட்பமும், எதிர்த்துப் போராடும் வலுவும், பணபலமும் கூட அந்த நாடுகளிடம் இருக்கின்றன.

எனினும்அங்கே நிலைமைகள் பின்னடைவையே காட்டுகின்றன என்றால், முன்னேற்றம் அடையாத மூன்றாம் உலக நாடுகளின் கதியைப் பற்றிக் கூறத் தேவையில்லை. பாலியல் பற்றிய போதிய அறிவின்மை, திறந்து பேசி பிரச்சினைகளை அணுகுவதில் கூச்சம், ஒளிவு மறைவான உறவுகளுக்குக் குறைவின்மை, வறுமை போன்ற காரணிகள் மேலும் இங்கு நிலைமைகளை மோசமாக்கிவிடும் வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.

அதுமட்டுமா? அறிகுறிகளை, நிலைமை மோசமடைய முன் ஆராய்ந்து அடையாளம் காணவும், தீவிர பரிசோதனைகளை மேற்கொள்ளவும் துரித சிகிச்சை அளிக்கவும் போதிய மருத்துவ வசதிகளோ பணமோ இந்த நாடுகளிடம் கிடையா.

எனவே மேற்கு நாடுகள் கூட எம்மைப் பார்த்துப் பரிகாசம் செய்யும் அளவுக்கு எய்ட்ஸ் இச் சூழலை ஆக்கிரமித்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. மிகச் சாதாரணமான பாலியல், குடும்பத் திட்டமிடல் போன்ற பிரச்சினைகளையே சமாளிக்க வழி தெரியாமல் திண்டாடும் கீழ்மட்ட சமுதாயங்களால் எய்ட்ஸ் போன்ற சுமையைச் சமாளிக்கவே இயலாது.

1980 இல் இந்த எய்ட்ஸ் பற்றிய சந்தேகம் முதன் முதலில் ஏற்பட்டது. அமெரிக்காவின் சினிமாத் துறையில் பிரபல்யமான நடிகர் நடிகைகளிடம் இனம்புரியாத நோய்கள் தென்பட்டன. அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், [illegible] குணங்குறிகள் அவதானிக்கப்பட்டன.

தொற்று ஏற்பட்ட பின்பும் பலகாலம் மறைந்திருந்து பல்கிப் பெருகி திடீரெனத் தாக்கி வெளிப்படும் இந்த கெரில்லாப் போர்முறை தொற்றிய வழிமுறைகளை காலங் கடந்தே ஆராயச் சந்தர்ப்பம் கொடுக்கிறது.


பல ஆண்டுகள் மௌனமாக — நீறுபூத்த நெருப்பாக — உடலின் உள்ளே மௌனம் சாதிக்க வல்லது இந்த எய்ட்ஸ் வைரசு. HIV எனப்படும் இந்த Human Immuno deficiency Virus மனிதனின் இரத்தத்தில் காணப்படும் நோயை எதிர்க்கும் சக்திகொண்ட வெண்குருதிக் கலங்களை தாக்கிவிடுகிறது. இவ் வெண் குருதிக்கலங்கள் எந்த நோய்க்கிருமிகளும் உடலில் புகவிடாமல் இரவும் பகலும் இந்த

மு. சிவநேசன்

உடற் கோட்டையைக் காத்துநிற்கும் காவலர்கள், படுமோசமாக எச். ஐ. வி. இனால் தாக்கப்படும்போது உடலுக்குப் புதிதாக ஒரு நோய் வரவேண்டிய அவசியம் இல்லை.

ஆம், உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை — நிர்ப்பீடனப் பாதுகாப்புத் திட்டத்தை — இவை சிதைத்துவிடும்போது, சாதாரணமாகச் சுற்றுச் சூழலில் தென்படும் நோய்க்கிருமிகள் உடலினுள் புகுந்து கும்மாளம் போடத் தொடங்கிவிடுகின்றன. எனவே எய்ட்ஸின் அறிகுறிகள், மிகச் சாதாரண நோய்களினின்றும் வேறுபடுத்த முடியாதவையாகவே ஆரம்பத்தில் தென்படுகின்றன. இதுதான் இந்நோயின் தாக்குதல் பலம் ஆகிவிடுகிறது.

காய்ச்சல், தலையிடி, வியர்த்தல், வாய்ப்புண், தொண்டைப்புண், வயிற்றுப்புண், தோல்வியாதிகள், மூட்டுக்கள் — கணுக்களின் வீக்கம், கரப்பன், பாலுறுப்புகளில் ஏற்படும் தொற்று என்பன இடையிடையே தென்படும். இவை மெல்ல மெல்லத் தீவிரமடைந்து எந்த மருந்துக்குமே கட்டுப்படாத ஒரு



எய்ட்ஸ் பிடிக்கப்பட்ட ஒரு குடும்பம்.

நிலை ஏற்பட்டபோதே அமெரிக்க ஆராய்ச்சிகள் வலுத்தன.

எனவே, பொதுவாக சோம்பலாக — சுவாரசியமற்ற இடமாக — வயோதிபர்கள், நோயாளிகள் நிறைந்த இடமாக — அழுக்கும் மருந்து நெடியும் வீசும் கூடமாக — இருமல் சோபை இழந்த முகங்கள் என்ற பரிதாபமான காட்சிகளை தன்னகத்தே எப்பொழுதும் கொண்டதான வைத்தியசாலைகள் சற்று விறுவிறுப்படையத்தொடங்கின; [illegible]க்கொண்டன. [illegible] இந்த வறுமையான காட்சிகளுக்குப் புறம்பாக கடற்கரைகளையும், பூங்காக்களையும் சுற்றிச் சுழன்ற — இளைய கவர்ச்சியான — முன்னேறிய — எந்தக் கவலையும் இல்லாத — இளைஞர், யுவதிகள் அடிக்கடி நோய்வாய்ப்படத் தொடங்கியமையே இதற்கு காரணம். துள்ளித்திரிந்த இவர்கள் கோழிக் குஞ்சுகள் போலத் தூங்கிமடிவதுமருத்துவத் துறையினருக்கு அதிர்ச்சியையும், தோல்வியையும் தந்துகொண்டிருந்தது.

உலகினை நோய்கள் ஆட்டிப்படைத்த சோகவரலாறுகளுக்குக் குறைவில்லை. 1918/19களில் வேகமாகப் பரவிய ஸ்பானிஷ் காய்ச்சல் உலகின் 20 மில்லியன் மக்களைக் காவுகொண்டிருக்கிறது. 1848 இல் ரஷ்யாவில் மட்டும் ஒரு மில்லியன் மக்களை கொலரா பலிகொண்டது. விஞ்ஞானம், மருத்துவம் அதிகம் வளர்ச்சி கண்டிராத அக்காலப்பகுதியில் இந்த நோய்கள் எப்படியோ கட்டுப்படுத்தப்பட்டமை ஏதோ அதிசயம்தான் என்றால், வளர்ந்து விட்ட இன்றைய மருத்துவத் துறைக்கும் சவாலாக எதற்கும் கட்டுப்படாமல் எய்ட்ஸ் பரவுவது அதைவிட அதிசயம் அல்லவா?

## எமக்கு மிக அ

அத்துடன் குறிப்பாக உலகின் இளைய — கலகலப்பான — கவர்ச்சியான — துடிப்பான பருவத்தை தாக்கும் இதைப்பற்றி கவலைப்படாமல் விட்டால் விரைவில் இவ்வுலகில்மிஞ்சுவதுவயோதிபர்களும், குழந்தைகளும் என்றாகிவிடாதா? திமிறி முளைக்கும் எய்ட்ஸை அடக்க இளையவர்கள் துணியாவிட்டால் யாரால் இது இயலும்? நோய் பரவத் தொடங்கியதும், நோயின் போக்கு எந்த மருந்துக்கும் கட்டுப்படாமல் போவது மரணம் தவிர்க்க முடியாதது என்பதை கோடிகாட்டியது; மரணபயம் நோய்வாய்ப்பட்டவர்களை கௌவிக்கொண்டது; பேயறைந்த முகங்களுடன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் காணப்பட்டனர். இவர்களது தனிப்பட்ட வாழ்க்கையினை ஆராய்ந்தபோது நோய் பரவலுக்கான காரணிகள் வெளிப்படத் தொடங்கின.

எய்ட்ஸ் என்றால் என்ன?

Aids எனப்படுவது Acquired Immune Deficiency Syndrome என்ற நோயாகும். வில்லங்கத்தை விலைக்கு வாங்கிய, அதாவது தேடி அலைந்துபெற்ற, நீர்ப்பீடன குறைபாட்டு அறிகுறிகளைக் காட்டுகின்ற நோய் என இதைக்குறிப்பிடலாம்.

அனேகம்பேர் இதைதேடி அலைந்தே பெற்றிருக்கிறார்கள். பெரும்பாலும் ஒருவன் ஒருத்தியோடு காலம் முழுவதும் வாழும் வாழ்வில் இது புக இடம் இல்லை என்றே கூறலாம். இதன் பொதுவான பரம்பல் முறைகளை ஆராயும் போது நோய் கண்டவர் தலைகுனிய வேண்டிய நிலைமை ஏற்படுவது தவிர்க்கமுடியாதது ஆகிவிடுகிறது.எய்ட்ஸைபரப்பும்HIV வைரசுகள் உடற் திரவங்களிலேதான் பெருமளவில் காணப்படுகின்றன. இந்த உடற் திரவங்கள் பரிமாறப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம். இவை தொற்றி விடுதல் சுலபமாகி விடுகிறது.

பலருடனான பாலியல் உறவுகளே 85 வீதமானோர் நோயைப்பெறக் காரணமாகி விடுகின்றது. ஆண் தாது அல்லது சுக்கிலம் அல்லது விந்து, யோனிக் கசிவு போன்றவற்றில் HIV பெருமளவில் தென்படுகிறது. பாலியல் கட்டுப்பாடுகள் தளர்ந்து பல வகை விடுதிகளும் மலிந்து போன மேற்குநாடுகளில் இது சம்பந்தமான சீர்கெட்ட சஞ்சிகைகளும் வீடியோ பட்டிகளும் பல்கிப் பெருகி இதுவே வாழ்க்கை என ஒரு பருவத்தை மயங் வைத்துக்கொண்டிருக்கும் வேளையில் HIV யின் ப மாற்றத்துக்கு சுலபமா வழிகிடைத்து விடுகிறது.

பாலியல் துணையை அடிக்கடி மாற்றுவதும் தமது ஒத்தபாலாரிடையே கொண்ட வலிந்த பாலியல் தொடர்புகளும், நிதானம் இழந்த கட்டுப்பாடற்ற வன்மையான உறவுகளும் உடற்திரவ பரிமாற்றத்தில் இரத்தத்தையும்கூட கலக் வைக்கின்றன.

இளைஞர், யுவதிக வெறியாட்டம் போடு இடங்களில் போதைவஸ் பாவனையும் தாராளமா இருக்கிறது. போதை மருந்துகளை ஏற்றும் ஊ களைப் பரிமாறிக் கொ வதும் சுலபமாக எயிட் நோய் பரவி விட வழிகோ விடுகிறது.

தொற்று நீக்காத ஊ களைப் பயன்படுத்தல் இரத்தப் பெருக்கு ஏற்படு போது தேவைப்படும் குரு யைப் பெறுதல் போன் காரணிகள் மிகக்குறைந் அளவில் சில அப்பா களுக்கு எய்ட்ஸ் கிடைக் காரணம் ஆகிவிடுகிற இவர்கள் செய்யாத பாவ திற்காக இந்தக் கொடி நோயைப் பெறுவது மா திரமன்றி தமது அன்பு துணைக்கும் வயிற்றி வளரும் சிசுவுக்கும் கொடு தும் விடுகின்றனர்.

அடிக்கடி இரத்தம் ஏற் வேண்டிய தேவையை தவிர்த்தலும், இதற்கா விபத்துக்கள் ஏற்படா வகையில் எச்சரிக்கையுட செயற்படுதலும், ஒருமுறை பாவித்து விட்டு வீசிவிட கூடிய நவீன ஊசிகளை பயன் படுத்தலும், அப்பா கள் இந்த நோயை வாங் மல் தப்பிக்கொள்ள எடுக் வேண்டிய நடவடிக்கைக ஆகின்றன.

இரத்த வங்கிகள் தம கையிருப்புகளை HIV ப சோதனைக்கு உட்படுத் வருகின்றன.மேலும் இரத் தானம் செய்வோரின் குரு யும் பரிசோதிக்கப்படுவ அவசியமாகின்றது.

உறவின் போது காப்பு களைப் பயன்படுத்தும் ப யும், உமிழ் நீர்ப் பரிமா றம் அற்ற முத்தமிட முறைகளைப் பின்பற்று படியும் மேற்கு நாடுகளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...லாம்.
...னேகம்பேர் இதைதேடி
...ந்தே பெற்றிருக்கி
...கள், பெரும்பாலும்
...ன் ஒருத்தியோடு
...ம் முழுவதும் வாழும்
...வில் இது புக இடம்
...லை என்றே கூறலாம்.
... பொதுவான பரம்
...முறைகளை ஆராயும்
...து நோய் கண்டவர்
...குனிய வேண்டிய
...மை ஏற்படுவது
...க்கமுடியாதது ஆகிவிடு
...து.எய்ட்ஸைபரப்பும்HIV
...சுகள் உடற் திரவங்க
...தான் பெருமளவில்
...ப்படுகின்றன. இந்த
... திரவங்கள் பரிமாறப்
... சந்தர்ப்பங்களில் எல்
... இவை தொற்றி விடு
...சுலபமாகி விடுகிறது.
...ருடனானபாலியல்உற
...ல் 85 வீதமானோர்
...யைப்பெற காரணமாகி
...ின்றது. ஆண்தாது
...து சுக்கிலம் அல்லது
...து,யோனிக் கசிவுபோன்
...றில் HIV பெருமளவில்
...ப்படுகிறது. பாலியல்கட்
...பாடுகள் தளர்ந்து பல
... விடுதிகளும் மலிந்து
...ள மேற்குநாடுகளில்
... சம்பந்தமான சீர்
...ட சஞ்சிகைகளும்,
...யோ பட்டிகளும் பல்கிப்
...கி இதுவே வாழ்க்கை

விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஆனால் இப்பிரசாரம் சமூகச் சீர்கேட்டை சட்ட பூர்வமாக இளைஞர்,யுவதிகளிடையே வளர்ப்பதாகவும் பாதுகாப்புடன் தவறு



**ஐரோப்பிய பச்சைக் குரங்கு: எய்ட்ஸின் மூல ஊற்றானது இதிலிருந்து தான் வந்ததோ?**

களை செய்யும்படி தூண்டுவதாகவும் வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன.

விபசாரம் மலிந்துள்ள பிரதேசங்களில் இதன் பரம்பலை எந்தப் பிரசாரமும்

கத் தவிக்கும் நிலையில் முடிவையும், மருந்தையும் கண்டுபிடிப்பது எப்போது என்பதே விஞ்ஞானிகளின் ஆதங்கம். எத்தனையோ மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டும் பாவிக்கப்பட்டும் இருப்பினும் அவை செயலளவில் வெற்றிகரமாக இல்லை. பயங்கரமான பக்கவிளைவுகளைத் தரும் Azidothymidine மருந்து நோயாளியின் ஆயுளைப் பெருமளவில் நீடிப்பதாக இல்லை. இதனால் நோய் கண்டவர் எய்ட்ஸினால் சாவதா அல்லது மருந்தினால் சாவதா என்ற நிலைமையே எழுகிறது. தொடர்ந்து நடைபெறும் தீவிரமான ஆராய்ச்சிகளின் பயனாக மருந்து சந்தைக்கு வருவதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம்.

அதுவரை நோயாளி காத்திருக்க இயலுமா? நோய் கண்டதும், அது எய்ட்ஸ் என்றதும், நோயாளியின் மனநிலை உடல் நிலையை விட மோசம் அடைந்து விடுகிறது; வெட்கமும், குற்ற உணர்வும் ஆட்டிப் படைக்கின்றன. யார் யாரிடம் இதைப் பெற்றிருக்கலாம், எவர் எவருக்கெல்லாம் இது கொடுக்கப்பட்டிருக்கும் என்றெல்லாம் மனது பட்டியல் போட்டுப் பார்க்கிறது. நண்பர்களுடன் போட்டியாகப் பட்டியலை நீட்டியதன் விளைவு இப்போது புரிகிறது.

அறியாமை காரணமாகவும், சமூக அந்தஸ்து இழப்பதாலும் எய்ட்ஸ் கண்டவரை சமூகம் ஒதுக்கி விடுகிறது; அவரோடு பழக அஞ்சுகிறது. வைத்திய சாலைகளில் கூட சில சமயங்களில் வைத்தியர்களும் தாதியர்களும்சிகிச்சை அளிக்கப் பயப்படுகின்றார்கள். இவர்மீது நோயாளி என்ற பரிதாபம் பிறக்கப் பின் நிற்கிறது. மரண பயமும் நோயாளியை ஆட்டிப் படைக்கிறது. அவமானம் தாங்காத போது தற்கொலைகளும் நடந்து விடுகின்றன.

பாடசாலைச் சிறுவன் ஒருவனுக்கு எய்ட்ஸ் என்றதும்

அவருடன் ஒரே தடாகத்தில் நீச்சல் அடிக்கலாம்; படுக்கைகளையும் தளபாடங்களையும் மலகூடங்களையும் கட்டுப்பாடின்றி பகிரலாம். இதனால் எல்லாம் எய்ட்ஸ் பரவுதல் என்பதே கிடையாது. நுளம்புகள் கூட இதனைப் பரப்பாது.

எனவே நோயாளிகளை பராமரிப்பவர்கள் கூட இதற்கு அஞ்ச வேண்டியதில்லை. எனினும் மருத்துவத்துறையினரே துணிந்து செயற்படும் அளவுக்கு மனநிலை மேற்குநாடுகளில் கூட இன்னும் விருத்தியடையவில்லை எனலாம்.

அந்தநாடுகளில் மிகவும் எச்சரிக்கையாக செயற்படும் பலர் இருக்கிறார்கள். தமக்கு பின்னால் தேவைப் படக்கூடிய இரத்தத்தைத் தாமே முன்னரே வழங்கி சேமித்து வைக்க வழிகண்டிருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவ்வளவுக்கு இவர்களுக்கு இரத்தவங்கிகள் மீது நம்பிக்கைஇல்லை.

புதியதோர் உறவு ஏற்படும்போது அவர்கள் இருவரும் தாமே முன்வந்து எய்ட்ஸ் பரிசோதனையை முடித்துக்கொண்ட பின்னர் உறவினைஆரம்பிக்கும்வழக்கம் உடையவர்களும் இல்லாமல் இல்லை.

எனினும் எல்லா இடங்களிலும் எல்லா வசதிகளும் வாய்ப்பதில்லை. வெளிப்படையாக இதைப்பற்றி ஆராய மனநிலை இடம் கொடுப்பதில்லை. யாரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க முடிவதில்லை.

விளைவு? 2000 ஆண்டளவில் உலகில் இரண்டு கோடி எய்ட்ஸ் நோயாளிகள் தென்படலாம். இதைவிடப் பல மடங்கினர் HIV வைரசு தொற்றிய நிலையில் அறிகுறிகளை வெளிப்படுத்தாமல் இருக்கலாம்.

இவற்றிலிருந்து விடுபட—நிம்மதியாக வாழ—அடுத்தவர்களை நம்பியிராது எமது பாரம்பரிய கலாசார மரபுகளை எமது மண்ணில் நிலை நிறுத்துவதே ஒரே வழி ஆகின்றது. ★

# ...மிக அருகில்!

... ஒரு பருவத்தை மயங்க
...த்துக்கொண்டிருக்கும்
...ளையில் HIV யின் பரி
...ற்றத்துக்கு சுலபமாக
...கிடைத்து விடுகிறது.
...லியல் துணையை
...க்கடி மாற்றுவதும்,
...து ஒத்தபாலாரிடையே
...ண்ட வலிந்த பாலியல்
...டர்புகளும், நிதானம்
...ந்த கட்டுப்பாடற்ற
...மையான உறவுகளும்,
...ற்திரவ பரிமாற்றத்தில்
...த்தத்தையும்கூட கலக்க
...க்கின்றன.
...ளைஞர், யுவதிகள்
...ரியாட்டம் போடும்
...களில் போதைவஸ்து
...வையும் தாராளமாக
...க்கிறது. போதை
...ந்துகளை ஏற்றும் ஊசி
...ளைப் பரிமாறிக் கொள்
...ம் சுலபமாக எயிட்ஸ்
...ய் பரவி விட வழிகோலி
...கிறது.
...தொற்று நீக்காத ஊசி
...ளைப் பயன்படுத்தல்,
...த்தப் பெருக்கு ஏற்படும்
... து தேவைப்படும் குருதி
...ப் பெறுதல் போன்ற
...ணிகள் மிகக்குறைந்த
...வில் சில அப்பாவி
...க்கு எய்ட்ஸ் கிடைக்கக்
...ணம் ஆகிவிடுகிறது.
...ர்கள் செய்யாத பாவத்
...காக இந்தக் கொடிய
...யைப் பெறுவது மாத்
...மன்றி தமது அன்புத்
...ணைக்கும் வயிற்றில்
...ரும் சிசுவுக்கும் கொடுத்
... விடுகின்றனர்.
...டிக்கடி இரத்தம் ஏற்ற
...ண்டிய தேவையைத்
...ர்த்தலும், இதற்காக
...த்துக்கள் ஏற்படாத
...கையில் எச்சரிக்கையுடன்
...யற்படுதலும், ஒருமுறை
...வித்து விட்டு வீசிவிடக்
...டிய நவீன ஊசிகளைப்
...ன் படுத்தலும், அப்பாவி
... இந்த நோயை வாங்கா
... தப்பிக்கொள்ள எடுக்க
...ண்டிய நடவடிக்கைகள்
...கின்றன.
...இரத்த வங்கிகள் தமது
...விருப்புகளை HIV பரி
...சோதனைக்கு உட்படுத்தி
...கின்றன.மேலும் இரத்த
...னம் செய்வோரின் குருதி
... பரிசோதிக்கப்படுவது
...வசியமாகின்றது.
...உறவின் போது காப்புறை
...ளைப் பயன்படுத்தும் படி
...ம், உமிழ் நீர்ப் பரிமாற்
...ம் அற்ற முத்தமிடல்
...றைகளைப் பின்பற்றும்
...டியும் மேற்கு நாடுகளில்

கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. தன்னை மறந்து போதை மற்றும் காம மயக்கங்களில் செயற்படும் இவர்கள் தாம் செய்யும் சமூகத் துரோகங்களை எடைபோடுதல் இல்லை. இதனால் மனித இனம் ஒரு பேரழிவைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இதன் ஆரம்பம் எங்கே? இந்த வைரசு ஆகாயத்தில் இருந்தா பூமிக்கு வந்தது? எப்போது இது தோன்றியது? என்ற கேள்விகளுக்கே இன்னும், சரியானவிடை கிடைக்கவில்லை.



**வாழ்விழந்து போய் நிற்கும் ஓர் எய்ட்ஸ் நோயாளியின் அவலம். சாந்தப்படுத்துகின்றார் டாக்டர்.**

அமெரிக்காவில் பெருமெடுப்பில் தன் கைவரிசையைக் காட்டிய எய்ட்ஸ் அதேகாலப் பகுதியில் ஆபிரிக்காவிலும் தென்படத்தான் செய்தது. அங்கிருந்துதான் இது அமெரிக்காவுக்குள் புகுந்திருக்கலாம் என்ற ஊகங்களும் எழுந்தன.

ஆபிரிக்காவில் மனிதர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் நெருங்கிக் காணப்படும் குரங்கு இனமொன்றில் HIV ஐ ஒத்த வைரசு இனங்கள் காணப்பட்டன. எனினும் இவை இக் குரங்குகளில் எந்த விதமான தாக்கங்களையும் தருவதாக இல்லை. இக் குரங்குகளே HIV இனது மூலம் எனக் கருதவும் இடமுண்டு.

மூலத்தைக் கண்டுபிடிக்

பாடசாலை மூடப்படும் அளவுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலைக்கு மட்டம் போட்டு விட்டார்கள்: பெற்றோர் போர்க்கொடி தூக்கி வீதியில் இறங்கிவிட்டார்கள்; அந்த அப்பாவிச் சிறுவனின் மன நிலை என்னாகும்?

இப்படி இவர்கள் ஏன் பயந்து ஓடுகிறார்கள்? துரத்திப் பிடித்து தொற்றி விடும் தன்மை எய்ட்ஸுக்கு இருக்கிறதா என்றால் அதுதான் இல்லை. உடல்உறவு இல்லாதவரை, கூடிவாழும் குடும்பத்தில் கூட இது தொற்றும் ஆபத்து இல்லை. எய்ட்ஸ் நோயாளி ஒருவரை தொட்டுக் கொள்ளலாம்; கைகுலுக்கலாம்; கட்டி அணைக்கலாம்; கன்னத்தில் முத்தம் இடலாம்;

## முன்னணியில் இந்தியா

'எய்ட்ஸ்' தீவிரமாகப் பரவும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை நோக்கி வீறுநடை போடும் நாடுகளிடையே முன்னணியில் திகழ்வது இந்தியா என்பது அண்மைக்கால அறிக்கைகள் மூலம் தெரிய வருகின்றது.

''ஐ.நா. எய்ட்ஸ் திட்டம்'' என்ற அமைப்பு கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் 30 லட்சம் பேருக்கு 'எய்ட்ஸ்' தொற்றியுள்ளதாக அபாய அறிவிப்பு விடுத்துள்ளது. இது உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவு அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


இந்தியாவில் HIV தொற்றியுள்ளவர்கள் அதற்கான மருத்துவ பரிசோதனை, ஆய்வுகள், சிகிச்சைகள் என்பனவற்றை பெற்றுக் கொள்ளக் கூடிய நிதி வசதி அற்றவர்களாக இருப்பது நோய் மேலும் பரவுவதற்கு வாய்ப்பாக உள்ளதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

சர்வதேச அளவில் ஆராய்ச்சியாளர்கள் இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் கண்டிருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இந்த மருந்துகளின் விலை அதிகம் என்பதுதான் பிரச்சினையே.

இந்தியாவில் உள்ள ஓர் 'எய்ட்ஸ்' நோயாளி இந்த மருந்து வகைகளில் ஒன்றைப் பெறுவதற்கு மாதம் 15 ஆயிரம் முதல் 24 ஆயிரம் ரூபாய்களைச் செலவிட வேண்டியிருக்கும். இதற்கு மிகச் சிலராலேயே தாக்குப் பிடிக்க முடியும்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 04



சொற்சிலம்பம் இல. 04
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 04 - 07 - 1997**

### இடமிருந்து வலம்

1. புத்திக் கூர்மை. 4. செருக்கு. 7. ஆசனவாயில். 8. கபடம். 9. பூட்டான் தலைநகர். 10. பத்து. 11. காடு. 13. விரைவு. 16. சூரியன். 17. பொட்டு 19. செவி. 20. தனயன். 22. முன்னிலை ஒருமைப் பெயர். 23. ஒரு நதி.

### மேலிருந்து கீழ்

1. பகு பத உறுப்பில் ஒன்று. 2. இந்துக்களின் முதல் நூல். 3. ஒரு தானியம். 4. வானம் பொய்த்தால் வரும். 5. நஞ்சு. 6. நீரூற்று. 8. முகம். 11. இது உயர நெல் உயரும். 12. சிகை அலங்கரிப்போர். 13. அதிகாரம் உடையவன். 14. இடது அல்ல. 15. கூட்டு எனும் குறி. 18. வெற்றியை இழந்ததால் கிடைத்தது. 21. அரசுக்குச் செலுத்துவது.

## சொற்சிலம்பம் இல. 02 - விடைகள்

### இடமிருந்து வலம்

1. சபாநயகர். 6, கோலம். 7. சாவி. 8. தம். 9, தபுதாரன். 11. குடி. 12. கதி. 13. சம்மதம். 17. பன்மை. 18. மதி. 19. யாகம். 21. யன்னல். 22. திரை. 23. துன்பம்.

### மேலிருந்து கீழ்

1. சகோதரி. 2. பாலம். 3. நாம். 4. கற்பு. 5. கவின். 7. சாரதி. 9. தடிமன். 10. தாகம். 11. கும்பம். 14. தமையன். 15. மதில். 16. வியாதி. 18. மனம். 20. கரை.

### கீழிருந்து மேல்

24. பன்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற் பரிசு:- புவேந்திரன் கஜேன்டிரா,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

★ இரண்டாம் பரிசு:- பா. பிரசாந்த்,
11/1 பிளச்சஸ் லேன், சுண்டிக்குளி.

★ மூன்றாம் பரிசு:- செல்வி வினோதா பரமசாமி,
ரயில் நிலைய கிழக்கு வீதி, சுன்னாகம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150.00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100.00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50.00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 03 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

(28 - 06 - 1997 முதல் 04 - 07 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | பு சூ |
| கே | இராசிச் சக்கரம் | | வெ |
| வி | | | ரா |
| | | | செ |

மாற்றம்
1-7-97 இல் கடகத்தில்-புதன்

அரசியலில் புதிய முயற்சிகள் தலை தூக்கும். வெளிநாட்டினரின் செல்வாக்கு சொல்வாக்காகும். பழையன கழிதலும் - புதியன புகுதலும் சர்வ சாதாரணம். மாணவர்களும் - தொழிலாளர்களும் உரிமைக்காகப் போராட முற்படுவர். சமயவாதிகள் அரசியலில் தலையிட முற்படுவர். இந்தியாவில் புதிய முகங்களும், அரசியலில் மாறுதல்களும் ஏற்பட அத்திவாரம் இடப்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றங்கள் கொடுக்கும்; இன ஜனங்களால் துன்பமும், வேண்டாத செயற்பாடுகளும் ஏற்படும். குடும்பத்தினருக்கு நற்பலன்கள் கொடுக்கும். மறைமுகச் சத்துராதிகள் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. கைகாலில் காயம் அல்லது வீக்கங்கள் சிலருக்கு கொடுக்கலாம். நீங்கள் எக்காரியத்தையும் எதிர் நீச்சலடித்தே முன்னேற வேண்டும். மனத்தில் குழப்பமும், வயிற்றில் நோவும் அமைதியற்ற நிலையைக் கொடுக்கும். சகோதரங்களுக்கும், புத்திரர்களுக்கும் மாற்றங்கள் கொடுக்கும். தெய்வ பக்தியால் நற்பலன்கள் கொடுக்கும்.

**இடபம்:** உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியான காலமாகும். குடும்பத்தினரின் செலவுகளைக் கட்டுப்படுத்தினால் நன்று. பொருள் இழப்புக்கள் சிலருக்கு ஏற்பட இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுகள் இருந்தாலும் மன அமைதி இருக்காது. முழங்கால் நோவும், கைகால் உளைவும் சிலருக்கு இருக்கும். பிடிவாதம் உடைய நீங்கள் காலத்திற்கேற்ப செயற்பட முயல வேண்டும். அல்லது வாழ்வில் முன்னேற்ற கரமான பல அனுகூலங்களை தவறவிட்டவர்களாவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் சமயோசிதமான புத்தியால் பல சந்தர்ப்பங்களைச் சாதகமாக்கிக் கொள்வீர்கள். உலகத்தில் எதையும் போராடிப் பெறும் வலிமை உங்களிடம் உள்ளதால் வெற்றி உங்கள் பக்கம் தேடி ஓடி வரும். தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டபடி இருக்கும். சகோதரர்களாலும், தகப்பன் வழியினராலும் கவலைகள் ஏற்படும். வீடுமனையில் மாற்றம் அல்லது திருத்தங்கள் கொடுக்கும். இராகு, கேது மாற்றங்களால் அடிக்கடி பதற்றம் நிலவும். அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும்.

**கடகம்:** உங்களுக்கு எதிர்ப்பாலரால் ஆதரவுகள் கிடைக்கும். இந்த உலகத்தைப் பற்றி அதிகம் யோசிக்காத நீங்கள் ஏன் அடிக்கடி கவலைப்பட வேண்டும்? தகப்பன் வழியினராலும் நன்மை இல்லை. கொடுத்த பொருள் வாங்க முடியாது. ஆயினும் கடந்த காலங்களில் பட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டுக் கொண்டு வருவதை உணர்வீர்கள். சகோதரங்கள் பகைப்பர். பொருளிலும், தொழில் ஸ்தானத்திலும் அவதானமாக இருக்கவும். நண்பர்களின் உதவிகள் சிலருக்கு கிடைக்கலாம்.

**சிங்கம்:** உங்கள் பலனுக்கு இராகு, கேது மாற்றம் பதற்றத்தையும், அடிக்கடி கோபப்படும் நிலைமையையும் கொடுத்துக் கொண்டிருக்கும். நாசூக்காக எதையும் கையாளும் நீங்கள் மற்றவர்களுடன் அவதானமாக நடந்து கொள்ளவும். அட்டமத்துச் சனி அடிக்கடி பல பிரச்சினைகளைக் கொடுத்தபடி இருக்கும். உங்கள் வாக்கால் சில காரியங்கள் தடைப்பட இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் இலாபங்கள் கிடைக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள்.

**கன்னி:** நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். அடிக்கடி கோபப் படுதலோ அல்லது—உணர்ச்சி வசப்படுதலோ பின்பு மன வேதனையைத்தான் கொடுக்கும். நாமுண்டு நம்வேலையுண்டு எனக் காலத்தைக் கழிக்கவும். வீண்பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். எதிர்ப்பாலரால் வீண்பழிகள்—பகைமைகள் வரலாம். கைகால் உளைவு அல்லது வீக்கங்கள் கொடுக்கும். வியாழ பகவானால் அமைதியற்ற தன்மைகள் ஏற்படும், எனவே தட்சணாமூர்த்திக்கு பொன்னொச்சிப் பூவால் அர்ச்சனை செய்யவும். பிள்ளைகளால் வேதனைகள் வரும். தொழில் ஸ்தானத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**துலாம்:** உங்களுக்கு அதிக யோசனைகள் குடும்பத்தைப்பற்றி ஏற்படும். எதையும் எதிர்க்கும் தன்மையைக் கொண்டிருப்பது நல்லது. ''தெய்வத்தால் ஆகாது எனினும் மெய்வருந்தக் கூலி'' கிடைக்காமலா போகும்? எடுத்த காரியங்களை விடாது தொடரவும். பொருள் நிலையில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும், தொழில் பொறுப்புக்களில் புதிய தாக்கங்களும் கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

## மகாதேவா ஜோதிடம்

**விருச்சிகம்:** நீங்கள் புதிய திட்டங்களைக் கருவாக்கி, உருவாக்க முயற்சிக்கவும். சகோதரங்களுக்கு நல்லதல்ல. வீடுமனையில் இருக்க நேரமில்லை என ஏதாவது விஷயங்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். பெற்றவரோ, உடன்பிறந்தவர்களோ உங்களைப் பகைக்க இடம் உண்டு. அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும். அல்லது வீண் பகைமை ஏற்படும். முழங்கால் உளைவு அல்லது நோ ஏற்படும்.

**தனுசு:** உங்களுக்கு அடிக்கடி பதற்றநிலை உருவாக இடம் உண்டு. எந்த விஷயங்களாயினும் நிதானமாகச் செயற்பட முயற்சி எடுங்கள். அடிக்கடி பொருள் நிலை மாறி மாறி ஏற்படும். வரவிலும் பார்க்கச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். இராகு, கேது மாற்றங்களால் தொழில் ஸ்தானத்திலும், வீட்டிலும் மன அமைதியைத் தரும் சம்பவங்கள் ஏற்பட இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**மகரம்:** உங்களுக்கு காலை ஓர் எண்ணம், மாலை ஒரு திட்டம் என மாறி மாறி சஞ்சலப்பட்டுக் கொள்ள இடம் இருப்பதனால் எந்த விஷயங்களையும் நிதானமாக நிறுத்தி முடிவு எடுக்கவும். இளைய சகோதரர்களால் வீண் மனச் சஞ்சலங்கள் ஏற்படும். கட்டுமீறிய செலவுகளால் கடன்படும் நிலைமைகள் கூட சிலருக்கு ஏற்படலாம். தொழில் ஸ்தானங்களில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

(X ஆம் பக்கம் பார்க்க)

## சோதிட சஞ்சீவி

---

மனிதனிடம் பொதுவாக ஒரு குறைபாடு. தான் நிறையத்தெரிந்தவன் என்ற நினைப்பு. தன் அளவிற்கு அடுத்தவனுக்குப் புத்தி இல்லை என்ற கணிப்பு. இது படித்தவர்களை மட்டுமல்ல, பாமரர்களையும் விட்டுவைக்காத நினைப்பு.

சாட்டையடி போடுகிறார் வள்ளுவர் — இந்தத் தலைக்கனம் தெறிக்கட்டும் என்று.

நீ நிறையப் படித்திருக்கலாம்; பட்டங்களும் பெற்றிருக்கலாம். இதனால் இந்த உலகம் உன் காலடியில் வீழ்ந்து விடும் என்று மட்டும் எண்ணி விடாதே; திமிரோடு திரியாதே.

கற்றது கைம்மண் அளவு என்றால் இன்னும் கற்க உள்ளது உலகளவு. வாழ்க்கைப் பயணத்திலே இன்னும் நிறைய விடயங்களைப் படிக்கும் போது தான் உன் அறியாமை உனக்குப் புலப்படும்.

உன்னைவிட அறிவினில் சிறந்தவனும் உலகினில் இருக்கிறான் என்பதனை உணர்ந்து விடு. அடுத்தவன் அறிவுக்கும் உணர்வுகளுக்கும் தலைசாய்த்து விடு.

எல்லாம் தெரிந்த— சகலதும் அறிந்த— மெய்யான அறிவினை உடையவன்— வாலறிவன்— ஒருவன் உலகினில் இருக்கிறான் என்றால் அவனே கடவுள்.

யாருக்கும் தலைகுனியாத யாரையும் வணங்காத நீ அவனது பாதங்களை — நற்றாள்களை மதித்து வணங்கு. ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என உணர்ந்து விடு.

உலகமே ஆண்டவன் சந்நிதி, வாழும் அனைவரும் உன் உடன் பிறப்புக்கள். இதை உணர்ந்து அறிவெனும் தன்மையுடைய ஆண்டவனை தொழுது நிற்காத போது நீ எதைக் கற்றிருந்தும் அக் கல்வியால் ஆன பலனென்ன? இதையே —

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

— [illegible] வள்ளுவர்
—0002.
(கடவுள் வாழ்த்து)

— **அம்பிகைபாகன்.**

---

# தொடக்கம்.....

நான் எங்கிருந்து வருறேன் ...?
எங்கிருந்து என்னைத் தெரிந்தெடுத்தாய்......?
— குழந்தை கேட்டது தாயிடம்.

பாதி அழுகையும் பாதி சிரிப்புமாய் குழந்தையை
மார்புறத் தழுவிய வண்ணமே பதிலளித்தாள் தாய்.
என் இதயத்தின் இஷ்டப்படியே
அதனுள் நீ ஒளித்திருந்தாய்...

என் பிரியமே...
எனது குழந்தைப் பருவ விளையாட்டுப் பொருள்களின்
இனிமையாய்
அவற்றுள் நீயே பொதிந்திருந்தாய்...

ஒவ்வோர் காலையிலும் களிமண் கொண்டு நான்
ஆக்கிக் கலைத்த இறைவன் பிம்பங்களில்
நீயே உறைந்திருந்தாய்...
எமதில்லத்தின் இஷ்ட தெய்வமாய்
கோயில் கொண்டிருந்ததும் நீயே தான்.
தெய்வமென உன்னையே தான் நான்
பூஜித்திருந்தேன்...

எனது நம்பிக்கைகள் யாவற்றுள்ளும்
எனது பிரேமைகள் அனைத்துள்ளும்
எனது வாழ்வினுள்ளும்
எனது அன்னையின் வாழ்வினுள்ளும்
நீயேதான் நிறைந்திருந்தாய்...
எமது இல்லத்தில் எந்த சாசுவத சக்தி
ராஜாங்கம் செய்ததோ
அதன் மடியில்
நீ காலங்காலமாய்ப் போஷிக்கப்பட்டு
வந்திருக்கிறாய்...
எனது பருவம் இளமைக்குள்
இதழவிழ்த்த கணங்களில்
அதன் இன் சுகந்தமாய் வியாபித்தது நீயே தான்.

சூரியோதயத்தின் முன்பிருக்கிற
மெல்லிருள் வானத்தில் முதலொளி போல்
உனது மிருதுவான மென்மை
எனது இளமை அங்கங்களுள் தான்
புஷ்பித்தது.
சுவர்க்கங்களின் முதல் இனிமையே...
காலைப் புலர்வோடு ஒன்றாய் ஜனித்தவளே...
இந்தப் பிரபஞ்சத்தின் ஜீவித ஆற்றோடு மிதந்து வந்து
இப்போது என் இதயத்தில் கரையொதுங்கியிருக்கிறாய்

உனது முகத்தை உற்று நோக்குகையில்...
நான் பெருவியப்பில் மூழ்கிவிடுகிறேன்.
எல்லோருக்குமேயான ஓர் அரியபொக்கிஷம்
இன்று எனக்கே எனக்கென ஆகீயிருக்கிறாய்.

உன்னை இழந்து விடுவேனே என்கிற அச்சத்தில்
இதயதுடன் இறுக அணைத்துக் கொள்கிறேன்.
எந்த அற்புதம் இந்தத்திரவியத்தை
எனது பலவீனமான கரங்களுக்குள் சிறைவைத்து...?

ஆங்கிலமூலம் — **ரவீந்திரநாத்தாகூர்**
தமிழில் — **ந. சத்தியபாலன்**

---

# வசந்தம் எங்கள் வாசல் வரும்

நள்ளிரவு விலகும் நேரம்
வெள்ளிகள் காவல் செய்ய...
நிலாமகள் வானேறி உலா வருவாள்.
விடிகாலைக்கு சில நேரங்கள் இருக்கும்.
மல்லிகை முகையவிழ்ந்து மணம் பரப்பும்.
சோழகக்காற்று மேனி தொட்டு
தாலாட்ட,...
நினைவு அலைகள் இதயக்கரையில் மோதி எழும்.
கனவு கலைந்து மனம் கண்ணீர் வடிக்கும்.
கலைந்து போன வசந்தத்தின் வேரைத்தொட
காலத்தின் கால்களைத் தேடி அலையும்.
இது...
இழந்து போன இதயத்தின் கவிதை அல்ல;
பிரிந்துள்ள உறவுகளின் வேதனை.
நேற்று...
காற்றும் எங்களூரில் கவிதை பாடியது.
தென்றல்கள் சங்கீத மிசைக்க
'வசந்தமகள்' ஊரெங்கும் உலாவந்தாள்.
முத்துச் சரங்களாய் உறவுகள் பூத்திருந்த
சித்திர சோலையீது.
விழுது விட்டு வாழ்ந்திருந்த அந்த
அழகு வாழ்க்கையில்... அடி விழுந்தது.
பேரரோசை முழங்கி, நீர்வேலிவரை வந்த போது
ஊரிழந்து உறவிழந்து போனோம்.
மழை கொட்டிய ஓர் இரவில் மடி இழந்தோம்.
அன்று எமைவிட்டுப் போன வசந்தம்
இன்றும் வரவில்லை.
சொந்தங்கள் எல்லாம்... திக்கொன்றாய்
சிதறிப் போயின.
நல்லது கெட்டதுக்குக் கூட நாலு சனம் இல்லை.
எல்லாம் எங்கள் தலைவிதி.
இது...
இழப்புக்களை தாங்கி இறுகிப் போன இதயம்.
புதிய பொழு தொன்றில்
இருள் சூழ்ந்த வாழ்வு இல்லாது போகும்.
நாளை...
மின்னல் பூச்சூட மேகங்கள் வாழ்த்துரைக்கும்.
முகிலினங்கள்
பன்னீர் தெளித்து பவனிவரும்.
குருதி தோய்ந்த
இரவு விடிந்து இங்கொரு காலை பிறக்கும்.
இனி...
கவலை முடிந்ததென்று காற்றுரைக்கும்.
போர் மேகம் சூழ்ந்த போது
ஊர் இழந்து போன உறவுகள் எல்லாம்
வேருக்கு மீண்டும் வந்தெழும்
காலம்வரும்.
அப்போது...
வசந்தம் எங்கள் வாசல்வந்து
தீபமேற்றும்.

- **வானவராயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைக் குழப்பும் பெற்றோரின் கெடுபிடிகள்!

தமது பிள்ளைகள் பற்றிய பெற்றோர்களின் அளவுக்கதிகமான பாதுகாப்பு உணர்ச்சி அல்லது பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குழந்தைகளை தர்மசங்கடத்தில் ஆழ்த்துகின்றன; பிள்ளைகளின் தனித்துவமான வளர்ச்சியையும் அது பாதிக்கின்றது.

உதாரணமாக —

வீதியோரமாக நடக்கும் போது அல்லது வீதியைக் கடக்கும்போது பெற்றோர் அதிஜாக்கிரதையாக இருக்




கின்றார்கள். பிள்ளையின் கையை இறுக்கிப் பிடித்துக் கொள்வார்கள். பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து மனதுக்குள் எப்போதும் ஒரு பயம். ஆனால் பிள்ளைகளோ மறுபுறத்தில் 'ஜாலி' டைப். 'கை பிடித்துக் கொண்டு நடக்க மாட்டோம். கை பிடிக்காமல் சுதந்திரமாக நடப்போம்.' என பிடிவாதம் பிடிப்பர். இது தாங்காமல் பிள்ளையின் முதுகில் ஓங்கி ஒரு சாத்துச் சாத்திவிட்டு, பிள்ளையின் கையை வெடுக்கெனப் பிடித்துக் கொண்டு, பிள்ளையை தரதரவென இழுத்துச் செல்லும் பெற்றோர்கள் சற்று வித்தியாசமான முறையில் சிந்திக்க வேண்டும்.

## சுதந்திர மனப்போக்கு

குழந்தையின் இத்தகைய சுதந்திரமான மன எண்ணப் போக்குக்குக் காரணமாக இருப்பது ஒரு வேறுபட்ட மனநிலையாகும். உலகை சுதந்திர மனப்பாங்குடன் அணுகும் பிள்ளையின் மன ஓட்டத்தைத் தடுத்து அவர்களை நாம் கட்டுப்பெட்டிகளாக்கி விடக் கூடாது. சுதந்திரமாக அவர்களின் மன எண்ணம் விருத்தி அடைவதற்கு வழி வகுக்கும் அதே நேரம், அவர்களின் செயல்களில் தலையிடாமலேயே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

டீன் ஏஜ் (13 முதல் 19 வயது வரை) பருவத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் உள்ள உறவில் அவ்வப்போது தர்மசங்கடம் ஏற்படுவது உண்மைதான்.

தன்னைத் தன் நண்பன் வீட்டுக்கு அழைத்துப் போ என்று பெற்றோரின் உதவியை நாடுபவன், நண்பன் வீடு நெருங்கியதும் தன்னைத் தன் பெற்றோர் விட்டுவிட வேண்டும்; மேலும் உள்ள தூரத்தைத் தான் மாத்திரம் தான் கடந்து சென்று நண்பனின் வீட்டுக்கு தனியே செல்ல வேண்டும் என நினைக்கின்றான். இதில் தவறேதும் இல்லை.

## சஞ்சலங்களுக்குக் காரணம்

உலகில் எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி சுதந்திரமான மனதுடன் பிறந்து, சுதந்திர மனதுடன் வளரும் பிள்ளைகள் சுதந்திரமாய் செயற்படுவதையே பெரிதும் விரும்புகின்றன.

தங்களுக்குச் சுதந்திரம் வேண்டும்; தங்களை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது; தங்கள் விருப்பப்படியே எல்லாம் நடக்க வேண்டும் — என்று அவர்கள் எண்ணுவதே இதற்குக் காரணம்.

ஆனால் குழந்தைகளைக் குழந்தைகளாய்ப் பார்க்கும் பெற்றோர்கள், பெரும்பாலும் குழந்தையின் இந்த மனப்போக்குக்கு அவர்களை விட்டுப் பிடிக்க அனுமதிப்பதில்லை. குழந்தைகள் என்றும் பெரியவர்களிலேயே நூற்றுக்கு நூறு வீதம் சார்ந்திருக்கின்றார்கள் என்ற யதார்த்தத்தைக் குழந்தையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் நடைமுறைப்படுத்த அவர்கள் எண்ணுகின்றார்கள்.

பெற்றோர் — குழந்தைகளுக்கு இடையிலான இந்த எதிரெதிரான — முரண்பட்ட — மனப் போக்கே வீடுகளில் பல்வேறு சஞ்சலங்களுக்குக் காரணமாகின்றன.

தாங்கள், பெரியோர்களை எந்தளவுக்குச் சார்ந்திருக்கின்றோம் என்பதைத் தன் வயதை ஒத்த மற்றவர்களிடம் மறைத்து அதனை இரகசியமாக வைத்துக் கொள்ளவே பிள்ளைகள் விரும்புகின்றன. இதில் விந்தை என்னவென்றால் எவரிடமிருந்து இரகசியமாக வைத்துக் கொள்ள விரும்புகின்றார்களோ, அவர்களும் இதே மாதிரியாக நடந்து கொள்வதுதான்.

## தர்மசங்கடம்

நிழலாய்த் தொடரும் பெற்றோர்கள், பெற்றோரின் கண்டிப்பான கட்டுப்பாடுகள் என்பன பிள்ளைகளைப் பெரிதுமே தர்மசங்கடத்தில் ஆழ்த்துகின்றன.

பிள்ளைகளுக்கு ஏற்படும் இந்த தர்மசங்கடமான உணர்ச்சி, அவர்களின் புத்தி வளர்கின்றது என்பதையும், அவர்கள் தம்மைச் சுற்றிச் சமுதாயத்தில் நிகழ்பவற்றை அறிந்தவர்களாக (Social awareness) இருக்கின்றார்கள் என்பதையும் பிரதிபலிக்கின்றது.

தொடர்ந்து தங்கள் மேல் அதீத கவனம் செலுத்தப்படும்போது ஒன்றரை வயதுக் குழந்தை கூட வெட்கமடைகின்றது எனக் கூறப்படுகின்றது.

தங்கள் மேல் கவனம் செலுத்தப்படும் போது அதைத் தர்மசங்கடமாக உணரும் நிலை குழந்தைகளுக்கு சுயமாக ஏற்படுவது அவர்கள் தங்கள் தனித்துவத்தை (Individuality) பற்றி நன்கு அறிந்துள்ளார்கள் என்பதை உணர்த்துகின்றது.

பிள்ளைகள் வளர்ச்சியடைந்த நிலையில் தங்களுக்குப் பரிபூரண சுதந்திரம் தேவை என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றார்கள்.

பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தில் அவர்களுக்குக் கடவுளாக, சர்வ வல்லமை படைத்தவர்களாகத் தோன்றிய பெற்றோர்கள் —


அவர்கள் வளர்ந்ததும் வேறு மாதிரியாகக் காட்சி அளிக்கின்றார்கள்.

## பெற்றோருக்கு ஏற்படும் அதிர்ச்சி

தாங்கள் ஓரளவு வளர்ந்துவிட்ட நிலைக்கு வந்தபின்னர் குழந்தைகளுக்கு தங்கள் பெற்றோரின் செயல்கள் எல்லாமே விசித்திரமாகத் தெரியும்; எல்லாவற்றிலும் குற்றம் கண்டு பிடிக்கத் துவங்குகிறார்கள். பெற்றோரின் சில செயல்கள் உண்மையிலேயே தவறாக இருந்திருக்கலாம். ஆனால் பல செயல்கள், குழந்தைகளின் கற்பனையில் பூதாகாரமாகக் காட்சி அளிக்கின்றன. ஆகையால் பெற்றோர்களிடமிருந்து விலகியே இருக்க முற்படுகிறார்கள். தங்கள் குழந்தைகளிடம் காணப்படும் இந்த மாறுதலால் பெற்றோர்கள் அதிர்ச்சிக்குள்ளாகிறார்கள்.

ஆனால் இந்த மாறுதல் ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும். பெண்குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு வயதுக்கு வரும் போது அவர்கள் நடத்தையில் குறிப்பிட்ட மாறுதல் ஏற்படும் என்பதும், மறுபடியும் இந்த வயதில் தங்கள் பெற்றோரின் பாதுகாப்பில் இருக்க விரும்புகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிழலாய்த் தொடரும் பெற்றோர்!



ஆசியாவில், குறிப்பாக இந்தியாவில் பெற்றோர்கள், தங்களுடைய வயது வந்த மகன்மார், மகள்மாரை குழந்தைகள் போலவே நடத்துவது மிகவும் சகஜம்.

''என்றைக்கிருந்தாலும் நீங்கள் எங்களுக்குக்குழந்தைகள் 'தாம்'' என பெற்றோர் நினைப்பதே காரணம்.

''பெட்டி சரியாக பூட்டி இருக்கிறாயா? சாமான்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். இரயிலில் யன்னல் கதவை மூடிக்கொண்டு படுத்துக்கொள்.'' போன்ற அறிவுரைகளைப் பெற்றோர் தங்கள் 20 வயதுக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு வழங்குவது சகஜம். மாலை நேரத்தில் அவர்கள்வெளியே கிளம்பினால் ''நேரத்தோடு வந்து சேர், காலம் கெட்டுக் கிடக்கிறது'' போன்ற அறிவுரைகள் மிகச்சாதாரணம்.

அதுவும் போர் நெருக்கடியில் சிக்கி இருக்கும் எமது பிரதேசத்தில் இந்தக் கெடுபிடிகள் இன்னும் அதிகம்.

'டீன்ஏஜ்' வயதில் பிள்ளைகளை இங்கு வைத்திருப்பது வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போல என்றாகிவிட்ட நிலையில் பெற்றோரின் அதீத பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை கூறுவதும் தவறாகின்றது.

பெற்றோரின்,இந்தமனோபாவம், தர்மசங்கடத்தை உண்டு பண்ணினாலும், பெற்றோர்கள் தங்கள் பிள்

(XII ஆம் பக்கம் பார்க்க)






## வட்ட நிலா

வட்ட நிலா வா வா
வண்ண நிலா வா வா!
பட்டு நிலா வீசி வா
பாடுகிறேன் ஆடி வா!
சுட்டிப் பயல் தம்பியும்
எட்டிப் பிடிக்கப் பார்க்கிறான்!
கட்டி அணைக்க நெருங்கினால்
காத தூரம் போகின்றாய்!
வட்டப் பந்து போலவே
வானில் பவனி வருகிறாய்!
கிட்ட நெருங்கி வந்தாலே
எட்ட எட்டப் போகின்றாய்!
வான வெளி தன்னிலே
வளைய வளைய வருகிறாய்!
ஏனோ என்மேல் கோபமா?
இறங்கிக் கீழே வாராயோ!

-ஸ்ரீ. நிதர்ஸன்-
(ஆண்டு 6, கொக்குவில் இந்துக் கல்லூரி)

வெள்ளித்தட்டு வானிலே
மிதந்து மெல்ல வருகுதே!
பஞ்சு மேகம் துரத்தவே
ஓடி ஓடி ஒளியுதே!
வெள்ளைத் திட்டு வானிலே
குவியலாகத் தெரியுதே!
புள்ளி மீன்கள் பின்னணி
அதில் உந்தன் ஜாலமே!
பூமி எங்கும் வெள்ளையாய்
ஊர்வலங்கள் போகுதே!
கறுப்பு உடை அனைத்தையும்
போக்கி விட்டுச் சிரிக்குதே!
குழந்தை அழத் தாயுமே
உன்னைச் சுட்டிக் காட்டுறார்!
அழுத பிள்ளை சிரிக்குதே
நீதான் என்ன அதிசயம்?
பச்சை இலைகள் வெள்ளையாய்
நீ எடுத்துக் காட்டுறாய்!
பூமியெங்கும் உன் நிழல்
பதித்து மகிழ்ச்சி தருகிறாய்!
வட்ட நிலா ஓடிவா
இன்னும் கிட்ட ஓடிவா!
உன்னைத் தொட்டுப் பார்க்கவே
ஆவல் துள்ளி வருகுதே!

-அ. சூரியன்-

## சிந்தித்தே செயற்பட வேண்டும்

### நீதிக்கதை

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் எந்த நேரமும் யாரையாவது ஏதாவது கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார். தமது கேள்விகளுக்கு சரியான விடைதரத் தவறுவோருக்கு கடும் தண்டனை வழங்கவும் அவர் தவறுவதில்லை. இதனால் அரச சபைப் புலவர்களும் மந்திரிமாரும் எந்நேரமும் எச்சரிக்கையாக இருப்பதே வழக்கம்.

ஒரு நாள் அரச சபை கூடியது. அரசர் வந்து அரியணையில் உட்கார்ந்தார்.மறுகணம் தன் மந்திரியாரை விழித்து,

''மந்திரியாரே!

''எனக்கு ஒரு சந்தேகம்,கடவுள் ஒருவர் இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்காக இரங்கிக் காட்சி கொடுப்பாரா? எதற்காக அவர் நேரில் வர வேண்டும்? இருந்த இடத்திலேயே விரலை அசைத்தால் நினைத்தது நடைபெறாதா? அவர் தான் சர்வ வல்லமையும் பொருந்தியவராச்சே?'' — என்று கேள்விக் கணைகளாகத் தொடுத்தார்.

இதைக் கேட்ட மந்திரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'என்னடா இது இன்று சங்கடத்தில் மாட்டிக் கொண்டோமே' என நினைத்தபடி ''அரசே! கடவுள் என்று ஒருவர் இருக்கிறார். அவர் தான் இந்த உலகைப் படைத்தவர்'' என்றார்.

உடனே அரசர் இடைமறித்து ''நான் கேட்ட கேள்விக்குச் சரியாகப் பதில் கொடுக்க வேண்டும்,இல்லையேல் சிறைத் தண்டனை தான், யாராயிருந்தாலும் சரிதான் ''என்றார்.

அதற்கு மந்திரி ''அடடா? பதில் கூற முன்னர் உங்களுக்கு அவசரம், அப்படியானால் எப்படி?'' என்று இழுத்தார். ''சரி விடையைக் கூறி முடியும்'' என்றார் அரசர்.

''அரசே! ஒரு விளக்கு எந்தப் பக்கம் ஒளி கொடுக்கின்றது என்று உங்களால் சொல்ல முடியுமா? அது எல்லாப்பக்கமும் தான் ஒளி கொடுக்கிறது. அது போலவே கடவுளும் எல்லா இடமும் நிறைந்திருக்கிறார்'' என்

(XII ஆம் பக்கம் பார்க்க)

- த. உமையாள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடிகளை கூண்டோடு ஒழிக்கும்
# பிரிட்டிஷ் முயற்சி வெற்றி பெறுமா?

உலகில் இரசாயன மற்றும் அணு ஆயுதங்களினால் ஏற்படக் கூடிய அழிவுகள் குறித்து அடிக்கடி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அழிவுகள் என்றோ ஒரு நாள் ஏற்படக் கூடும் என்றே இப்போது எச்சரிக்கப்படுகின்றது. எனினும் அத்தகைய பேரழிவுகள் இன்னும் நிகழவில்லை.

ஆனால் மறுபுறத்தில் உலகில் தினசரி சுமார் 75 பேரின் உயிரைக் காவு கொண்டு வரும் மற்றொரு ஆயுதம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளப்படமால் இருப்பது ஆச்சரியத்துக்குரியதாகும்.

அதுதான் கண்ணிவெடிகள் அல்லது மிதிவெடிகள்.

நமது நாட்டில் இராணுவ வாகனங்கள், டாங்கிகள், டிரக் போன்றவற்றுக்கு புலிகள் வைக்கும் நிலக்கண்ணி (Land Mine) போன்றவற்றை இங்கு குறிப்பிடவில்லை.

இத்தகைய நிலக்கண்ணிகள் நேரடி யுத்தத்துடன் சம்பந்தப்பட்டவை. அவற்றினால் யுத்தத்தில் ஈடுபடும் தரப்புகளே பாதிக்கப்படுகின்றன.

எதிர்ப்புத்தரப்பு அல்லது சந்தேகத்துக்குரிய ஆள்கள் தமது பிரதேசத்துக்குள் வருவதை அல்லது நடமாடுவதைத் தடுப்பதற்காக ஆங்காங்கே புதைத்து வைக்கப்படும் — ஜொனி மிதிவெடி ரகத்தைச் சேர்ந்த — மிதிவெடிகள் குறித்தே இப்போது பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இத்தகைய நிலக்கண்ணி வெடிகள் காரணமாக உலகில் ஆண்டொன்றுக்கு சுமார் 25 ஆயிரம் முதல் முப்பதாயிரம் பேர் இறக்கின்றார்கள்; அல்லது அங்கவீனமாகுகின்றார்கள்,

அவர்களில் பெரும்பாலானோர் யுத்தத்துடன் தொடர்புபடாத அப்பாவிப் பொதுமக்களேயாவர்.

யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர், எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள் இத்தகைய நிலக்கண்ணிகள், மிதிவெடிகள் போன்றவற்றில் சிக்கி பிணமாகுகின்றார்கள்; அல்லது நடைப் பிணமாகுகின்றார்கள்; அல்லது நடக்க முடியாத முடவர்கள் ஆகுகின்றார்கள்.

இத்தகைய மிதிவெடிகளுக்கு எதிராக -- உலகளாவிய ரீதியில் — இப்போது எதிர்ப்புணர்வு வலுக்க ஆரம்பித்துள்ளது.

பிரிட்டனும் கனடாவுமே இதில் முன்னணியில் நிற்கின்றன. ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்றவை உலகில் வலுக்கும் இத்தகைய எதிர்ப்புணர்வை சட்டை செய்யாத போக்கையே கடைப்பிடிக்கின்றன.

உலகில் எங்கும் 12 கோடி நிலக்கண்ணிகள் அல்லது மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன; மேலும் பத்துக்கோடி கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதற்குத் தயாராக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன. தவிர, வருடத்துக்கு பத்து லட்சம் கண்ணிவெடிகள் தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய கண்ணிவெடி அச்சுறுத்தலை உலகிலிருந்து அகற்றும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசு ஆர்வம்காட்டி வந்திருக்கின்றது. பிரிட்டனில் ஆட்சி மாற்றத்தை அடுத்து புதிதாகப் பதவியேற்றிருக்கும் தொழிற்கட்சி அரசு இந்த முயற்சியில் முழு மூச்சாக ஈடுபடத் தொடங்கியுள்ளது.

பிரிட்டனில் கண்ணிவெடி வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக தேர்தலின் போது தமது கட்சி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் புதிய பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் மும்முரமாக இருக்கின்றார்.

"நிலக்கண்ணி வெடிகளை உற்பத்தி செய்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், கொண்டு செல்லுதல்,

- கௌசா -

விநியோகித்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை முழுமையாகத் தடைசெய்யப் போகின்றோம். அதுமட்டுமல்லாமல் பிரித்தானியாவில் உள்ள அனைத்து நிலக்கண்ணி வெடிகளையும் கூண்டோடு அழிக்கப் போகின்றோம்." — இப்படி புதிய பிரிட்டிஷ் பிரதமர் உறுதி கூறுகின்றார்.

2005 ஆம் ஆண்டளவில் பிரிட்டனில் நிலக்கண்ணி வெடிகளே இருக்காது என்கின்றார் அவர்.

ஆனால் மறுபுறத்தில் அவருக்கு மாறான கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

கண்ணிவெடிகள் போரில் பயன்படுத்தப்படும் சட்டபூர்வமான ஆயுதங்களே என்று பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரிகளும் பாதுகாப்பு விமர்சகர்களும் கூறுகின்றார்கள்.

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தைப் பாதுகாக்க கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை; ஆனால் கண்ணிவெடிகளை வகைதொகையின்றிப் பயன்படுத்துவதே தவறு — என்பதே அவர்களது வாதமாகும்.

இதற்கிடையில் கண்ணிவெடிகளை முற்றாகத் தடை செய்வது தொடர்பாக சர்வதேச சமூகத்துடன் தொடர்பு கொள்ள பிரிட்டிஷ் அரசு முயற்சிகள் எடுத்துவருகிறது,

கண்ணிவெடிகளை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் ஆகியவற்றை தடைசெய்யும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்று இவ்வாண்டு இறுதியில் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 50 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றில் கனடாவும் பிரிட்டனும் முக்கியமானவையாகும்.

"ஒட்டாவா செயற்பாடு" என அழைக்கப்படும் இந்த முயற்சிக்கு, உலகில் கண்ணிவெடிகளை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரதானமான நாடுகளான ரஷ்யாவும் சீனாவும் ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை.

"கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கான சர்வதேச ஒப்பந்தம் திட்டமிட்டபடி ஒட்டாவா நகரில் கைச்சாத்திடப்படும். இதுவரை 71 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்துள்ளன. அடுத்து வரும் மாதங்களில் ஒத்துழைப்பை வழங்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்" — என கனடா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்ணிவெடிகளை உலகிலிருந்து ஒழிக்கும் முயற்சியில் ஐ. நா சபையும் மந்தமாகவே செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவும் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காது எனத்தெரிகிறது. உலகளாவிய ரீதியில் கண்ணிவெடிகளைத் தடைசெய்ய வேண்டுமாயின் அந்த முயற்சி ஐ. நா சபையால் மாத்திரமே முன்னெடுக்கப்பட வேண்டும் என அமெரிக்க அரசு அண்மையில் தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பற்றிக் லீக் வேறானகருத்தைக் கொண்டுள்ளார்.

"இந்த விடயத்தில் கண்ணிவெடிகளைத் தடை செய்யும் வேகத்தைத் தணிப்பதே அமெரிக்காவின் கொள்கையாகும். ஏனைய நாடுகள் அனைத்தும் ஒப்பந்தத்துக்கு ஆதரவு வழங்கும் வரை, தான் ஒத்துழைப்பு வழங்க முன்வருவதில்லை என்பதுதான் அமெரிக்காவின் கருத்துப்போலும். அமெரிக்காவின் இச்செயலானது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த முயற்சியைமுறியடிக்க ஏதோ ஒரு நாட்டுக்கு வாய்ப்பளிக்க வழிவகுக்கும்" — என்கின்றார்.

இன்று உலகில் கண்ணிவெடிகளால் அதிக அளவில் பாதிப்புக்குள்ளான நாடுகளில் மிகமுக்கியமானவை கம்போடியாவும், பொஸ்னியாவும் ஆகும்.

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் பிரிட்டிஷ் அரசின் முயற்சிகளை அந்த இருநாடுகளும் பாராட்டியுள்ளன.

அந்தமுயற்சி வெற்றியளிக்குமா என்பதற்கு காலம் தான் பதில்சொல்ல வேண்டும். ★

## இந்த வார இராசி.....

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கும்பம்:** உங்களுக்கு கலக்கமாக இருந்தாலும் நிறைகுடம் தளம்பாது அல்லவா? செல்வாக்கு மிகுந்த நீங்கள் எதையும் அறிமுகங்களால் சாதித்துக் கொள்ளுவீர்கள். கையில் நாலு காசு வந்து போய்க்கொண்டு இருக்கும். ஏழரையின் பாதிப்பும், இராகு, கேதுவின் தாக்கமும் எனச் சொல்லிக்கொண்டிருக்காமல் காரியங்களைச் செய்து வாருங்கள். முயற்சி உடைய நீங்கள் இகழ்ச்சி அடைய மாட்டீர்கள். எதிர்பாராமல் அதிக உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன் நடக்கும். வெளிநாட்டுத் தொடர்பு சிலருக்கு இருந்தாலும் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுவது நல்லது.

**மீனம்:** உங்களுக்கு அதிக பொறுப்புக்களும், பல யோசனைகளும் ஏற்படும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் பலதிட்டங்களுக்கும் — புதிய முயற்சிகளுக்கும் திட்டமிடுவீர்கள். குடும்பத்தின் அபிப்பிராயபேதம் மனச்சஞ்சலத்தை கொடுக்கும். பொருளில் கவனமாக இருக்கவும். மற்றவர்களின் அபிப்பிராயங்களையும் தூரதேசப் பிரயாணங்களையும் தவிர்த்துக் கொள்ளவும். இடைக்கிடை தடை தாமதங்களை ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கம் கொடுத்தாலும் வருங் காலத்திட்டங்களை கருவாக்கி உருவாக்கியபடி இருப்பீர்கள்.

# மிகச் சிறிய நாடு

உலகில் மிகச் சிறிய நாடு எது?

'வத்திக்கான்.'

உலகக் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் வத்திக்கானில் இருந்துதான் அருளாட்சி நடத்துகின்றார்.

இத்தாலியின் தலைநகரம் ரோம். அந்த நகரின் மையத்தில் உள்ள இந்தச் சிறிய நாடு கால் சதுர மைலிலும் குறைந்தளவு விஸ்தீரணமே உடையது.

என்றாலும் இந்த நாட்டுக்கு என தனிக்கொடி, அஞ்சல்துறை, ரயில் நிலையம், தொலைபேசி மற்றும் வானொலி நிலையம் ஆகியவை உள்ளன.

நாட்டின் வருமானத்துக்கு என தனியாக வழிவகைகள் ஏதுமில்லாவிட்டாலும், உலகம் எங்கும் பரவியிருக்கும் கத்தோலிக்கர்கள் உவந்தளிக்கும் காணிக்கைகளைக் கொண்டு இந்த நாடு செவ்வனே இயங்கி வருகின்றது.

பாப்பரசரின அழகிய அரண்மனை கண்கவர் பூங்காக்கள் சூழ அமைந்துள்ளது. அரண்மனைக்குள் பெரியதொரு நூல் நிலையமும், அருங்காட்சியகமும் அமைந்துள்ளன.

வத்திக்கான் உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் அரசாங்கத் தூதுவர் நிலையில் உறவு வைத்திருக்கின்றது.

# பழந்தமிழ்....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறதே. அங்கே மிகவும் சுவையான உணவுவகைகள் உண்டு, இதை விட்டுவிட்டு வீட்டிலிருந்து சாப்பாட்டைக் கொண்டுவந்து உண்கிறாயே?'' எனக் கேட்டார். அதற்கு அவ்வுத்தியோகத்தர் ''நண்பரே! நான் கொண்டுவந்து உண்ணும் உணவின் சிறப்பு உமக்குத் தெரியாது. இதோ கூறுகிறேன் கேள்'' எனக் கூறத்தொடங்கினார்.

''ஊது குழல் சத்தம் கேட்டவதிப்பட்டு
ஓடி வருகையிலே
பாதி வழி வந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா...''

புகைவண்டியின் ஊதுகுழல் சத்தம்கேட்டதும் வீட்டிலிருந்து புகையிரத நிலையத்துக்கு ஓடோடிச் செல்லும் போது நான் உணவுப் பொதியை மறந்துபோய் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். இதனைக் கண்ட என் மனைவி அதனை எடுத்துக்கொண்டு என்பின்னால் ஓடோடி வந்து பாதிவழியில் தந்துவிட்டுச் சென்றாள்.

''இதனை பாதிவழிவந்து தாமரைக் கைதந்த பச்சை அமுதம்'' எனக் கவிஞர் கூறுகின்றார். தாமரை போன்ற மென்மையான அழகான கையை மட்டும் இச்சொற்றொடர் குறிக்கவில்லை, ''என்னுடைய மனைவி மிகவும் அழகானவள் என்பதனையும் அவன் கூறிவிடுகிறான். (இது அன்மொழித்தொகை) ''பச்சை அமுதம்'' என்பது சுடச்சுடக்கொண்டுவந்த உணவு என்பதாகும்.

இந்த உணவுக்கு மேலும் ஒரு சிறப்புண்டு. எனக்கு ஒரு சுட்டிப் பயல் இருக்கின்றான். இவன் குழப்படி செய்வதில் மன்னன். என்னுடைய மனைவி உணவை இலையில் போடும்போது கையை வைத்து அள்ளிச் சுவைத்துப் பார்த்தான். அவனுடைய கைகள் பிஞ்சுக்கைகள். அவன் அளைந்து கிள்ளிய உணவாகையால் தெய்வாமிர்தம் போன்றது'' இதனை —

''சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா
சின்னத் தளிர்க்கைக் குழந்தை அளைந்தது
தெய்வ அமுதமையா''

—என அழகாகச் சித்தரிக்கின்றார் கவிஞர்

இந்த உணவுக்கு இன்னுமொரு சிறப்புண்டு. அவனுடைய மனைவியே சமைத்த உணவு அதுவாகும். மாமியாரோ அல்லது வேலைக்காரியோ சமைத்த உணவல்ல.

''தங்கவளையல்கள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழுதையா
அங்கமெல்லாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு கலந்த தையா''

தங்க வளையல்கள் அணிந்த தாமரைக் கரத்தாலே அவளே சமைத்த உணவு. அவள் வேண்டா வெறுப்பாகச் சமைக்கவில்லை. அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும் அன்போடு சமைத்த உணவு இது என்பதனைச் சிறப்பாகக் கவிஞர் சொற்சித்திரமாக ஆக்கியுள்ளார்.

மேலும் அவள் உணவைத் தந்துவிட்டுத் திரும்பும்போது பிரிவுத் துயரைத் தாங்காது அழுதுவிட்டாள். அவள் கண்களிலிருந்து சொட்டுச் சொட்டாக கண்ணீர்த் துளிகள் இவ்வுணவுப் பொதியில் விழுந்தன. அதனாலும் இது விண்ணவர் அமுதம்போல உள்ளது. அதனால் இவ் உணவில் உப்புக்கலந்திருந்தாலும் கூட எமக்கு இனிக்கின்றது என்றான் கணவன்.

''கொட்டிய உப்புக் கலந்த தென்றாலும் உள்
கூடியினிக்கு தையா அவள்
விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் விட்ட
விண்ணின் அமுதமையா''

முதலாவது பாடலில் ஒரு சம்பவத்தை அழகாக கவிஞர் அறிமுகம் செய்கின்றார். இரண்டாவது பாடலில் இல்லறத்தின் பயனாகக் கிடைத்த பிள்ளைச் செல்வம் பற்றிக் குறிப்படுகின்றார். இப் பாடல்

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு''
எனும் குறட்பாவையும்—
''அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்''
— எனும் குறட்பாவையும் நினைவுபடுத்தக் காணலாம்.

மூன்றாவது பாடலடிகள், முளிதயிர் பிசைந்த காந்தன் எனும் சங்கச் செய்யுளை நினைவுபடுத்துகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்த பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் அவற்றின் பிழிவாக இப்பாடலைக் காலத்திற்கேற்ற வகையில் பாடித்தந்துள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுக் குழு முயற்சி:

# காலாவதியாகும் காலக்கெடுக்கள்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை அரசு முன்வைத்தும் —

அது குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டும் —

இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

பொதுக்கருத்தை எட்டுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு பல தடவைகள் கூடிக் கலைந்துவிட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவுக்குழு கூடிய பின்னர் காலவரையறை குறிப்பிடாது அதன் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இனிமேல் தேவைப்படும் பட்சத்திலேயே தெரிவுக்குழு கூட்டப்படும் என்றும் —

இதுவரை தெரிவுக்குழுவில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் அரசமைப்பு நகல் வரைவைத் தயாரிக்கும் என்றும் —

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அறிவித்திருக்கின்றார்.

இது அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் தலையை விட்டுவிட்டு வாலைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கமே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பொதுக்கருத்து ஒன்றை எட்டுவதுதான். ஆனால் ஐந்து முக்கிய — அடிப்படை — விடயங்களில் இன்னும் பொதுக்கருத்து எட்டப்படவேயில்லை.

1. ஒற்றை ஆட்சியா? அல்லது வேறு விதமான (சமஷ்டி) ஆட்சியா?

2. வடக்குக் கிழக்கு இணைப்பா? இல்லையா? தென்கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனிப் பிராந்திய சபையா?

3. காணி அதிகாரம் மத்திய அரசிடமா? பிராந்திய சபைகளிடமா?

4. பொலீஸ் மற்றும் சட்டம், ஒழுங்கு அதிகாரம் யாரிடம்?

5. நிதி சம்பந்தப்பட்ட விடயங்களில் பிராந்திய சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் என்ன?

இவை ஐந்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்கள். இவை தவிர, தென்னிலங்கை மக்களைப் பொறுத்தளவில் முக்கியமான மற்றைய இரண்டு விடயங்களையும் தெரிவுக்குழு இன்னும் ஆராய்ந்து முடிவெடுக்கவில்லை.

அவை:-

1. நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல்.

2. தேர்தல் சீர்திருத்தங்கள்.

இந்த ஏழு விடயங்களிலும் நிறையக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இந்த விடயங்களில் பொதுக்கருத்து எட்டப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக இல்லை.

இந்நிலையில் தன்னுடைய பாட்டில் அரசமைப்பு சீர்திருத்த நகலை அரசு தயாரிக்கப் போவதாக பீரிஸ் கூறுகின்றார். அதனால் பலன் என்ன? பொதுக்கருத்து எட்டாமல் தன்னுடையபாட்டில் அரசமைப்பு சீர்திருத்த நகலை சட்டமாக்கலாம் என அரசு எண்ணுகின்றதா? அப்படிச் செய்ய முடியும் என்றால் இவ்வளவு காலமும் அரசு அதனைச் செய்யாமல் இழுத்தடித்தது ஏனோ?

தெரிவுக்குழு அமைக்கப்பட்டது முதல், பொதுக்கருத்தின் அடிப்படையில் தீர்வுத் திட்ட சட்ட நகல் ஒன்று தயாரிக்கப்பட்டு விடும் என அரசின் சார்பில் அமைச்சர் பீரிஸ் அடிக்கடி கூறி வந்தார். இதற்கான காலக்கெடுவும் அரசினால் அவ்வப்போது வெளியிடப்பட்டு வந்தது. காலக் கெடுக்கள் கடந்து போயினவே தவிர, உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

இந்த ஆண்டு ஜூனுக்கு முதல் தெரிவுக்குழு பொதுக்கருத்தின் அடிப்படையில் தீர்வுத் திட்ட சட்ட நகலைத் தயாரித்து விடும் என்று கடைசியாகக் கூறப்பட்டது. இப்போது ஜூன் மாதமும் முடிகின்றது.

அடுத்த ஆண்டுக்கான வரவு — செலவுத் திட்டம் இந்த வருடக் கடைசிப் பகுதியில் — அதாவது ஒக்டோபர் அல்லது நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பர் இறுதிவரை விவாதம் நடக்கும். அதற்கு முதல் தீர்வுத் திட்டம் அடங்கிய புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக பீரிஸ் இப்போது கூறுகின்றார். அது சாத்தியப்படுமா?

பொதுக்கருத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படாத அரசமைப்பு சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும், உரிய ஆதரவின்றி அதை நடைமுறைப்படுத்த முடியுமா?

தீர்வுத் திட்டத்தைக் காட்டி தனது பதவிக் காலத்தில் அரைவாசியை அரசு கழித்துவிட்டது.

நிறைவேற்ற முடியாத — பலன் கிடைக்க முடியாத — திட்டங்களை — நடவடிக்கைகளை — அறிவித்து செயற்படுத்த முயற்சிப்பதன் மூலம் மிஞ்சிய காலத்தையும் ஓட்டிவிட அரசு முடிவு செய்துள்ளதா?

இது தான் இன்று எழுந்துள்ள சந்தேகமாகும்.

★ ★ ★

### கூ.ரே விவகாரம்

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே ஏன் கைது செய்யப்பட்டார்? அவரின் கைதின் பின்னணி என்ன?

தெற்கு அரசியல் வட்டாரங்களில் பல்வேறு விதமான ஊகங்களைப் பதிலாகத் தந்து கொண்டிருக்கும் கேள்விகள் இவை.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை படுகொலை செய்யும் சதி ஒன்றில் சிறிசேன கூரே சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் —

அது தொடர்பாகவே அவர் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார் என்றும் அரசு சார்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் சில நீட்டி முழக்கிச் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. அதில் உண்மை உள்ளதா?

கடந்த 16 ஆம் திகதி சிறிசேன கூரே கைது செய்யப்பட்டார். அதற்கு முதல் நாளே கைதுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

இன்ஸ்பெக்டர் ஜெகத் பொன்சேகா தலைமையிலான விசேட பொலீஸ் குழு ஒன்று சிறிசேன கூரேயின் நகர்வுகளை அவதானிப்பதற்காக பணியில் அமர்த்தப்பட்டிருந்தது.

அந்தக் குழு திங்கள் மாலையில் சிறிசேன கூரே தமது வீட்டிலிருப்பதை உறுதிப்

## உள்ளும் புறமும்

குறுமுனி

படுத்தியதை அடுத்து, பிரதி பொலீஸ் மா அதிபரும் இரகசியப் பொலீஸ் பிரிவின் மூத்த அதிகாரியுமான ரி. வி. சுமணசேகரா, சிறிசேன கூரேயைக் கைது செய்து தடுத்து வைக்கும் 'ஒப்பரேஷனை' செயற்படுத்த தொடங்கினார்.

பொலீஸ் அத்தியட்சகர் ஏ. என். சிசர மெண்டிஸ், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பாலித பெரேரா ஆகியோர் தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்துடன் ராஜகிரியவில் உள்ள கூரேயின் வீட்டுக்குள் நுழைந்தனர். அப்போது நேரம் 5.00 மணி.

கூரே, பொலீஸ் அதிகாரிகள் இருவரையும் சிரித்த முகத்துடன் வரவேற்று கதிரையில் இருத்தினார். அதே சமயம் தம்முடன் உரையாடிக் கொண்டிருந்த மற்றைய இருவருடன் சற்று நேரம் தொடர்ந்து உரையாடிய பின்னர் அந்த இருவரையும் அனுப்பிவைத்தார்.

அதன் பின்பு பொலீஸ்அதிகாரிகளுடன் உரையாடத் தொடங்கினார் கூரே.

கூரேயைக் கைது செய்வதற்கான தடுப்புக் காவல் உத்தரவுடன் தாங்கள் வந்திருப்பதாக பொலீஸ்அதிகாரிகள் கூறியதும் கூரேயின் முகம் அதிர்ச்சியடைந்தது.

'நான் என்ன குற்றம் செய்தேன்? என்னை ஏன் கைது செய்ய வேண்டும்?' — என்று கூரே கேள்வி எழுப்பினார்.

தங்களுக்கு அது பற்றி ஒன்றும் தெரியாது என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த உத்தரவின் பேரில் கூரேயைக் கைது செய்ய தாங்கள் வந்திருப்பதாகவும் —

தங்களது சட்டரீதியான கடமைகளைத் தாங்கள் நிறைவேற்ற ஒத்துழைக்கும்படியும் —

பொலீஸ் அதிகாரிகள் கூரேயைக் கோரினர்.

அதனை அடுத்து கூரே தனது சட்டத்தரணி ஹேமந்த வணர்குலசூரியவுச்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். மற்றைய அரசியல்பிரமுகர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

### சட்டத்தரணி விரைந்தார்

இருபத்திஐந்து நிமிடத்தில் சட்டத்தரணி வர்ணகுலசூரிய கூரேயின் வீட்டுக்கு விரைந்து வந்தார்.

கூரே எழுப்பிய கேள்விகளையே சட்டத்தரணிவர்ணகுலசூரியாவும் பொலீஸ் அதிகாரிகளிடம் எழுப்பினார்.

தங்களுக்கு விவரம் ஏதும் தெரியாது எனத்தெரிவித்த பொலீஸ்அதிகாரிகள் தடுப்புக் காவல் உத்தரவைமட்டும் சட்டத்தரணியிடம் காட்டினர்.

இதையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுடன் தொடர்புகொண்டு காரணத்தைக் கேட்டறிய கூரே பக்கத்தில் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் தொலைபேசியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைப் பிடிக்கமுடியவில்லை.

வேறு வழியின்றி கைது செய்யவந்த அதிகாரிகளுடன் போக முடிவுசெய்தார் கூரே.

அவர் மேல் மாடிக்குப் போய் தனது உடைகளை மாற்றிக்கொண்டு வரவும், வேறு உடைகளைத் தம்முடன் எடுத்துவரவும் பொலீஸ் அதிகாரிகள் அனுமதித்தனர்.

### கண் கலங்கிய கூரே

பொலீஸ் கைது, தடுப்புக் காவல் ஆகியவை குறித்து கூரே அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஒருபழுத்த அரசியல்வாதியான அவருக்கு அவை அதிர்ச்சி தருபவையாகவும் இருக்கவில்லை.

ஆனால் தமது குடும்பத்தவர்களுடன் தொடர்பு கொள்ளமுடியாமல் இருக்கும் என்பது கூரேயின் மனதை நெருடவேசெய்தது.

தமது 38 வருட திருமண வாழ்வில் தான் மனைவியை விட்டு ஒரு நாள் இரவு கூட பிரிந்து தங்கியிருக்கவில்லை என கண்கலங்கக்குறிப்பிட்டவாறு, பொலீஸாருடன் புறப்பட்டார் கூரே.

தகவலறிந்து அந்தச்சமயம் அங்கு வந்தசேர்ந்தார் ஐ.தே காவின் எம்.பிக்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான கே. என். சொக்ஸி.

பொலீஸாருடன் அவர்களின் வாகனத்தில் கூரே புறப்பட, சட்டத்தரணிகள் சொக்ஸி, வர்ணகுல சூரிய ஆகியோரின் வாகனங்கள் அதனைத் தொடர்ந்தன.

தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபடி கொழும்பு கெப்பிட்டிபொல மாவத்தையில் உள்ள 'ஸி 38' இலக்க வீட்டில் தடுத்து வைப்பதற்காக கூரே கொண்டு செல்லப்பட்டார்.

### பாழடைந்த வீட்டில்...

ஆனால் அந்த வீட்டின் முன்கதவு பூட்டுப் போட்டு பூட்டப்பட்டிருந்தது. சுமார் ஒரு வருட காலம் பாவிக்காமல் வீடு குப்பையும், தூசியும் கஞ்சலுமாகப் பாழடைந்து கிடந்தது. பூட்டை உடைத்து வீட்டுக்குள் கூரேயைக் கூட்டிச் சென்றனர் பொலீஸார்.

வீட்டுக்கு மின்சார விநியோகம் இருக்கவில்லை. குழாயில் வந்த தண்ணீர் 'பிறவுண்' நிறத்தில் இருந்தது. இருப்பதற்குத் தளபாடங்கள் கூட இருக்கவில்லை.

வீட்டையும் அதன் நிலையையும் கண்டதும் சீறினார் கூரே!

கூரேக்குப் படுப்பதற்காக உடனடியாக ஒரு கட்டிலும், சாய்மனைக் கதிரையும் எங்கிருந்தோ கொண்டுவந்து போடப்பட்டன. அவர் தங்கியிருக்க வேண்டிய அறை கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு, சந்தனக் குச்சுக் கொளுத்தப்பட்டது.

அதேநேரம் ஐ. தே. கவின் எம். பியான சரத் கொங்கஹே மற்றும் சில பிரமுகர்கள் தகவலறிந்து கூரே தடுத்துவைக்கப்பட்ட வீட்டுக்கு வந்தனர். ஆனால் அவர்கள் உள்ளே செல்ல

(XII ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்கும்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமரில் இழப்பு; வீதமும் குறைவு.

எனவே போர்த்தந்திர ரீதியில் புலிகளின் கெரில்லாத் திறன் வளர்முகமாக இருப்பதையும்—

ஒவ்வோர் சண்டை அனுபவத்திலிருந்தும் பாடம் கற்றுக் கொண்டு புதிய சண்டைகளுக்குத் திட்டமிடும் ஆற்றலைப் புலிகள் பெருக்கிக் கொள்வதையும்—

அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக கொழும்பு இராணுவ விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

★ ★ ★

### குற்றச்சாட்டும் பதில் குற்றச்சாட்டும்

புலிகளின் தாண்டிக்குளம் தாக்குதலை அடுத்து — இரண்டு நாள் கழித்து— தாக்குதல் நடந்த பிரதேசத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் சகிதம் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அதன் பின்னர் வவுனியாவில் உள்ள எட்டாவது பிரிகேட்டின் தலைமையகத்தில் உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு ஒன்றை ஜெனரல் ரத்வத்தை கூட்டினார். புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல் குறித்தும் அத்தகைய தாக்குதல்களை முறியடிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல் பற்றி முன்னரே எச்சரிக்கைத் தகவல்களை வெளியிடத் தவறியதற்தாக இராணுவ உளவுப் பிரிவின் மீது மூத்த இராணுவ அதிகாரிகள் இருவர் இந்த மாநாட்டில் வைத்து குற்றம் சுமத்தினர்.

ஆனால் உளவுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் டி. எஸ் தளுவத்தையிடம் தனிப்பட்ட முறையில் வேறு விதமான தகவலைத் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள மூத்த இராணுவ அதிகாரி ஒருவரிடம் தற்போது படையினரின் காவலில் இருக்கும் புலிச் சந்தேக நபர் ஒருவரைத் தாம் ஆஜர் செய்ததாகவும்—

அந்த நபர் மூலம், தாண்டிக்குளம் பகுதி மீது ஊடறுப்புத் தாக்குதல் ஒன்று இடம்பெறவிருப்பது பற்றிய தகவல் பெறப்பட்டிருக்கின்றது என்று அந்த அதிகாரியிடம் தாம் கூறியதாகவும்—

ஆனால் அது குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளாத அந்த அதிகாரி, எந்த ஊடறுப்பு முயற்சிக்கும் பதிலடி கொடுக்கப்படும் என்ற சாரப்பட பதிலளித்துவிட்டு, தனது எச்சரிக்கையைக் கவனத்தில் எடுக்காது விட்டுவிட்டார் எனவும்—

அந்த அதிகாரியே இப்போது உயர்மட்ட மாநாட்டில் வைத்து எச்சரிக்கைத் தகவல் தராததற்காக உளவுப் பிரிவு மீது குற்றம் சுமத்துகின்றார் என்றும்—

அந்த உளவுப் பிரிவின் மூத்த அதிகாரி இராணுவத் தளபதியிடம் கூறியிருக்கின்றார்.

எச்சரிக்கைத் தகவல் கிடைத்ததோ இல்லையோ, புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலுக்கு உடனடியாகப் பதிலடி கொடுக்க முடியாமல் போய்விட்டது மட்டும் உண்மை, இதற்காக இருநூறுக்கும் அதிக படையினரின் உயிர்களையும், படுகாயங்களால் ஐந்நூறுக்கும் அதிகமான படையினர் செயல் இழந்து போனதையும், இருபது கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இராணுவத் தளபாட இழப்பையும் அரசு விலையாகக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியாகும் காலக்....

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதிக்கப்படவில்லை. கூரேயுடன் வந்திருந்த சட்டத்தரணிகளும் வீட்டிலிருந்து வெளியேறுமாறு விநயமாகக் கேட்கப்பட்டனர். கூரேயிடமிருந்த செலூலர் போனும் அகற்றப்பட்டது.

### தொடர்பு துண்டிப்பு


அன்றிரவு 10 மணியுடன் வெளியுலகத் தொடர்பை இழந்தார் கூரே.

எனினும் அடுத்து வந்த நாள்களிலாவது அவரை அவரது குடும்ப உறுப்பினர்கள் சந்திக்க அனுமதிக்கும்படி பல முனைகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இது விடயமாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொள்ள முயன்றார். வேறு பல முனைகளிலும் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் பலன் பூஜ்ஜியம்தான்.

எனினும் பகீரதப் பிரயத்தனத்துக்குப் பின்னர் —கூரே கைதாகி நான்கு நாள்கள் கழித்து — அவரை அவரது குடும்பத்தவர்கள் சந்திக்க அனுமதிக்கப்பட்டது.

கூரேயைக் குடும்பத்தவர்கள் சந்தித்த அதே நேரம், ஜனாதிபதி சந்திரிகாவை கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது தொடர்பாகக் கூரே விசாரிக்கப்படுகின்றார் என்ற சாரப்பட அரச தகவல் தொடர்புச் சாதனங்கள்



கூரேயும் மனைவியும்
38 வருடங்கள் பிரியாத தம்பதியர்.

செய்திகள் வெளியிட்டன.

ஜனாதிபதியைக் கொல்வதற்கான சதி என்ற விவகாரம் தொடர்பாக எந்த ஒரு கேள்வியும் கூரேயிடம் கேட்கப்படவில்லை என்று இந்த வார முற்பகுதியில் கூரேயின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அத்தகைய ஒரு விவகாரத்தில் கூரேயைத் தொடர்புபடுத்தி அவரது பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் செய்திகள் வெளியிட்டது தொடர்பாக அரச தகவல் தொடர்பு சாதனங்கள் மீது வழக்குத் தொடரப்படும் என கூரேயின் சட்டத்தரணிகள் கூறியிருக்கின்றார்கள்.

### நீதிமன்றின் அனுமதி

இதற்கிடையில் —

கூரே சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக —

தடுப்புக் காவலில் உள்ள கூரேயை அவரது சட்டத்தரணிகளும் மருத்துவர்களும் அவ்வப்போது சந்திப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கின்றது.

இது கூரேயை வில்லங்கத்தில் சிக்க வைக்கும் அரசுத் தரப்பு முயற்சிக்கு ஒரு பின்னடைவே என்று கூறப்படுகின்றது.

கூரே தொடர்பாக அரசாங்கத் தரப்பு எதிர்காலததில் அமைக்கக் கூடிய வியூகங்கள் பற்றிய தகவல்கள், கூரேயைச் சந்திக்கப் போகும் அவரது சட்டத்தரணிகள் மூலம் அவ்வப்போது அம்பலப்படுத்தப்படும் என்றும்—

அது அரசுத் தரப்புக்கு நெருக்கடியைத் தரும் என்றும் கருதப்படுகின்றது.

இதனிடையே —

கூரே தலைவராக இருக்கும் பிரேமதாஸா கேந்திர நிலையம் ஏற்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் 73 ஆவது பிறந்த தின நிகழ்ச்சி நாளை பெருத்த எடுப்பில் — கொழும்பு ககததாஸா உள்ளக அரங்கில் நடைபெறப் போகின்றது.

சந்தர்ப்பவசமாக நாளைய தினம்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் தனது 52 ஆவது வயதைக் கொண்டாடுகின்றார்.

### பிறந்தநாள் கொண்டாட்டம்

பிரேமதாஸா பிறந்த தின நிகழ்வில் பங்குபற்ற முதலில் இணங்கியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கூரே கைது மூலம் அரசு வெளியிட்ட 'சமிக்ஞைகளை' புரிந்து கொண்டு அக்கூட்டத்தில் பங்குபற்றுவதிலிருந்து பின்வாங்கி விட்டார்.

அதுமட்டுமல்லாமல், கூரேயுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம்பீயான சரத் கொங்கஹகே உட்பட ஐவர் ஐ. தே. கவிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இது, அரசு விரும்பாத உறவுகளைப் பேணுவதற்கு ரணில் தயாரில்லை என்பதையும் —

தன்னை 'மிஸ்டர் கிளீன்' எனக்காட்ட ரணில் முயற்சிப்பதையுமே காட்டுகின்றது. ★

# பிரிட்டனிடமிருந்து....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஹொங்கொங் நிலைமையை அமெரிக்கா தொடர்ந்து அவதானித்து வரும் என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அறிவித்துள்ளார்.

### தைவானைஇணைக்க முதற் படியா?

தைவானை மீண்டும் சீனாவுடன் இணைக்கும் முதல் நடவடிக்கை என்று ஹொங்கொங் இணைப்புக் குறித்து சீனத் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

முன்னர் போர்மோஸா என்று அழைக்கப்பட்ட தைவான் 1949 சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் போது சீனாவில் இருந்து பிரிந்தது. அமெரிக்க ஆதரவுடன் தைவான் இன்னும் தனி நாடாக இருந்து வருகிறது.

### ஆன் சொன் சான்

முன்னொரு காலத்தில் ''கடற் கொள்ளையரின் தீவு'' என்றும் ''போதைப் பொருள் கடத்தல் காரர்களின் மையம்'' என்றும் அழைக்கப்பட்டு வந்த ஹொங்கொங் இன்று சகல துறைகளிலும் முன்னேறி இருப்பதற்கு ஹொங்கொங்கின் பிரதம செயலாளர் ஆன் சொன் சான் .என்பவரும் ஒரு முக்கியகாரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீன ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஹொங்கொங்கின் புதிய நிர்வாகி சி. எச். துங், ஆன் சொன் சானை ஜூலை 1 ஆம் திகதிக்குப் பின்னும் தொடர்ந்து பதவியில் இருக்கும் படி கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய நிர்வாக முறை தொடர்வதற்கான அறிகுறியாக இதனை அவதானிகள் கருதுகின்றனர்.

### ஒரு நாடு 2 நிர்வாகங்கள்

ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்டாலும் தற்போதுள்ள நடை முறைகள் 2047 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் திறமைமிக்க பிரிட்டிஷ் அதிகாரிகளை தொடர்ந்து பதவியில் வைத்திருப்பது மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற முடியும் என்று ஹொங்கொங்கின் புதிய நிர்வாக அமைப்பு கருதுகிறது. அதாவது ஜூலை முதலாம் திகதி ஹொங்கொங் சீனாவுடன் இணைந்து கொண்டாலும் அடுத்த 50 வருட காலத்துக்கு சீனாவிலும் ஹொங்கொங்கிலும் வேறுபட்டஇரு நிர்வாகங்கள் இயங்கப் போகின்றன. கால மாற்றத்தில் இது எவ்வளவு காலத்துக்குச் சாத்தியமாகும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ★

# விரைவில் 3 ஆம்....

(IV ஆம் பக்கத் தொடர்)
டிருக்கின்றது.

இதற்குத் தகுந்தால் போல தெற்கிலிருக்கும் பனி மலையில் அல்லது துருவத்தில் தூசி படிந்து கசிந்து கொண்டிருக்கின்றது. ஓசோன் மண்டலத்தில் இரண்டு லட்சத்து 16 ஆயிரம் ஓட்டைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த ஓட்டைகள் வழியாக சூரியனின் ஒளிக்கதிர்கள் பனி மலைகளில் பட்டு, அவை கரைந்து, ஏழு கடல்கள் பத்துக்கடலாக மாறும். அப்போது பூமி பாரந்தாங்க முடியாமல் அதன் அச்சு தற்போதைய 23. 5 பாகையிலிருந்து 90 பாகைக்கு மாறி சமபரப்பிற்கு வரும் வாய்ப்புள்ளது,

04 - 07 - 1776 இல் கடக லக்கினத்தில் அமெரிக்கா சுதந்திரப் பிரகடனம் செய்தது. சென்ற இரண்டு உலக யுத்தங்களையும் அமெரிக்காவின் ஜாதகத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது மூன்றாவது உலக யுத்த சூழ்நிலையும் ஒன்றாகவே இருப்பது புலனாகுகின்றது. அமெரிக்கா இல்லாமல் யுத்தம் இல்லை.

25 - 07 - 2032 முதல் குரு திசை நடக்கிறது. அதற்குப் பிறகுதான் நல்லகாலம். அப்போது அதர்மம் அழிந்து தர்மம் மேலோங்கி நிற்கும்.

—இப்படிக் கூறுகின்றார் சோதிடர் கருப்பையாத் தேவர்.

இது உண்மையானால் உலகில் நீதி பிறக்க நாம் இன்னும் முப்பத்தைந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? ஐயோ! !

# பிரமிக்க வைக்கும்.....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)
பல்கலைக் கழகத்தை சேர்ந்த லூயிஸ் அல்வறெஸ் என்பவர் இப் பிரமிட்டின் உள்ளடக்கங்களை கண்டு பிடிக்க X-ray போன்ற கதிர்களைப் பயன்படுத்தினார். எனினும் புதிதாகப் புதிர்கள் எதுவும் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

பிரமிட்டின் உள்ளே புகுவதற்கான நுழைவாயில் தரையில் இருந்து 55 அடி உயரத்தில் திறந்து மூடும் சுண்ணாம்புக்கற் கதவு ஒன்றினால் பாதுகாக்கப்பட்டு உள்ளது. உள்ளே நுழைந்து சுரங்கவழி போன்ற பாதையின் ஊடே சென்றால் அரசனதும் அரசியினதும் தனித்தனியான கூடங்களை அடையலாம். இவற்றைவிட வேறு கூடங்கள், சுரங்க வழிகள், களஞ்சியங்கள் இந்தக் கற்திண்ம அமைப்பினுள் இருக்கின்றனவா என்பது இன்னமும் தெளிவுபடுத்தப் படவில்லை.

இதன் தொழில் நுட்பங்களை பார்க்கும்போது இப் பிரமாண்டமான அமைப்பு, தெளிவான கேத்திரகணித விதிகளுக்கு அமைய சரிவரக் கட்டப்பட்டிருப்பது புலனாகிறது. இந்தப்பாரிய கட்டமைப்பின் தென்கிழக்கு —வட மேற்கு மூலை விளிம்புகளின் நீள(உயர)வித்தியாசம் அரை அங்குலம் கூட இருக்காது என்பதும், இதன் ஒவ்வாத இருபக்கங்களுக்கிடேயேயான நீள வித்தியாசம் 8 அங்குலங்கள் மட்டுமே என்பதும் அன்றைய கட்டுமானப் பணிகளின் நுட்பத்தைக் காட்டுகின்றன. இத்தனை பாரிய கற்கள், அதுவும் இதன் உச்சிக் கல், எல்லாம் எவ்வாறு மிகத்துல்லியமாக அந்தஅந்த நிலைக்கு உயர்த்தப்பட்டன என்பதும் இன்றும் புரியாத புதிராகவே உள்ளது.

கடதாசியில் கூட ஒரு கையடக்கமான பிரமிட்டை இவ்வளவு துல்லியமாகச் செய்துவிடல் சாத்தியமாகுமா என சந்தேகிக்க வேண்டி உள்ளது. மேலும் இப்பிரமாண்டமான கற்கள் வெவ்வேறு படி நிலைகளுக்கு ஏற்ப எப்படி இவ்வளவு துல்லியமாக வெட்டப்பட்டன? என்ன கருவிகள் அக்காலங்களில் பயன் படுத்தப்பட்டன?— என்றெல்லாம் கேள்விகள் எழாமல் இல்லை.

கல் அடுக்குகளின் இடுக்குகளில் பூச்சி, பூரான் புகுந்து தொல்லை கொடுக்கும் என்ற அச்சம் கூட எழத் தேவை இல்லை. ஒரு காகிதமோ, சவர அலகோ, குண்டூசியோ கூட இடையே புகாத அளவுக்கு அவை செவ்வனே பொருந்தி உள்ளன.

இன்று நாம் காணும், மனிதனின் — பிரமாண்டமானதும் — ஆதியானதுமான இப் படைப்பே உலகினில் இறுதி வரையும் நிலைக்கவும் போகும் மனிதப்படைப்பு எனலாம். ஆனால் இதன் புரியாத புதிர்களை இதைப் பற்றி எழும் ஆயிரம் ஆயிரம் கேள்விகளை மனிதனால் விடைகண்டு விடுவிக்கவே முடியுமா?

- நீரு -

# சிந்தித்தே செயற்பட...

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிறார். ''அது சரி! இருந்த இடத்திலேயே விரலை அசைத்தால் எதுவும் நடக்காதா? என்பது தான் என் வாதம்'' —இது அரசின் கூற்று.

''அரசே! சில நாள் அவகாசம் கொடுங்கள். நான் விளக்கம் கொடுக்கிறேன்'' என்று மந்திரி கூறியதும் அரசனும் சம்மதிக்கவே சபை கலைந்தது.

மறுநாள் அரசர் தன் பரிவாரங்களுடனும் ராணியுடனும் இளவரசனுடனும் சுற்றுலா புறப்பட்டார். மந்திரியும் போனார். வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டி வந்தது. அரசர், ராணி, மந்திரி, இளவரசன் ஆகியோர் படகில் புறப்பட்டனர். மந்திரி ஒரு யுக்தி செய்தார். படகில் இருந்த பாறாங்கல்லைக் கடலில் தள்ளி விட்டு ''அரசே! இளவரசர் தண்ணீருக்குள் வீழ்ந்து விட்டார்'' என்று சத்தம் போட்டார். அது கேட்ட அரசன் உடனே தண்ணீரில் பாய்ந்தார். எங்கு தேடியும் இளவரசன் கிடைக்கவில்லை.

அதனால் மந்திரி ஒரு தடியைக் கொடுத்து ''அரசே! படகில் ஏறுங்கள். இளவரசர் இங்கே இருக்கின்றார்'' என்றார்.

அரசருக்கு வந்ததே கோபம் ''ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார். அதற்கு மந்திரி, ''அரசே! இளவரசன் தண்ணீரில் வீழ்ந்து விட்டார் என்றால் நீங்கள் ஏன் தண்ணீருக்குள் பாய்ந்தீர்கள்? உங்களுக்குத் தான் நிறைய ஏவலாட்கள் இருக்கின்றார்களே? விரலை அசைத்தால் காரியம் நடக்காதா?'' என்றார்.

''அது...¡'' என்று இழுத்தார் அரசர்'

''அது உங்கள் மகன்மேல் நீங்கள் வைத்த பாசம். உடனே சற்றும் சிந்திக்காமல் தண்ணீருக்குள் பாய்ந்து விட்டீர்கள். அதே போலத் தான் கடவுளும். தன் விரலை அசைக்காமல் தானே நேரில் வந்து பக்தர்களுக்கு அருள் புரிகின்றார். இப்போது சந்தேகம் தீர்ந்ததா?''— என்றார் மந்திரி.

அது கேட்ட அரசர் வெட்கித் தலை குனிந்தார். அன்று முதல் அரசர் சிந்தித்துப் பார்த்தே எதையும் செய்கும் பழக்கத்தை மேற்கொண்டார்.

ஆகவே நாமும் எதையும் சித்தித்தே செய்யத்தொடங்க வேண்டும். ★

# குழந்தைகள்..

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளைகள் மீது வைத்துள்ள அதீத பாசத்தினால் இந்த முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை நினைவில் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விசித்திரமான போக்கை சீரியஸாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட வயதில் பிள்ளைகளின் ஒரு மாதிரியான போக்கு சாதாரணமானது என்பதைப் பெற்றோர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

மனத்தாலும் உடலாலும் முழுமையான வளர்ச்சி பெற்ற நபருக்கு தர்மசங்கடத்தால் ஏற்படும் மன வலியைவிட, இரண்டுங்கெட்டான் வயதினரான நபருக்கு ஏற்படும் மனவலி அதிக நோவு கொடுக்கக் கூடியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தன் பிள்ளையின் விசித்திரமான போக்கினால் தமக்கு தர்மசங்கடம் ஏற்படுகிறது என்று பெற்றோர்கள் பிள்ளையைக் குற்றம் சாட்டுவது, பிள்ளையை அப்படியே மனத்தளவில் சுக்கு நூறாக்கி விடக் கூடியது.

இரண்டுங்கெட்டான் வயதினர் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்பதைப் பெற்றோர் நினைவிற் கொள்ள வேண்டும். தம் பிள்ளைகள் ஓரளவு சுதந்திரமாக செயல்படுவதைப் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும். ஒரேயடியாகக் குழந்தைகளைக் கண்டித்து, 'தண்டித்து',போட்டு அடக்கி வைப்பது ஆபத்தில் முடியும். எனவே இந்த விடயங்களில் கண்டும் காணாமல், அவர்களைக் கவனிப்பதையே அவர்களுக்குத் தெரியாமல் ஒருவித 'சர்க்கஸ்' வித்தையாக நடந்து கொள்வது நல்லது.

மூலம்:மங்கையர் மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org